விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 17 ஞாயிற்றுக்கிழமை (02.09.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 258

ராம்கோ RAMCO MADRAS CEMENTS LTD RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# யுத்த காலத்தில் ஆயுதங்களை புலிகள் இலகுவாகப் பெற்றனர்

## சவேந்திர சில்வா தெரிவிப்பு



(நியூயோர்க்)

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் மிகச் சுலபமாக ஆயுதங்களைக் கொள்வனவு செய்ததாக ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கை பிரதி வதிவிடப்பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். வெளிநாடுகளிடமிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் மிகவும் எளிதில் ஆயுதங்களை கொள்வனவு செய்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## குற்றச் செயல்களுக்கு இலங்கையில் தண்டனையில்லை

(ஜெனிவா)

இலங்கையில் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாத நிலைமை நீடித்து வருவதாக சர்வதேச மன்னிப்புச் சபை குற்றம் சுமத்தியுள்ளது.

பாரிய மனிதவுரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்படாமையின் மூலம் குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படாத நிலைமை நீடிப்பதாக குறிப்பிட்டுள்ளது.

பலவந்தமான கடத்தல்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட நிலையில் கொலை செய்யப்படுதல் போன்ற சம்பவங்கள் யுத்தம் முடிபடைந்து மூன்றாண்டுகள் கடந்துள்ள நிலையிலும் நீடித்து வருவதாக சுட்டிக்காட்டியுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் இந்திய விஜயத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்க முயற்சி!

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 21 ஆம் திகதி இந்தியாவிற்கு செல்லவுள்ளார். அவரின் இந்திய வருகையை எதிர்த்து தமிழகத்தில் பல்வேறு அமைப்புகள் சார்பில் போராட்டம் நடத்தப்படவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் தமிழர்கள் படுகொலைக்கு காரணமான மகிந்த ராஜபக்ஷவிற்கு தமிழ்நாட்டில் கடும் எதிர்ப்புள்ளது. ஜனாதிபதி மற்றும் இலங்கையைச் சேர்ந்த சிங்களத் தலைவர்கள் இந்தியாவுக்கு வரும் போதெல்லாம் தமிழக அரசியல் கட்சிகள் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்திவருகின்றன.

மேலும் தமிழகம் உள்ளிட்ட இந்தியாவின் எந்தப்பகுதியிலும் (19ஆம் பக்கம் பார்க்க)

## கடத்தலில் ஈடுபட்ட தம்பதியர் கைது

(யாழ்ப்பாணம்)

தாயையும் அவரது இரண்டு வயதுப் பிள்ளையையும் கடத்திய தம்பதியரை யாழ்ப்பாணப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, யாழ்.சென்.பற்றிக்ஸ் வீதியில் வாழும் இரண்டு குடும்பங்களுக்கிடையே இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களைத் தொடர்ந்து ஒரு குடும்பம் மற்றைய குடும்பத்திற்கு 80 ஆயிரம் (02ஆம் பக்கம் பார்க்க)

## மேலாதிக்க சக்திகள் எதுவும் இலங்கையை அசைக்க முடியாது

### ஈரான் ஆன்மிகத் தலைவர் தெரிவிப்பு

(தெஹறான்)

மேலாதிக்க சக்திகளை எதிர்த்து நிற்க முடியும் என்பதை ஈரானும் இலங்கையும் நிரூபித்துள்ளதாக ஈரானிய ஆன்மிகத் தலைவர் ஆயதுல்லா அலி கமேனி கூறியுள்ளார்.

ஈரானிய தலைநகர் தெஹறானில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்த போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். தாம் தோற்கடிக்கப்பட முடியாதவை எனக் காட்டுவதற்கு மேலாதிக்க சக்திகள் முனைந்தன. ஆனால் அவற்றைஎதிர்த்து நிற்பது சாத்தியம் என்பதை ஈரானும் இலங்கையும் நிரூபித்துள்ளன என ஈரானிய ஆன்மிகத் தலைவர் கமேனி கூறினார்.

சர்வதேச அரங்கில் வலுவாக இருப்பதற்கும் பரந்த நலன் (02ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை இராணுவ அதிகாரிகளை உடனே திருப்பியனுப்ப நடவடிக்கை

### இந்திய அமைச்சர் உறுதியளிப்பு

(சென்னை)

தமிழ் நாட்டில் பயிற்சி பெறும் இலங்கை இராணுவ அதிகாரிகளை விரைவில் திருப்பி அனுப்ப உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இனி இது போல் நடைபெறாமல் இருக்கவும் உரிய ஏற்பாடுகள் செய்யப்படும். இவ்வாறு இந்திய மத்திய கப்பல் துறை அமைச்சர் ஜி.கே.வாசன் தெரிவித்தார்.

வெலிங்டன் இராணுவ மையத்தில் பயிற்சி பெறும் இலங்கை இராணுவ அதிகாரிகளை திருப்பி அனுப்ப வேண்டுமென்று அனைத்துக் கட்சி தலைவர்களும் வற்புறுத்தி வருகிறார்கள்.

மத்திய அரசின் இந்த நடவடிக்கைக்கு எதிராக போராட்டங்களும் நடந்து வருகின்றன. இலங்கை இராணுவ அதிகாரிகள் திருப்பி அனுப்பப்படு (02ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப் பிரதமரை சந்திக்க ஜனாதிபதிக்கு நேரம் ஒதுக்கவில்லை

### நேற்று அதிகாலை நாடு திரும்பினார்

(கொழும்பு)

அணிசேரா நாடுகளின் தலைவர்களின் இரண்டு நாள் உச்சி மாநாட்டில் பங்கேற்கச் சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அங்கு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை தனிப்படச் சந்தித்து பேசமுடியாத நிலையில் நாடு திரும்பியுள்ளார்.

இரண்டுநாள் உச்சி மாநாட்டுக்காக ஈரான் சென்றிருந்த மகிந்த ராஜபக்ஷ தனது பயணத்தை முடித்துக்கொண்டு நேற்று அதிகாலை கொழும்பு திரும்பினார்.

ஈரானில் தங்கியிருந்தபோது, அவர் பாகிஸ்தான் அதிபர் ஆசிவ் அலி சர்தாரி, பங்களாதேஷ் பிரதமர் சேக் (02ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இந்தியப் பிரதமரை...

ஹசீனா, ஈரானிய அதிபர் முகமட் அகமடி நிஜாத், லெபனானிய அதிபர் ஜெனரல் மிசெல் சுலைமான், ஈரானிய ஆன்மிகத் தலைவர் ஆயதுல்லா அலி கொமெனி ஆகியோரை தனிப்படச் சந்தித்து பேசியிருந்தார்.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து பேசுவதற்கு அவர் விருப்பம் வெளியிட்டிருந்த போதிலும், புதுடில்லி அதற்காக நேரத்தை ஒதுக்கிக் கொடுக்கவில்லையென்று தெரியவருகிறது.

அண்மைக்காலமாக ஐ.நா. பொதுச் சபைக் கூட்டம், பொதுநலவாய மாநாடு, சார்க் போன்ற அனைத்துலக மாநாடுகளின் போதே இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை இலங்கை ஜனாதிபதி சந்தித்து பேசிவந்தார்.

எனினும் இவர்கள் இருவரும் அணிசேரா நாடுகளின் மாநாட்டில் ஒன்றாக பங்கேற்ற போதும், தனியாகச் சந்தித்துக்கொள்ளவில்லை.

அதேவேளை, அனைத்துலக மாநாடு ஒன்றில் இவர்கள் இருவரும் தனிப்படச் சந்தித்துக் கொள்ளாத முதல் சந்தர்ப்பமாக இது கருதப்படுகிறது.

அத்துடன், அணிசேரா மாநாட்டில் கலந்து கொண்ட ஐ.நா. பொதுச் செயலளர் பான் கீ மூனை, மகிந்த ராஜபக்ஷ சந்திக்கவுள்ளதாக சில ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்த போதிலும், பான் கீ மூனையும் மகிந்த ராஜபக்ஷ சந்திக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ-8)


'EASY ENGLISH'
ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்
- விபரங்கள் பெற: 773 212 711 (334)

வீடு விற்பனைக்கு
இளவாலை, சிறுவிளானில் சகல வசதிகளுடன் கூடிய வீடு 4 பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
0776048879 .


# தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகள் தீவுப் பகுதிக்கு படையெடுப்பு

## வீதிகள் சீரின்மையால் பெரும் அவலம்

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகள் பெருமளவானோர் நேற்றும், நேற்று முன் தினமும் நயினாதீவுக்கு சென்றுள்ளனர்.

இதுவரை காலமும் இல்லாத அளவுக்கு பெருமளவானோர் சென்றதாகக் கூறப்பட்டது.

ஆயிரக்கணக்கான வாகனங்களில் அவர்கள் அங்கு சென்றதால் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

இதேவேளை யாழ்ப்பாணத்திலிருந்து புங்குடுதீவுக்கு செல்லும் பிரதான வீதி குன்றும் குழியுமாக காணப்படுவதால் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டதாக தென்னிலங்கை சுற்றுலாப் பயணி ஒருவர் தெரிவித்தார்.

தீவுப் பகுதிக்குச் செல்லும் பிரதான வீதியான பண்ணை வீதியில் ஒரு கிலோ மீற்றர் மட்டுமே சீராக திருத்தப்பட்டுள்ளது.

ஏனைய பகுதிகள் கிழமைக்கு ஒரு தடவை என்ற வீதத்தில் தார் ஊற்றப்பட்டு செப்பனிடப்பட்டு வருகிறது.

இந்நிலையில் அதிகளவான வாகனங்கள் பயணிப்பதால் அவை உடனடியாகவே சேதமடைகின்றது.

இவ் வீதிகளை அகலமாக்கி புனரமைப்பது என திட்டமிடப்பட்ட போதிலும் ஒரு கிலோ மீற்றருடன் மட்டுப்படுத்தப்பட்டு விட்டது.

நேற்று வேலணை - புங்குடுதீவு பால வீதியில் வாகன நெரிசல் ஏற்பட்டு பல மணி நேரம் போக்குவரத்தும் தடைப்பட்டிருந்தது.

இவ் வீதியின் இரு மருங்கும் சேதமாகக் காணப்படுவதால் வாகனங்கள் சமநேரத்தில் எதிரெதிரே பயணிக்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

இந்நிலைமைகளை கருத்தில் கொண்டும் சுற்றுலாப் பயணிகளை கவருவதற்கும் யாழ்ப்பாணம் தொடக்கம் புங்குடுதீவு வரையான பிரதான வீதியை முழுமையாக புனரமைப்பு செய்ய வேண்டும் என கேட்கப்பட்டுள்ளது. (எ-1)

# இலங்கை...

வார்கள் என்று மத்திய அமைச்சர் நாராயணசாமி கூறியுள்ளார்.

இந்தநிலையில் மத்திய கப்பல்துறை அமைச்சர் ஜி.கே.வாசன் நேற்று சென்னையில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது:

தமிழ்நாட்டில் பயிற்சி பெறும் இலங்கை இராணுவ அதிகாரிகளை விரைவில் திருப்பி அனுப்ப உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இனி இதுபோல் நடைபெறாமல் இருக்கவும் உரிய ஏற்பாடுகள் செய்யப்படும்.

மத்திய இராணுவ மந்திரியை அமைச்சரை டில்லியில் சந்தித்து இது குறித்து விளக்கமாக எடுத்துக் கூறுவோம்.

இலங்கை இராணுவ அதிகாரிகளை திருப்பி அனுப்ப வேண்டும் என்பதில் தமிழக காங்கிரஸும் உறுதியாகவுள்ளது. இவ்வாறு ஜி.கே.வாசன் கூறினார். (எ-8)

# மேலாதிக்க...

களைபாதுகாப்பதற்கும் முஸ்லிம் நாடுகளுக்கிடையில் நெருங்கிய நட்புறவு வளர்க்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

பலஸ்தீன நாட்டிற்கு இலங்கை அளிக்கும் ஆதரவுக்கும் இலங்கை முஸ்லிம் சமூகத்தை மதிப்பதற்கும் இலங்கையை அவர் பாராட்டினார். ஈரானுடன் உறவுகளை விருத்தி செய்வதில் இலங்கை ஜனாதிபதி காட்டும் ஆர்வத்தையும் அவர் வரவேற்றார்.

அணி சேரா மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில் ஈரானிய ஆன்மிகத் தலைவர் முன்வைத்த அணுவாயுதமற்ற மத்திய கிழக்கு யோசனை மற்றும் பலஸ்தீனம் தொடர்பாக அவர் கொண்டுள்ள நிலைப்பாட்டை இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பாராட்டினார்.

பயங்கரவாதத்திற்கு எதிரான இலங்கையின் போர் மற்றும் இலங்கையிலுள்ள முஸ்லிம்களின் உரிமைகளைப் பேணுவதற்கான முயற்சிகள் ஆகியவற்றை ஜனாதிபதி விளக் கினார்.

உங்கள் உதவிகள் மூலம் பல பிரச்சினைகளை நாம் வெற்றி கொள்ள முடியும் என்பதை உறுதிப்படுத்தியுள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (எ-8)

# கடத்தலில்...

ரூபாய் பணத்தை கொடுக்க வேண்டியிருந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து பணம் உரியவர்களால் கேட்கப்பட்டபோது மற்றைய குடும்பத்தினரால் அப் பணம் திருப்பிக் கொடுக்கப்படவில்லை.

இதனால் ஆத்திரம் அடைந்த தம்பதியினர் தாயும், பிள்ளையும் தனிமையாக வீட்டிலிருந்த வேளையில் தந்திரமாக அவர்களை கடத்திச் சென்று மறைத்து வைத்துள்ளனர்.

வீட்டுக்கு வந்த கணவன், மனைவி மற்றும்பிள்ளையை வீட்டில்காணாததைத்தொடர்ந்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை செய்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் மேற் கொண்ட விசாரணைகளையடுத்து கடத்தப்பட்ட தாயும் பிள்ளையும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதுடன் கடத்திய தம்பதியர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட தம்பதியரிடம் தற்போது விசாரணைகள் இடம்பெற்று வருகிறது. (எ-8)


கையடக்க தொலைபேசி திருத்தும் பாட நெறி
Mobile Phone Repairing Course
கைநிறைய சம்பாதிக்க சரியான வழி
SEPTEMBER 07 காலை 9.00 முதல்
07,08,09,10 நான்கு நாள்கள்
புதிய பரிமாணத்துடன் 21 ஆவது பிரிவு ஆரம்பம்
உங்கள் எதிர்காலத்திற்கு மாதம் 100 000 க்கு மேல் வருமானம் பெறும் நிரந்தர தொழில்வாய்ப்பு
கையடக்க தொலைபேசி திருத்தும் துறையில் 6 வருட அனுபவம் கடந்த வருடத்தில் 500 க்கு மேற்பட்ட மாணவர்களை உருவாக்கிய பெருமை தொடர்ந்தும் முதல் தர ஆசிரியராக
No.1 ஆசிரியர் Ganesh . K
நீங்கள் பாடசாலை கல்வியை இடை நிறுத்தியவரா ? சுயதொழில் ஒன்றை செய்ய எதிர்பார்ப்பவரா ? வேலை செய்து கொண்டு பகுதி நேரமாக வருமானம் ஈட்ட வேண்டுமா ? அப்படி என்றால் இப்பாட நெறியை நிறைவு செய்த பின் மிக குறைந்த முதலீட்டில் சுயமாக தொழில் ஒன்றை ஆரம்பிக்கலாம்.
* Housing கழட்டுதல்
* IC கழட்டுதல்
* IC மாற்றுதல்
* IC களை கண்டறிதல்
* IC களில் வரும் பிரச்சினைகளை கண்டறிதல்
* போனில் வரும் பிரச்சினைகளை கண்டறிதல்
* உதிரிப்பாகங்களை பரிசோதித்தல்
* உதிரிப்பாகங்களை மாற்றுதல்
* சைனிஸ் டிஸ்பிளே ஒட்டுதல் / கழட்டுதல்
* Hot airgun பாவிக்கும் முறை
* Resetting பண்ணும் முறை
* ஆரம்பம் முதல் சரளமாக கற்பித்தல்
* உங்கள் அனைத்துக் கேள்விகளுக்கு சரியான பதில் பதிவுகளுக்கு விரையுங்கள்



SUN British Business Management College
No.26, Station Road, Vavuniya. T.P.: 075 0650084 (சு/922)

af ALLIANCE FRANÇAISE DE JAFFNA
The Only Official French Language Center in Jaffna
Learn French the French Way
French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட, சர்வதேச தரம் வாய்ந்த, யாழ்ப்பாணத்திலுள்ள ஒரே ஒரு பிரெஞ்சு மொழிக் கல்வி நிறுவனமாகிய Alliance Francaise de Jaffna ஊடாக பிரெஞ்சு மொழி வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. France மற்றும் பிரெஞ்சு பேசப்படும் நாடுகளுக்கு செல்வோர் மற்றும் மொழி ஆர்வமுள்ள எவரும் கற்றுக்கொள்ளலாம்.
வகுப்புக்கள்: சனி,ஞாயிறுகளில்
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (328)
61,Kachcheri-Nallur Road, Jaffna. Phone: 021 2228093
E.mail: alliancejaffna@yahoo.com
(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில் அமைந்துள்ள மாடி கட்டிடம்)
மேலதிக விபரங்களை நேரில்/தொலைபேசியினூடாக பெறலாம்.

விற்பனைக்கு
Viedo Camera Sony 2100C
D90 Nikon
D80 Nikon
D200 Nikon
Sony DVC Camera சிறியது
வீடியோ கமரா, ஸ்ரான், புரோலைட் பைக்கிறேன் கேட்டின் என்பன விற் பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
Tel :- 0757932877, 0773450036
(325)

கோட்டைக்காடு, மல்லாகம் சாளம்பை முருகமூர்த்தி ஆலயம்-இராசகோபுர நிர்மாணம்
ஐந்து தளங்களைக் கொண்ட மேற்படி இராசகோபுர நிர்மாண வேலையை கூலி ஒப்பந்த அடிப்படையில் பொறுப்பேற்க விரும்பும் முன் அனுபவம் உள்ளவர்கள் 01.09.2012 இருந்து 14.09.2012 வரை உள்ள காலப்பகுதிக்குள் கீழ் தரப்பட்டுள்ள விலாசத்தாருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.
நா.கணேசமூர்த்தி
செயலாளர்
கோட்டைக்காடு,மல்லாகம் சாளம்பை முருகமூர்த்தி ஆலயம் பரிபாலன சபை
சண்முகா மருந்தகம்
54, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம். T.P.:0779256739
தகவல்
திருமதி இரகுபதி லோகநாயகி
தலைவர்
கோட்டைக்காடு, மல்லாகம் சாளம்பை முருகமூர்த்தி ஆலயம் பரிபாலன சபை (324)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த ஓகஸ்ட் மாதத்தில் மட்டும் விபத்தின் காரணமாக 12 பேர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கடந்த மாதத்தில் மட்டும் வீதி விபத்துக்களால் 12 உயிரிழப்புக்கள் இடம்பெற்றுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் புள்ளிவிபரத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இவ் வருடத்தின் ஒரு மாதத்தில் விபத்துக்களால் கூடிய இறப்புக்கள் நிகழ்ந்த மாதமாக ஆவணி மாதம் பதிவு செய்யப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வீதி விபத்துக்களில் இறந்தோரில் 2 சிறுவர்கள் அடங்குவதோடு 4 இளைஞர்களும் உள்ளடங்குகின்றனர்.

இவ்விபத்துகள் அதிகமாக பேருந்து மற்றும் மோட்டார் சைக்கிள்களினால் ஏற்பட்டுள்ளன.

அதிலும் குறிப்பாக மிக மோசமான விபத்துக்களாக அதாவது விபத்து நடந்த இடத்திலேயே மரணம் சம்பவிக்கும் விபத்தாக 3 விபத்துக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றில் நேற்று முன்தினம் சாவகச்சேரிப் பகுதியில் இடம்பெற்ற விபத்து, சுன்னாகம், ஊர்காவற்றுறை ஆகியவற்றில் இடம்பெற்ற விபத்துக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவ்விபத்து இறப்புக்களில் வயோதிபர்களே (50 வயதுக்கு மேற்பட்டோர்) அதிகளவில் உயிரிழந்துள்ளதோடு அதிலும் குறிப்பாக பெண் வயோதிபர்களே உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வீதி விபத்துக்களுக்கு சாரதிகளும் நடைபாதைகளில் செல்வோரும் சரியான வீதி ஒழுங்கைக் கடைப்பிடிக்காமையே காரணமாகவுள்ளதாக சுன்னாகப் பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி வி.எம்.டபிள்யூ.பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விபத்துக்கள் கவனயீனமாகவே இடம் பெறுகின்ற போதும் அவை உயிரிழப்புக்களை ஏற்படுத்தி விடுகின்றன. சாரதிகள் தமது அலட்சியப் போக்கை முதலில் கைவிட்டு வாகனம் செலுத்த வேண்டும்.

மஞ்சள் கோட்டினூடாக வீதியை கடக்காமை, நடைபாதையினூடாக நடந்து செல்லாமை காரணமாக பின்னால் வரும் வாகனங்கள் மோதுகின்ற நிலைமையும் ஏற்படுகின்றது.

மேலும் விபத்துக்களின் சட்ட நடவடிக்கையின் போது விபத்து சம்பவிக்கும் இடங்களில் நிற்கும் பொதுமக்கள் தமது கண்கண்ட சாட்சியங்களை பதிவு செய்யத் தயங்குவதன் காரணமாக உரியவருக்கு தண்டனை பெற்றுக் கொடுக்க முடியாதுள்ளது. விபத்துக்களுக்கு காரணமானவருக்கு தண்டனை வழங்கும்போது விபத்து இடம்பெற்ற கணத்தில் நின்றவர்களின் சாட்சியம் அவசியமானதாகும்.

இவ்வாறான நிலையிலேயே பெரும்பாலான சாரதிகள் சிறிய தண்டனைகளுடன் தப்பித்து விடுகின்றனர். நேரில் கண்டவர் சாட்சியமளிப்பதால் அலைச்சல்களோ நேர விரயமோ இருக்கப்போவதில்லை. ஒரு நாளில் சில மணிநேரம் செலவளித்தால் போதுமானது. விபத்தில் ஒருவர் காயமடையும் போது அவ்விடத்தில் உள்ள மக்கள் மனிதாபிமானத்துடன் செயற்பட்டு காயமடைந்தவரை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லவேண்டும்.

இச் செயற்பாட்டில் தாமதம் ஏற்படின் அதிக இரத்தப் போக்கு காரணமாக காயமடைந்தவர் இறந்து விடுகின்ற துரதிர்ஷ்ட சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன என்றார்.

மேலும் போக்குவரத்து பொலிஸார் விபத்து விசாரணைகளின் போது பாரபட்சம் காட்டினால் அதனை உடனடியாக தலைமைப் பொலிஸ் பரிசோதகரிடம் தெரியப்படுத்துங்கள் என யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்தார். (அ-4)

# நெல்லியடிப்பகுதி வீதி அகலிப்பு பணிகள் ஆமை வேகத்தில்

## மக்கள் குற்றச்சாட்டு

(கரவெட்டி)

நெல்லியடி நகரப்பகுதியில் வீதி அகலமாக்கும் பணி மந்த கதியில் இடம்பெற்று வருவதனால் அப்பகுதி மக்களும் வர்த்தகர்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக கவலை தெரிவித்துள்ளனர்.

நெல்லியடி நகரப் பகுதியில் கடந்த ஒரு மாத காலத்திற்கு மேலாக வீதி அகலமாக்கும் பணி இடம்பெற்று வருகிறது.

ஆனால், நீண்டகாலமாக இரு பக்கங்களும் தோண்டப்பட்ட வீதியை அவ்வாறே விட்டு விட்டு ஒப்பந்தகாரர்கள் சென்றமையால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

நெல்லியடி நகரப் பகுதியில் உள்ள வீதி மிகக்குறுகிய தூரத்தை கொண்டது. ஆனால், இன்னமும் அவ்வீதியை புனரமைக்காது மந்த கதியில் வேலைகள் இடம்பெற்று வருவதால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். எனவே, உரிய தரப்பினர் மிக விரைவாக இவ்வீதியை புனரமைத்துதர வேண்டுமென அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-24)

# வாரம் ஒரு தகவல்

## சிரிப்பின் இரகசியம்

"என்ன தனியாக உட்கார்ந்து சிரிக்கிறீர்கள்?"

"சிந்தித்துப் பார்த்தால் சிரிப்பு வருகின்றது சேர்!"

"உங்களுக்கு ஒரு விடயம் தெரியுமா? கடவுள் இரண்டு சந்தர்பங்களிலே சிரிக்கிறார்!"

"எப்போது...?"

"ஒரு வைத்தியர்... நோயாளியின் சொந்தக்காரர்களைப் பார்த்து, கவலைப்படாதீர்கள்... இவரை நான் காப்பாற்றுகின்றேன் என்று சொல்கின்றார். அந்தச் சமயத்திலே கடவுளுக்கு சிரிப்பு வருகின்றது... அந்த உயிரை இன்னும் சற்று நேரத்திலே நான் எடுக்கப்போகிறேன்... இவர் இப்படிச் சொல்கிறாரே...!" என்று நினைத்து சிரிப்பாராம்!"

"நியாயம்தானே!"

"அதேமாதிரி கடவுள் இன்னுமொரு சந்தர்ப்பத்திலேயும் சிரிக்கிறார்...!"

"எப்போது...?"

"அண்ணன்- தம்பி இரண்டு பேரும் பாகப்பிரிவை காட்டிக் கொள்கிறார்கள்... இது என்னுடையது... அது உன்னுடையது... என்று சொல்லிக் கொள்கின்றபோது கடவுள் நினைப்பார்..."

"இந்தப் பிரபஞ்சமே எனக்குச் சொந்தம்... அப்படி இருக்கின்றபோது இந்தத் துண்டு நிலங்களுக்கு இவர்கள் சொந்தம் கொண்டாடுகிறார்களே என்று நினைத்து சிரிப்பாராம்!"

"இப்பொழுது நான் சிரித்துக் கொண்டிருக்கின்றதும் கிட்டத்தட்ட அதுமாதிரி சிரிப்புத்தான்!"

"அப்படியா சொல்கிறீர்கள்?"

"ஆமாம்... ஒரு அண்ணன்- தம்பி இரண்டு பேரிடையே சொத்துத் தகராறு... உண்மையிலேயே அந்தச் சொத்து முழுவதும் எனக்கு வந்து சேர வேண்டியவை... ஆனால், அவர்கள் இரண்டு பேரும் சண்டை போடுகிறார்கள்...!"

"அப்படியென்றால்.... நீங்கள்...?"

"சட்டத்தரணி!"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# இராசி பலன்

02.09.2012

(ஆவணி 17, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
துதியை முன்னிரவு 8.36 மணிவரை
பூரட்டாதி முற்பகல் 7.46 மணிவரை
இராகுகாலம் 4.35-6.05 மணிவரை
சுபநேரம் 9.05-10.35 மணிவரை
சித்தாமிர்தம்.

**மேடம்** தொழில் நலன்கருதி வெளியூர் பயணம் ஒன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை அமையும், சுப செலவுகள் அதிகரிக்கும், சொன்ன சொல்லைக் காப்பாற்ற துடிப்புடன் செயற்படுவீர்கள்.

**இடபம்** ஒளிமயமான வாழ்க்கைக்கு அடித்தளம் போடும் நாள், புதிய நபர்களின் அறிமுகத்தால் பொருளாதார நிலை உயரும், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**மிதுனம்** தொட்ட காரியங்கள் வெற்றி பெறும், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், தூரதேசச் செய்திகளால் நன்மையுண்டு, பொருளாதார நிலை உயரும்.

**கடகம்** பயணங்களால் பலனுண்டு, ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், புகழ் மிக்கவர்களின் சந்திப்புண்டு, கொடுத்த வாக்கை காப்பாற்றும் எண்ணம் மேலோங்கும்.

**சிங்கம்** விரயங்கள் தவிர்க்க இயலாமல் போகும், வாகனங்களில் செல்லும் போது விழிப்புணர்ச்சி தேவை, கௌரவக் குறைவான சம்பவங்கள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை.

**கன்னி** தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பயணத்தால் பலன் கிடைக்கும், நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**துலாம்** தொழில், வியாபாரத்தை விரிபடுத்தும் எண்ணம் மேலோங்கும், உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், எதிர்பாராத விதத்தில் தொகைகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** பூர்வீகச் சொத்துக்களிலிருந்து இடையூறுகள் அகலும், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயர்வடையும்.

**தனுசு** வரம் தரும் தெய்வங்களை வழிபடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பெற்றோர் மீது பிரியம் கூடும் நாள், திட்டமிட்ட காரியங்களை செய்து முடிப்பீர்கள், வாகன சுகமுண்டு.

**மகரம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமை சேரும் நாள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும்.

**கும்பம்** நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், எதிர்பார்ப்புகள் எளிதில் ஈடேறும், பண வரவு திருப்தி தரும்.

**மீனம்** திடீர் பயணத்தால் திசை, திருப்பங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், தேவையற்ற கற்பனைகள் குடிகொள்ளும், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும்.

வளவன்

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 110 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 70 | 70 | 80 | 80 |
| தக்காளி | 40 | 60 | 40 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 | 40 |
| கோவா | 70 | 70 | 80 | 70 |
| கரட் | 120 | 110 | 100 | 140 |
| பூசணி | 40 | 30 | 30 | 40 |
| புடோல் | 40 | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 45 | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 70 | 80 |
| பெரிய வெங்காயம் | 75 | 70 | 60 | 70 |
| பாகற்காய் | 60 | 70 | 80 | 60 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 40 | 50 |
| கருணைக் கிழங்கு | -- | 80 | -- | -- |
| பயற்றங்காய் | 70 | 60 | 80 | 40 |
| லீக்ஸ் | 120 | 140 | 100 | 120 |
| பீற்றூட் | 40 | 60 | 40 | 70 |
| கறிமிளகாய் | 100 | 50 | 70 | 80 |
| முருங்கைக்காய் | 30 | 40 | 60 | 40 |
| போஞ்சி | 105 | 110 | 70 | 100 |
| கத்தரிதம்புள்ள | 40 | 70 | 90 | -- |
| கீரை - 1 பிடி | 10 | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 180 | 160 | 90 | 240 |
| தேங்காய் (ஒன்று) | 20-25 | 30 | 25 | 20-25 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்நடை உற்பத்தி திணைக்களத்தின் பயன்பாட்டுக்கு வாகனங்கள் கையளிப்பு

(கிளிநொச்சி)

வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்திற்கு வெளிக்கள பணிகளை நிறைவேற்றுவதற்கான வாகனங்களை வட மாகாண ஆளுநரின் வழிகாட்டலுக்கு அமைய பிரதம செயலாளர் திருமதி ர.விஜய லக்சுமி வழங்கி வைத்தார்.

இவ் வாகனங்கள் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் கிளிநொச்சி 155 ஆம் கட்டையில் அமைந்துள்ள கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.


இத்திணைக்களத்திற்கு வழங்கவென மத்திய கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களம் 2 பிக்கப் ரக வாகனங்களையும் உலக உணவு ஸ்தாபனம் கனேடிய நிதியுதவியினூடாக 2 முச்சக்கரவண்டிகள், 9 பெண் அலுவலர்களுக்கான மோட்டார் சைக்கிள் என்பவற்றை வழங்கியுள்ளன.

மேலும் மாகாண விவசாய திணைக்களத்தினரின் பண்ணையாளர்களுக்கான பயிற்சித் தேவைக்கென உலக உணவு ஸ்தாபனம் சிறிய பஸ் வண்டியொன்றையும் மேலும் கரைச்சி கால்நடை வளார்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தினருக்கு முச்சக்கரவண்டியொன்றையும் வழங்கியுள்ளது.

மேற்படி நிறுவனங்களுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவாக இவ் உதவி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந் நிகழ்வில் பிரதம செயலர், மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் யூ.எல்.எம். கால்தீன், கால்நடை உற் பத்தி சுகாதார திணைக்கள மாகாண பணிப் பாளர் டாக்டர் சி.வசீகரன், விவசாய திணைக் கள மாகாண பணிப்பாளர் சிவகுமார் மற்றும் இரு திணைக்களங்களையும் சேர்ந்த மாவட்ட உதவிப் பணிப்பாளர்களும் கால்நடை வைத் தியர்களும் ஏனைய அலுவலர்களும் உலக உணவு ஸ்தாபன அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

(அ-9)




## கடலில் மூழ்கிய கப்பலில் இருந்து தொடர்ந்தும் எண்ணெய்க்கசிவு

(பாணந்துறை)

பாணந்துறைக் கடலில் மூழ்கிய கப்பலில் இருந்து தொடர்ந்தும் மசகு எண்ணெய் கசிந்த வண்ணம் இருப்பதாக சமுத்திர பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

நீண்டகாலமாக கடலில் நங்கூரமிட்டிருந்த நிலையில் கடந்த வாரம் முற்றிலுமாக மூழ்கியது. தர்மோபிலி சியோரா என்ற கப்பல் கடலில் மூழ்கி 8 தினங்களாகின்றன.

எனினும், கப்பலில் எண்ணெய்க்கசிவு ஏற்படும் இடத்தை கண்டறிய முடியாத நிலை இருப்பதாக சமுத்திர பாதுகாப்பு அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

சுழியோடிகளுக்கு கப்பலின் அருகில் செல்ல முடியாத நிலைமையே இதற்கான காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதும் கசியும் எண்ணெயால் கடல் உயிரினங்களுக்கு பாரிய பாதிப்பு ஏற்படவில்லை என அந்த அதிகாரசபையின் முகாமையாளர் ரியர் அட்மிரல் எஸ்.ஆர்.சமரதுங்க தெரிவித்தார்.

(அ-2)


- தபால் மூலம் -

**ஆறு மாத கால டிப்ளோமா**

**Course Length - Six Month**

22

September 2012 to February 2013

*தமிழ் மொழி மூலம்*

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

Mobile: **0777 140 844, 071 803 48 48**

(சி-916)

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.09.2012



**வேலையாள் தேவை**

இல.125, பெரிய கடை வீதியில் உள்ள ஆயிஷா சல்வார் சொயிஸ் (Aisha Shalfar Choice) க்கு சுத்திகரிப்பாளர் (பெண்) ஒருவர் தேவை.

தொடர்புகளுக்கு :
0772289966
0772250836

(326)



**வாடகைக்கு**

நல்லூரில் முன்பள்ளியும் தினப் பராமரிப்பு நிலையம், பிரபல டியூசன் சென்டர்களுக்கு அருகாமையில் சிறிய குடும்பத்திற்கு ஏற்ற விசாலமான இரண்டு அறைகள் கொண்ட அனெக்ஸ் உண்டு.

தொடர்புகளுக்கு: 0775484719 (317)



**வேலையாட்கள் உடன்தேவை**

யாழ். நகரில் இயங்கும் உணவகத்திற்கு
★ சப்பிளையர் (ஆண்)
★ டீ மேக்கர் (ஆண்)
★ சமையலாளர் (ஆண்/ பெண்)
★ சமையல் உதவியாளர் (ஆண்/பெண்)
★ உதவியாளர் (ஆண்/பெண்)
உடன் தேவை.
தங்குமிடம் வழங்கப்படும்.

தொடர்பு: 0775230297
0723061923 (332)



**AFTER A/Ls** | உங்களது இலக்கு என்ன? **WANT TO BECOME A LAWYER?**

சட்டக்கல்லூரி அனுமதி பரீட்சைக்கு உங்களை தயார்படுத்தும்

**சட்டக்கல்லூரி அனுமதி வகுப்பு**




தகைமைகள்:
இம்முறை A/L எழுதியவர்கள்,
A/Lல் 03 பாடங்களில் சித்தயடைந்தவர்கள்
அத்துடன் O/Lல் தமிழ் மற்றும்
ஆங்கிலத்தில் 'C' சித்தியை பெற்றவர்கள்
இலகுவாக, குறைந்த செலவில்,
குறுகிய காலத்தில்...

(சி/914)

**நீங்களும் ஒரு சட்டத்தரணியாகலாம்!**

விரிவுரையாளர் ஹபீப் றிபான் | விபரங்களுக்கும் அனுமதிக்கும் **0777 44 62 52**

பல்கலைக்கழக மாணவர்கள், வெளிவாரிப் பட்டதாரி மாணவர்கள், ஆசிரியர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், இம்முறை A/L எழுதிய மாணவர்கள் மற்றும் மேற்சொன்ன தகைமைகளையுடைய அனைவரும்

**GOLDEN COLLEGE** | 0812 20 55 44
|CITY CAMPUS| 548, Peradeniya Road, Kandy. | 0775 66 16 16



**ENGLISH EXAMINATIONS**

UNIVERSITY OF CAMBRIDGE

A/L முடிந்துவிட்டதா.....?

நீங்கள் பல்கலைக்கழகத்துக்குப் போவதற்கு முன் உங்களின் ஆங்கில அறிவை விருத்தி செய்து ஓர் சர்வதேச Engilsh Qualification னை அடையுங்கள். இன்றே Cambridge English Course இல் சேருங்கள்.

நேற்றைய தினம்
வகுப்பு ஆரம்ப திகதி
தவறுதலாக
பிரசுரிக்கப்பட்டுவிட்டது.
திருத்தி வாசிக்கவும்



**வகுப்புக்கள் 03.09.2012 இல் ஆரம்பம்**

**CITY COLLEGE OF ENGLISH**
143, Adiyapatham Road, Thirunevely.

எமது புதிய கிளை
பலாலி வீதி, உரும்பிராய்
[உரும்பிராய் பெற்றோல் நிலையத்திற்கு முன்பாக]

T.P :- 021 2220384 - 077 8803887,
021 3216027


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் பணிகளுக்காக 35 ஆயிரம் அதிகாரிகளை ஈடுபடுத்த தீர்மானம்

## தேர்தல் செயலகம் அறிவிப்பு

எதிர்வரும் செப்டெம்பரில் இடம்பெற்றவுள்ள மூன்று மாகாண சபைத் தேர்தல்களின் பணிகளுக்காக 35 ஆயிரம் அதிகாரிகளை ஈடுபடுத்த எதிர்பார்த்துள்ளதாக தேர்தல்கள் செயலகம் தெரிவித்துள்ளது.

அதற்கான பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் ஆர்.எல்.எம். ரத்நாயக்க தெரிவித்தார்.

தேர்தல்கள் இடம்பெறும் மூன்று மாகாணங்களிலும் தேர்தல்கள் திணைக்கள அதிகாரிகள் விசேட கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இதன்படி அநுராதபுரம் மாவட்டத்திலேயே அதிகளவான வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. அம்பாறை மாவட்டத்திலும் தேர்தல் வன்முறை சம்பவங்கள் குறிப்பிடத்தக்க அளவு உயர்ந்துள்ளதாக பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

தேர்தல் பிரசாரங்களின் போது குறித்த மாவட்டங்களில் அசாதாரண நிலைமைகள் ஏற்படும் பட்சத்தில் அதனை கட்டுப்படுத்தும் நோக்கில் விசேட பொலிஸ் குழுக்களை அங்கு ஈடுபடுத்துமாறு பொலிஸ்மா அதிபருக்கு கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அந்த அமைப்பின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (அ-2)

YARL Properties
(புதிய பரிமாணத்துடன் சிறந்த சேவை)
யாழ் குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் அழைகக வேண்டிய ஒரே தொலைபேசி இலக்கம்
021 2221919/0759751919
யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் Brown வீதியில் 3 1/2 பரப்பு காணி பழைய வீட்டுடன் விற்பனைக்கு உண்டு உடன் தொடர்பு கொள்ளுங்கள்
விற்றல், வாங்குதல் (Sales/Buy)
வாடகை (Rent)
பராமரிப்பு (Property Managment)
அனைத்து தேவைகளுக்கும் அழையுங்கள்
36, கச்சேரி நல்லூர் வீதி
யாழ்ப்பாணம்
E-Mail - yarlproperties@gmail.com

# பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 40 பேர் பொலிஸாரால் கைது

## பாரிய குற்றங்கள் கட்டுப்பாட்டுக்குள் என்கிறார் பிரதிப் பொலிஸ்மா அதிபர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் பாரிய குற்றச் செயல்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் நீதிமன்றங்களினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 40 பேர் கடந்த வாரத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ். பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வாரத்தில் யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவிற்குள் 3 பாரிய குற்றச் செயல்களும் கே.கே.எஸ். பொலிஸ் பிரிவிற்குள் 2 பாரிய குற்றச் செயல்களும் இடம்பெற்றுள்ளன.

இந்த எண்ணிக்கையானது கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் குறைவு. எதிர்காலத்தில் பாரிய குற்றச் செயல்களை முற்றாக கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றோம்.

அத்தோடு கடந்த வாரத்தில் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையின் போது நீதி மன்றங்களினால் பிடி யாணை பிறப்பிக்கப்பட்ட 40 பேரும் மதுபோதையில் வாகனத்தை செலுத்திச் சென்ற 27 பேரும் குடித்து விட்டு பொதுமக்களுக்கும் போக்கு வரத்திற்கும் இடையூறு ஏற்படுத்திய 9 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதோடு சட்ட விரோதமாக மதுபானம் விற்பனை செய்த 10 பேருக்கு எதிராகவும் கஞ்சா விற்பனை செய்த ஒருவருக்கு எதிராகவும் சூழல் மாசடையும் வகையில் நடந்து கொண்ட 7 பேருக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மேலும் கடந்த காலங்களில் குடாநாட்டில், திருட்டுப் போன துவிச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள் என்பன மீட்கப்பட்டுள்ளதோடு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

பதவி வெற்றிடம்
முல்லைத்தீவு நகரில் அமைந்திருக்கும் அபான்ஸ் காட்சியறைக்கு காட்சியறை உதவியாளர் பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
தகைமை
1. க.பொ.த. உயர்தரம் சித்தி அல்லது க.பொ.த.சா. தரம்
2. போதிய கணனி அறிவு பெற்றிருத்தல் வேண்டும்
3. போதிய ஆங்கில அறிவு பெற்றிருத்தல் வேண்டும்
4. மோட்டார் உந்துருளி அனுமதிப்பத்திரம் ஆண் விண்ணப்பதாரிகளுக்கு விரும்பத்தக்கது.
5. ஆண் / பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

(சி-908)
மேலதிக தொடர்புகளுக்கு
முகாமையாளர். தொ.பே.இல:-0776112095
Abans


Auto A/C
வாகன குளிரூட்டி

ரொயோட்டா, மஸ்டா, சுசுக்கி, மிற்சுபிஷி, மற்றும் அதிகுளிரூட்டி வாகனங்கள் (FREEZER TRUCKS) போன்ற சகலவிதமான வாகனங்களுக்கும் மிகச்சிறந்த முறையில் குளிரூட்டிகள் திருத்தம் செய்து தரப்படும்.
எமது ஏனைய சேவைகள்.
1) காஸ் நிரப்புதல்
2) திருத்த வேலைகள்
3) குளிரூட்டிகள் மீள் திருத்தம் செய்தல்.
அரசாங்க, திணைக்கள, தனியார், நிறுவன வாகனங்கள் ஒப்பந்த அடிப்படையில் திருத்தித் தரப்படும்.
(ஞாயிற்றுக் கிழமைகளிலும் திறந்திருக்கும்)
தொடர்புகளுக்கு
510 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 0777738888
(யாழ். இந்துக்கல்லூரி [illegible])

பரீட்சைக்கு பின்
உடனடியாக பதிவு செய்து 30% வரையிலான கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்.
உங்கள் எதிர்காலத்தை வளமாக்கும்
தொழிற் தகைமைகளை பெற்றுக் கொள்வோம்
DIPLOMA IN
COMPUTERIZED ACCOUNTING
Duration:
03 Weeks (Full Time)
06 Weeks (Part Time)
100% PRACTICAL
Free Study Pack with Software CD
07 PACKAGES
Course Fee: 9,000/=
Diploma in 2D & 3D
Auto CAD
Computer Aided Designing & Drafting
Civil & Electrical Drawing 2007/08/09/10/11
Duration: 30 Days(Full/Part Time) Course Fee: 18,500/=
ஆண், பெண் இருபாலாருக்கும் பாதுகாப்பான தங்குமிட வசதி
GOLDEN COLLEGE
CITY CAMPUS
548, Peradeniya Raod, Kandy.
0812 20 55 44
0777 91 25 97
A training institute registered with the TVEC under P09/0148
(சி/915)

விற்பனைக்கு
கடைக்குரிய கதவு, நிலைகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு
ஸ்ரீ முருகன் கொமினிகேசன்,
303, கே.கே.எஸ். வீதி,யாழ்ப்பாணம்.
(சி/912)

பரீட்சைக்கு பின்
உடனடியாக பதிவு செய்து 30% வரையிலான கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்.
உங்கள் இலக்கை சரியாக தீர்மானிக்க
சரளமாக ஆங்கிலம் கதைப்போம்
02 Months FULL TIME
கணனி மற்றும் விசேட பயிற்சிகளுடன் கூடிய முழுநேர
ஆங்கில பாடநெறி
ENGLISH + IT
& SKILLS TRAINING
02 மாதத்தில் தரம்வாய்ந்த 03 சான்றிதழ்கள்
Admission Fee: 2,000/= Course Fee: 21,500/=
ஆரம்பத்திலிருந்து கற்பதற்கு ஏற்றவிதத்தில் வடிவமைக்கப்பட்ட பாடநெறி

DIPLOMA IN SPOKEN ENGLISH
Duration: 03 Months (Mon - Thu) Fee: 12,500/=
Free study Materials பாடநெறிகள் ஆரம்பம்: 10.09.2012
ஆண், பெண் இருபாலாருக்கும் பாதுகாப்பான தங்குமிட வசதி
GOLDEN COLLEGE
CITY CAMPUS
548, Peradeniya Raod, Kandy.
0812 20 55 44
0777 44 62 52
A TRAINING INSTITUTE REGISTERED WITH THE TVEC UNDER P09/0148
(சி/913)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவையின் நாயகன் அமரர் தர்மலிங்கம்

இவ்வுலகில் பலர் உயிருடன் வாழும் போதே மக்களுக்கு எதுவித சேவையும் புரியாமல் இறந்தவர்கள் போல வாழ்கிறார்கள். சிலர் இறந்தாலும் சமூகத்திற்கு பெரும் தொண்டாற்றியதனால் மக்களின் இதயங்களில் அவர்கள் உயிருடன் வாழ்வது போல் உணரப்படுகின்றார்கள். அவர்களுள் முன்னாள் உடுவில் மானிப்பாய் தொகுதிகளின் நாடாளுமன்ற உறுப்பினரான அமரர் **விஸ்வநாதர் தர்மலிங்கம்** ஒருவராவர். இவரை அக்காலத்தில் இலங்கையர் என்றே எல்லோரும் செல்லமாக அழைப்பார்கள். 1918 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 5 ஆம் திகதி பிறந்த தர்மலிங்கம் தனது ஆரம்பக் கல்வியை கந்தரோடை தமிழ்க் கந்தையா சாலை, ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும் உயர் கல்வியை யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியிலும் கற்றார்.

## மறைந்தார் மாண்பு

சிறு வயது முதல் மக்களுக்குச்சேவை செய்ய வேண்டும் என்ற தணியாத தாகத்தினால் சனசமூக நிலையம், கிராம அபிவிருத்திச் சங்கம் போன்ற பொதுஸ்தாபனங்களில் தன்னை ஈடுபடுத்தி தனது கிராமமான கந்தரோடை மக்களுக்கு சேவையாற்றினார்.

1948 ஆம் ஆண்டு தர்மர் இலங்கைச் சட்டக் கல்லூரியில் படிக்கும் போதுதான் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவருமான அமரர் அ.அமிர்தலிங்கமும் கல்வி கற்றார்.

இவர் சட்டக் கல்லூரியில் கற்றுக் கொண்டிருக்கும் போது இவரின் அன்பு மனைவி காலமாகி விட் டார் என்ற துயரச் செய்தியால் தனது சட்டக் கல்விக்கு முழுக்குப் போட்டு விட்டு தனது இரு செல்வங்களான சித்திரலேகா, சித்தார்த்தன் (இன்றைய புளொட் இயக்கத் தலைவர்) ஆகி யோரின் நன்மை கருதி தனது கிராம மான கந்தரோடைக்கு திரும்பினார்.

## இன்று இவரின் 29 ஆவது நினைவுதினம்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொள்கைகளினால் கவரப்பட்ட தர்மா 1960 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அக்கட்சியின் சார்பில் உடுவில் தொகுதியில் போட்டியிட்டு அமோக வெற்றியீட்டினார்.

1983 ஆம் ஆண்டு புதிய ஆறாவது அரசியல் திருத்தச் சட்ட மூலத்திற்கு விசுவாசமாக சத்தியப் பிரமாணம் செய்ய மறுத்தபடியினால் அவர் தொடர்ந்து இருபத்திமூன்று வருடங்களாக உடுவில் மானிப்பாய் தொகுதிகளின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த பதவி பறிக்கப்பட்டது.

1970 ஆம் ஆண்டு தேர்தலில் தமிழரசுக்கட்சியின் முக்கியமான தலைவரான அ.அமிர்தலிங்கம் வட்டுக்கோட்டை தொகுதியில் தோல்வியடைந்தார். அவரின் தோல்வி அப்போது தமிழரசுக் கட்சிக்கு பின்னடைவை ஏற்படுத்தும் என பலரும் கருதினார்கள். இந்த வெற்றிடத்தைத் தர்மர் பொறுப்பேற்று சகல விவாதங்களிலும் பங்குபற்றி தனது வாதத் திறமையை வெளிப்படுத்தினார்.

1971 ஆம் ஆண்டு அரசியல் நிர்ணய சபைக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் சமஷ்டி ஆட்சிக்கான திட்டவரைவு சமர்ப்பிக்கும் பொறுப்பு அமரர் தர்மலிங்கத்திடம் விடப்பட்டது. இந்த யாப்பு அமைப்பு தர்மர் இரவு பகலாக ஓயாது உழைப்பின் வெளிப்பாடாகும். அவரின் சிந்தனைத் தெளிவினைச் சித்தரிக்கும் சீரியசான்றாகும்.

தமிழையும் சைவத்தையும் இறுகக் கடைப்பிடிக்கின்ற மிகவும் செல்வமான குடும்பத்தில் உதித்த தர்மர் இடதுசாரிக் கொள்கையுடையவர். சாதிக்கொடுமைகளை துடைத்தெறிய வேண்டும் என துணிந்து செயற்பட்டார். 1972 ஆம் ஆண்டுக்குப் பின் பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டு எதுவித விசாரணையுமின்றி சிறையில் அடைக்கப்பட்டனர். இதனைப் பாராளுமன்றத்தில் புள்ளி விபரத்துடன் எடுத்துக் கூறியது மட்டுமன்றி சர்வதேச மன்னிப்புச் சபையோடு தொடர்பு கொண்டு அவர்களின் விடுதலைக்காக உழைத்தார். யாழ்ப்பாணம் தேசிய கல்வி யியற் கல்லூரியானது அமரர் தர்மர் அவர்கள் குடும்பத்தினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட 200 பரப்பளவு காணியில் சிறப்பாக இயங்கி பல கல்வியாளர்களை உருவாக்கி வருகிறது. சொல்லிலும் செயலிலும் எவருக்குமே தீங்கு விளைவிக்காத ஒரு நல்ல மனிதன். இவரது உயிர் 02.09.1983 ஆம் ஆண்டு இவ்வுலகில் இரு ந்து பிரிந்தது. இவர் பிரிந்தாலும் தமிழ் நெஞ்சங்களில் வாழ்கிறார்.

**ஆ.சி.கணேசவேல் J.P.**
பிரதேச சபை உறுப்பினர்

# மீள்குடியேறிய மக்களின் அடிப்படை தேவைகள் விரைவில் பூர்த்தி செய்யப்படும்

## சந்திரகுமார் எம்.பி.தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மீள்குடியேற்றப்பட்ட பகுதிகளில் மக்கள் முழுமையாக குடியேறும் போதே அம்மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை விரைவாக ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

மாதகல் கிழக்கில் மீள்குடியேறிய மக்களின் அடிப்படை பிரச்சினைகளை தீர்ப்பது தொடர்பில் மேற்கொண்ட கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

மீள்குடியேறிய மக்களுக்கான அனைத்து அடிப்படைத் தேவைகளையும் நிவர்த்தி செய்ய நாம் தயாராக இருக்கின்றோம். ஆனால் சில பகுதிகளில் குடியேறிய மக்கள் பதிவுகளை மட்டும் அங்கு மேற்கொண்டு விட்டு வேறு இடங்களில் வசிக்கின்றனர். இதனால் அவர்களுக்கான தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான செயற்பாடுகளின் போது பல நெருக்கடிகளை எதிர் கொள்ள நேரிடுகின்றது.

மீள்குடியேற்றத்தின் ஆரம்பத்திலேயே மக்களின் அனைத்து தேவைகளையும் நிவர்த்தி செய்து விட முடியாது. எனவே மக்கள் மீள்குடியேறிய பின்பே படிப்படியாக தேவைகளை நிவர்த்தி செய்ய முடியும். இந்நிலையில் யாழ். மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட்ட பல பகுதிகள் மக்களின் பூரண ஒத்துழைப்பினால் இன்று அனைத்து தேவைகளும் நிவர்த்தி செய்யப்பட்டு பிரதேசங்கள் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளன.

எனவே மாதகல் கிழக்கு பிரதேசத்தை பொறுத்தவரை அங்கு சுமார் 105 குடும்பங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்ற போதும் அனைவரும் முழுமையாக அங்கு வசிக்காத காரணத்தினால் அப்பகுதி மக்களின் தேவைகள் குறித்து ஆராய்கின்ற பலர் முழுமையான தரவுகளை பெற முடியாது திரும்பியுள்ளனர்.

இருப்பினும் அம்மக்களின் பல தேவைகள் எம்மால் இனங்காணப்பட்டுள்ளன. அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளையும் நாம் மேற்கொண்டுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

சங்கானை பிரதேச செயலகத்திற்குட்பட்ட மாதகல் கிழக்கு கிராம சேவகர் பிரிவில் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் குடிநீருக்காக மேலும் இரு நீர்த்தாங்கிகளை வைப்பதற்கு நடவடிக்கை எடுத்து நாளாந்தம் அவற்றில் நீரை நிரப்புவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்.

அத்தோடு அம்மக்களுக்கு வீட்டு வசதி மற்றும் மலசலகூடம் போன்றவற்றை அமைத்துக் கொடுக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார். (அ-2)

# கொழும்பு மாவட்டத்திலேயே அதிக டெங்கு நோயாளர்கள்

## நாட்டில் 8 மாதத்தில் 28ஆயிரம் பேருக்கு டெங்கு

(கொழும்பு)

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் சுமார் 28ஆயிரம் பேர் டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய் ஆய்வுப்பிரிவு தெரிவித்துள்ளது. அப்பிரிவு மேலும் தெரிவிக்கையில்,

ஓகஸ்ட்மாதத்தில் டெங்குக்காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 3ஆயிரத்து 487 பேர் பதிவாகியுள்ளதாக குறிப்பிடுகின்றது.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதுடன் இந்த மாவட்டத்தில் வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 6 ஆயிரத்து 683 பேர் பதிவாகியுள்ளனர்.

கம்பஹா மாவட்டத்தில் 5 ஆயிரத்து 263 பேரும் களுத்துறை மாவட்டத்தில் ஆயிரத்து 803 பேரும் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இதுதவிர கண்டி, அம்பாந்தோட்டை, குருநாகல், இரத்தினபுரி மற்றும் கேகாலை மாவட்டங்களிலும் அதிக எண்ணிக்கையான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக குறிப்பிடுகின்றது. (அ-2)

# மதிய உணவு வழங்கும் திட்டத்தில் மரக்கறிக்கான பணம் அதிகரிப்பு

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலய பாடசாலைகளின் உலக உணவுத் திட்டத்தின் மூலம் தரம் 1 தொடக்கம் தரம் 9 வரையான மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவுக்கான மரக்கறிக்கான பணம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக துணுக்காய் கல்வி வலய கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் கு.விஜயபாலா தெரிவித்துள்ளார்.

50 மாணவர்களைக் கொண்ட பாடசாலைக்கு ஒரு மாணவனுக்கு 5 ரூபா வீதமும் 51 தொடக்கம் 100 வரையான மாணவர்களைக் கொண்ட பாடசாலைக்கு தலா 3 ரூபா 50 சதம் வீதமும் 101 தொடக்கம் 200 வரையான மாணவர்களுக்கு தலா 3 ரூபா வீதமும் 200 மாணவர்களுக்கு மேற்பட்ட பாடசாலைகளுக்கு ஒரு மாணவனுக்கு 2 ரூபா 50 சதம் வீதமும் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்துள்ளது.

ஒரு வாரத்திற்கு இரண்டு தடவைக்கு மேல் ஒரே மரக்கறி சமைக்கக்கூடாதெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. உணவு தொடர்பான விபரம் வகுப்ப றைகளில் மாணவர் பார்வைக்கு காட்சிப்படுத்தியிருத்தல் அவசியமான தெனவும் காட்சிப்படுத்தப்படாத பாடசாலை அதிபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-3-15)

# ஐ.தே.கட்சி வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது

## ஊடக அமைச்சர் குற்றச்சாட்டு

ஐக்கிய தேசியக்கட்சி வங்குரோத்து நிலையை அடைந்துள்ளதாக ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதன் காரணமாகவே ஐக்கிய தேசியக் கட்சி தேசிய அரசியலுக்குள் மதத்தை நுழைக்க முயற்சிக்கின்றது.

கட்சியின்வங்குரோத்துநிலையை மூடி மறைப்பதற்காகவே ஐக்கிய தேசியக்கட்சி கபிலவஸ்து புனிதப் பண்டத்தை அரசியலுக்கு இழுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் நடவடிக்கைகள் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் ஆளும் கட்சியின் வெற்றிவாய்ப்பை அதிகரிக்க வழிகோலியுள்ளது.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக கபிலவஸ்து புனித பண்டத்தை ஒருபோதும் ஆளும் கட்சி பயன்படுத்தப்போவதில்லை.

தேர்தல் இடம்பெறும் மாகாணங்களில் மட்டுமன்றி வேறும் மாகாணங்களிலும் கபிலவஸ்து புனிதப் பண்டம் காட்சிப்படுத்தப்பட்டு வருகிறது என்றார். (அ-2)

# வைத்தியர் மீதான தாக்குதல் நபர்களுக்கு விளக்கமறியல்

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் வைத்தியரொருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் அநுராதபுரம் நீதவானும் மேலதிக மாவட்ட நீதிபதியுமான ருவன்திக்கா மாரபன முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய நபர்களை விரைவில் கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்களை எதிர்வரும் 11 ஆம் திகதி அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்துமாறும் நீதவான் பொலிஸாருக்குக் குறிப்பிட்டார்.

அநுராதபுரம் தகய்யாகம முச்சந்தியில் நேற்றுமுன்தினம் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் வைத்தியரொருவர் காயமடைந்து தற்போது அநுராதபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாக்குதலில் வைத்தியர் பயணித்த வாகனத்திற்குப் பலத்தசேதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலின் பின்னர் கூட்டமைப்புடன் இணைந்து கிழக்கில் ஆட்சியமைப்போம்

## மு.கா.தெரிவிப்பு;கூட்டமைப்பு மறுப்பு

கிழக்கு தேர்தலின் பின்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் இணைந்து கிழக்கில் ஆட்சி அமைக்கும் தீர்மானத்தில் இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

உள்நாட்டு ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ள முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் இவ்விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் தனித்துப் போட்டியிடுகிறது. இதனால் இரண்டு கட்சிகளுக்குமே அறுதிப் பெரும்பான்மை கிடைக்காது.

இந்த நிலையில் தேர்தலுக்கு பின்னர் கூட்டிணைவது குறித்து தீர்மானிக்கப்படும். எவ்வாறாயினும் முஸ்லிம் காங்கிரசுடன் இது தொடர்பில் எந்த உடன்படிக்கையும் ஏற்படுத்திக் கொள்ளப்படவில்லை என்று கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுவரையில் கூட்டிணைவு குறித்தோ அல்லது தேர்தல்களுக்காக ஒன்றாக செயற்படுவது தொடர்பிலேயோ எந்த உடன்படிக்கையும் ஏற்படுத்திக் கொள்ளப்படவில்லை.

இந்த நிலையில் தேர்தலின் பின்னர் இது குறித்து தீர்மானிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-2)

# கல்வித்துறை குறித்து கருத்துவெளியிட்ட நீதிபதியை கைதுசெய்ய முயற்சி- ரணில்

(கொழும்பு)

இளைப்பாறிய மேல் நீதிமன்ற நீதிபதி டபிள்யூ. டி.எம்.பி.பி. வராவெளயை கைதுசெய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

திருகோணமலை கந்தளாயில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றிய அவர் நாட்டின் கல்வித்துறை தொடர்பாக வராவெள வெளியிட்ட கருத்து தொடர்பிலேயே அவரை கைதுசெய்ய முயற்சிக்கப்படுவதாக குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வராவெள தேசியக் கல்வி சாசனம் தொடர்பாக ஆராயும் வகையிலான குழு ஒன்றுக்கு தன்னால் தலைமையாளராக நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில் அவர் நாடாளுமன்ற கட்டடத்தில் வைத்து எதிர்க்கட்சிகள் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தேசிய கல்வி தொடர்பில் வெளியிட்ட கருத்து ஒன்றுக்காகவே அரசாங்கம் அவரை கைது செய்ய முயற்சிக்கிறது.

இளைப்பாறிய நீதிபதி வராவெள முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவுக்கு எதிரான வெள்ளைக்கொடி வழக்கில் ஏனைய இரண்டு நீதிபதிகள் அவரை குற்றவாளியாக தீர்ப்பளித்தபோது அவர் மாத்திரம் பொன்சேகாவை விடுவிக்கும் தீர்ப்பை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# தேர்தல் பிரசாரத்திற்காக 1000 பேர் படையெடுப்பு?

## அமைச்சர் பசில் அனுப்பினாராம்

(கொழும்பு)

எதிர்வரும் கிழக்கு மாகாண தேர்தலில் போலி வாக்குகளை பதிவு செய்வதற்காகவும் பிரசாரம் செய்வதற்காகவும் ஆயிரத்திற்கும் அதிகமானவர்களை அமைச்சர் பசில் ராஜபக்ஷ திருகோணமலைக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அவர்களுக்கான உணவு மற்றும் தங்குமிட வசதிகளை அரசாங்கமே மேற்கொள்கிறது.

அவர்கள் திருகோணமலையில் உள்ள அனைத்து பிரதேச சபை எல்லைகளுக்கும் பகிரப்பட்டு தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-2)

# செல்வந்தக் குடும்பங்கள் நாட்டை ஆளும் முறைமையை மாற்ற வேண்டும்

## ஜே.வி.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

செல்வந்த குடும்பங்கள் நாட்டை ஆட்சி செய்யும் முறைமையில் மாற்றம் தேவையென ஜே.வி.பி கட்சி குறிப்பிட்டுள்ளது.

கொழும்பு நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

விவசாயிகளும் தொழிலாளர்களும் நாட்டை ஆட்சி செய்யக் கூடிய வகையிலான ஓர் சூழ்நிலைமை உருவாக்கப்பட வேண்டுமென ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இன்று இந்த நாட்டின் அனைத்து மக்களும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். அனைத்து சக்திகளும் வீதியில் இறங்கி போராட்டம் நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. விவசாயிகள் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நாட்டை கடந்த 65 ஆண்டுகளாக செல்வந்த குடும்பங்களே ஆட்சி செய்துள்ளன. இந்த ஆட்சிக் காலங்களில் நாட்டுக்கு நன்மை ஏற்படவில்லை என்றார். (அ-2)

# 2012.09 02 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1642-இங்கிலாந்து நாடாளுமன்றம் லண்டன் நாடக அரங்குகள் அனைத்தையும் மூடிவிட உத்தரவிட்டது.

★ 1666-லண்டனில் இடம்பெற்ற பெருந்தீயினால் மூன்று நாட்களில் புனித போல் தேவாலயம் உட்பட ஏறத்தாழ 10 ஆயிரம் கட்டடங்கள் வரை அழிந்தன.

★ 1752- ஐக்கிய இராச்சியத்தில் கிரிகோரியன் நாட்காட்டி அறிமுகப்படுத்தப்பட்டது.

★ 1792- பிரெஞ்சுப் புரட்சியின் போது இடம்பெற்ற கலவரங்களில் மூன்று உரோமன் கத்தோலிக்க ஆயர்கள் உட்பட இருநூற்றிற்கும் அதிகமான குருமார்கள் கொல்லப்பட்டனர்.

★ 1864-அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்புப் படைகள் அட்லாண்டாவை விட்டு விலகிய அடுத்த நாள் அமெரிக்கப் படைகள் அங்கு போய்ச் சேர்ந்தன.

★ 1870-பிரான்சில் செடான் என்ற இடத்தில் இடம்பெற்ற போரில் பிரஷ்யப் படையினர் பிரான்சின் மன்னனான மூன்றாம் நெப்போலியனையும் அவனது படையினர் ஒரு இலட்சம் பேரையும் கைது செய்தனர்.

★ 1885-வயோமிங் மாநிலத்தில் 150 வெள்ளையின சுரங்கத் தொழிலாளர்கள் வெளிநாட்டு சீனத் தொழிலாளர்களைத் தாக்கி அவர்களில் 28 போரைக் கொன்று 15 பேரைக் காயப்படுத்தினர். பல நூற்றுக் கணக்கானோர் நகரை விட்டுத் தப்பியோடினர்.

★ 1898- பிரித்தானிய மற்றும் எகிப்தியப் படைகள் சூடானிய பழங்குடியினரைத் தாக்கி அந்நாட்டில் பிரித்தானிய மேலாண்மையை ஏற்படுத்தினர்.

★ 1935-புளோரிடாவில் இடம்பெற்ற சூறாவளியினால் 423 பேர் உயிரிழந்தனர்.

★ 1939-இரண்டாம் உலகப் போர்: போலந்து மீதான முற்றுகையை அடுத்து கிதான்ஸ்க் நகரம் நாசி ஜேர்மனியினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

★ 1945-இரண்டாம் உலகப் போர்:பசுபிக் போர் முடிவுக்கு வந்தது. ஜப்பானின் கடைசி அதிகாரபூர்வமான சரணடைதல் டோக்கியோ வளைகுடாவில் மிசூரி என்ற அமெரிக்கக் கப்பலில் நிகழ்ந்தது.

★ 1945-வியட்நாம் பிரான்சிடம் இருந்து விடுதலையை அறிவித்து வியட்நாம் மக்களாட்சிக்குடியரசு என்ற பெயரில் (வடக்கு வியட்நாம்) ஹோசிமின் தலைமையில் ஆட்சியை அமைத்தது.

★ 1951-எஸ்.டபிள்யூ ஆர்.டி.பண்டாரநாயக்கா இலங்கை சுதந்திரக் கட்சியை உருவாக்கினார்.

★ 1958-அமெரிக்காவின் விமானப்படை விமானம் ஒன்று சோவியத் ஆர்மீனியாவில் சுட்டு வீழ்த்தப்பட்டது.

★ 1965-பாகிஸ்தான் படையினர் இந்தியாவின் காஷ்மீருக்குள் நுழைந்தனர்.

★ 1969-ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது தன்னியக்கப் பணம் வழங்கி நியூயோர்க்கில் அமைக்கப்பட்டது.

★ 1970-சந்திரனுக்கான அப்பல்லோ 15 விண்கப்பலின் திட்டம் கைவிடப்பட்டதாக நாசா அறிவித்தது.

★ 1990-மால்டோவாவின் ஒரு பகுதியான திரான்ஸ்னிஸ்திரியா தன்னிச்சையாக வெளியேறி தன்னை சோவியத்தின் ஒரு குடியரசாக அறிவித்தது. ஆனாலும் இதனை சோவியத் ஜனாதிபதி மிக்கைல் கொர்பசோவ் ஏற்கவில்லை. இன்று வரையில் இது எந்த நாட்டினாலும் அங்கீகரிக்கப்படவில்லை.

★ 1996-பிலிப்பைன்ஸ் அரசுக்கும் மோரோ தேசிய விடுதலை முன்னணிக்கும் இடையில் அமைதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

★ 1998-நோவா ஸ்கோசியாவில் சுவிட்சர்லாந்து விமானம் ஒன்று வீழ்ந்ததில் அதில் பயணம் செய்த 229 பேரும் கொல்லப்பட்டனர்.

### பிறப்பு

★ 1913-இசுரேல் கெல்ஃபாண்ட், சோவியத் கணிதவியலர் (இ.2009)

### இறப்புக்கள்

★ 1969-ஹோ சி மின் வியட்நாம் தலைவர் (பி.1890)

★ 1973-ஜே.ஆர்.ஆர்.டோல்கியென் பிரித்தானிய எழுத்தாளர் (பி.1892)

★ 2009-ராஜசேகர ரெட்டி ஆந்திர முதலமைச்சர் (பி.1949)

### இசுரேல் மொய்சேவிச் ஹெல்ஃபாண்ட்



இசுரேல் கெல்பாஃண்ட் என்பவர் சோவியத் மற்றும் அமெரிக்க கணிதவியலர். கணிதத்தில் குலக் கோட்பாடு, ஒப்புநிறுத்துக் கோட்பாடு(Representation Theory), நேயல் இயற்கணிதம் ஆகியவற்றில் ஆழமாக பங்களித்த அறிஞர். இவர் சோவியத் ஒன்றியத்தின் உயர் பெருமையாகிய லெனின் புகழ்வரிசைப் பதக்கமும் (Order of lenin), கணிதத்துறையின் வுல்ஃப் (Wolf Prize) பரிசையும் பெற்றார்.

இங்கிலாந்தின் ராயல் சொசைட்டி வெல்லோவாகவும் (அரச குமுக சிறப்பாளராகவும்) தேர்வு செய்யப்பெற்றார்.

மாசுக்கோ பல்கலைக்கழகத்தில் நெடிய ஒரு தலைமுறை முழுவதும் கணிதம் கற்பித்துக் கொண்டிருந்த இவர் தன்னுடைய 76 ஆம் அகவைக்கு சற்று முன்னர் ஐக்கிய அமெரிக்காவுக்கு குடிபெயர்ந்தார். எம்.ஐ.டி.யிலும் ஆர்வர்டு பல்கலைக்கழகத்திலும் பணியாற்றிய பின்னர் நியூஜெர்சியில் உள்ள ரட்கர்சு பல்கலைக்கழகத்தில் சிறப்புமிக்க பேராசிரியராக பணி ஏற்றார். அன்றைய உருசியப் பேரரசின் கீழிருந்த உக்ரைனில் யூதக் குடும்பத்தில் பிறந்தவர். கெல்ஃபாண்ட் பள்ளிப்படிப்பின் போதே கணிதத்தில் மிகத் திறமையுடையவராக இருந்த இசுரைல் உயர் பள்ளிக்குச் செல்லாமலேயே மாஸ்கோ அரசு பல்கலைக்கழகத்தில் நேரடியாக பட்டப் பின் படிப்புக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். அங்கு அவரது ஆய்வுநிலைப் படிப்புக்கு வழிகாட்டியாக இருந்தவர். பெரும்புகழுடைய ஆந்திரே கோல்மோகொரோவ் ஆவார்.

தொகை வடிவவியல் (Integral Geometry) என்னும் துறையில் இவர் ஆற்றிய ஆய்வுகளும் அதன் முடிவுகளும் இன்று மருத்துவத்தில் உடல் உள்ளுறுப்புக்களை நுண்படம் எடுக்கும் அணுக்காந்த ஒத்ததிர்வு படக் கலையிலும் (Magnetic Resonance Imaging,MR), கணனிவழி குறுக்கு வெட்டு புதிர்க்கதிர்ப்படம் (Cat) எடுத்தல் முதலியவற்றிலும் பெரிதும் பயன்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கம் முறையான அபிவிருத்தி எதனையும் முன்னெடுக்கவில்லை

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

(மூதூர்)

நாட்டிற்கு இலவச கல்வியை நாங்கள் தான் வழங்கினோம். ஆனால், இந்த அரசாங்கம் இலவசக் கல்வியை இல்லாதொழிக்க திட்டமிட்டுச் செயற்படுகிறது என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

மூதூர் பொது மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர்,

இன்று அரசாங்கத்தினால் ஒரு பரீட்சையைக்கூட முறையாக நடத்த முடியவில்லை. அண்மையில் நடத்திய புலமைப்பரிசில் பரீட்சைக்கான வினாப்பத்திரம் பரீட்சைக்கு முன்னே வெளியாகிவிட்டது. அதேபோல் நடைபெற்ற சாதாரணதர, உயர்தர பரீட்சைகளிலும் பிரச்சினைகள் எழுந்துள்ளன. இசட் புள்ளி பிரச்சினை இன்னும் முடிந்தபாடில்லை.

அரசாங்கம் பல்கலைக்கழகங்களை இழுத்து மூடியுள்ளது. மாணவர்களும் விரிவுரையாளர்களும் வீதியில் இறங்கி உரிமைக்காக போராடுகின்றனர். கூடுதலான பணத்தை செலவு செய்ய வேண்டிய கல்விக்கு மிகக் குறைந்தளவு பணத்தையே அரசாங்கம் செலவிடுகிறது.

முறையான அபிவிருத்தித் திட்டங்கள் எதனையும் அரசாங்கம் முன்னெடுக்கவில்லை. சமுர்த்தி திட்டத்தையும் இல்லாமற் செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. இம்முறை வெற்றிலைக்கு வாக்களித்தால் சமுர்த்தித்திட்டமும் இல்லாமல் போய்விடும்.

இன்று மக்கள் சுதந்திரமாக வியாபாரத்தையோ மீன்பிடித் தொழிலையோ செய்ய முடியாதவர்களாக உள்ளனர். இப்பகுதியில் கைவிடப்பட்ட வயல் நிலங்களில் வீடுகள் அமைப்பதற்குக் கூட தடை விதித்துள்ளனர்.

எனவே, முஸ்லிம்களின் சமய கலாசார உரிமைகளைப் பாதுகாப்பதற்கு, இலவச கல்வியை தொடர்ந்து காப்பதற்கு, தத்தமது தொழில்கள் விருத்தியடைவதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்குமாறு கேட்கின்றேன். ஆட்சியை மாற்றுவதற்கான முன்னெடுப்பாக இம்மாகாண சபைத் தேர்தல் அமையப் போகிறது என்பதையும் கூறிக்கொள்கின்றேன் என்றார். (அ-2)

## நெரிசலில் சிக்குண்டு 80 பேர் வைத்தியசாலையில்

(குருநாகல்)

குருநாகல் மாவட்டம் வாரியபொல சிறீ சுமங்கல பிரிவெனாவில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த கபிலவஸ்துவை வணங்கச் சென்ற பக்தர்கள் பலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

80 வரையிலான இந்த பக்தர்களுக்கு தலைசுற்று, வாந்தி உள்ளிட்ட சிரமங்களால் இவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கபிலவஸ்துவை வணங்கச் சென்றவர்களின் கூட்டம் அதிகமானதால் நெரிசலில் சிக்கி இவர்களுக்கு இச்சிரமங்கள் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறதாயினும் இதற்கான உண்மைக் காரணம் குறித்து வைத்தியசாலை தரப்பினர் உறுதிப்படுத்தவில்லை. (அ-2)

# முன்னேஸ்வர பலிபூஜை திகதி பின்னர் அறிவிக்கப்படும்

## ஜனாதிபதியின் இந்துமத இணைப்பாளர் கூறுகிறார்

(சிலாபம்)

யாருடைய அச்சுறுத்தல் காரணமாகவும் இந்த மிருக பலியிடும் வேள்வி பூஜை நிறுத்தப்படவில்லை. இப்பூஜை பிறிதொரு தினத்தில் நடைபெறும். அதற்கான திகதி பின்னர் ஆலய நிர்வாகத்தினால் அறிவிக்கப்படும் என்று ஜனாதிபதியின் இந்துமத விவகாரங்களுக்கான இணைப்பாளர் சிவஸ்ரீ பாலரவிசங்கர சிவாச்சாரியார் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவின் வேண்டுகோளுக்கு அமைய ஜனாதிபதியின் இந்துமத விவகாரங்களுக்கான இணைப்பாளர் சிவஸ்ரீ பாலரவிசங்கர சிவாச்சாரியார் நேற்று முன்தினம் முன்னேஸ்வரம் பத்திரகாளி அம்மன் ஆலயத்துக்கு நேரில் சென்று நிலைமைகளை ஆராய்ந்தார்.

ஜனாதிபதி வேண்டுகோளுக்கு அமையவும் இலங்கைக்குக்கொண்டு வரப்பட்டிருக்கும் கபிலவஸ்து புனித தாதுவுக்கு கௌரவமளிக்கும் வகையிலும் முன்னேஸ்வரம் பத்திரகாளி அம்மன் கோவிலில் மிருக வேள்வியை இவ்வருடம் தற்காலிகமாக நிறுத்துவதாக கோவில் நிர்வாகம் அறிவித்திருந்தது.

அதேநேரம் நேற்று நடைபெறவிருந்த பத்திரகாளி அம்மன் வேள்விப் பூஜையில் நேர்த்திக்கடன் செலுத்துவதற்காக ஆடு, கோழி கொண்டு வருபவர்கள் தடையின்றி வர முடியும் என்றார். (அ-2)

# இலங்கை மீன்பிடி படகு கொச்சியில் தரிப்பு

## ஆட்கடத்தல் நடவடிக்கை என்கிறது புலனாய்வுப்பிரிவு

கேரளா பிராந்தியத்தின் கொச்சி கரையோரத்திற்கு அருகில் இலங்கை மீன்பிடி படகொன்று நங்கூரமிட்டுள்ளதாக கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவலுக்கமைய இந்திய கரையோரப் பாதுகாப்புப் பிரிவினர் திடீர் தேடுதல் நடத்தியுள்ளனர்.

இதுதொடர்பாக புலனாய்வுப் பிரிவினர் கொச்சி கரையோரப் பாதுகாப்பு பிரிவிற்கு அறிவித்துள்ளதாக CNN-IBN LIVE இணையத்தளம் செய்தி வெயிட்டுள்ளது.

மற்றுமொரு மீன்பிடி படகின் மூலம் இலங்கை மீன்பிடி படகிற்கு நபர்கள் ஏற்றிச் செல்லப்படுவதாகவும் புலனாய்வுப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

இதுவொரு ஆட்கடத்தல் நடவடிக்கையாகும் என இந்திய பாதுகாப்புத் தரப்பு சந்தேகிப்பதாக இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்திய கரையோர பாதுகாப்புப் பிரிவிற்கு சொந்தமான கப்பலொன்றும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக அவ் இணையத்தளம் மேலும் தெரிவித்துள்ளது. (அ-2)

## வாகன விபத்தில் ஒருவர் பலி

(கொழும்பு)

மின்னேரியா ராஜஎல பகுதியில் டிப்பெண்டர் வாகனம் ஒன்றும் முச்சக்கர வண்டியொன்றும் மோதிக் கொண்டதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்து சம்பவத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த நால்வர் காயமடைந்துள்ளதாகவும் அவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

டிப்பெண்டர் வாகனத்தின் சாரதி தப்பிச் சென்றுள்ளதாகவும் அவரை கைது செய்வதற்காக பொலிஸ் குழுவொன்று ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-9)

Aptech COMPUTER EDUCATION
Unleash your potential
TOMORROW'S TECHNOLOGY TODAY
உலகின் No. 1 கணனிக்கல்லூரி இப்போது யாழ் மண்ணில்
After A/L
Gold Partnership with Microsoft, ORACLE, RedHat Linux
உலகில் 65 இலட்சம் மாணவர்கள்பயணித்த வெற்றிப் பாதையில் நீங்களும் இணையுங்கள்....!
ACCP CAREER PROGRAM
- Mobile Technology
- Web Technology
- Diploma in Information Systems Management (DISM)
- Higher Diploma in Software Engineering (HDSE)
- Advanced Diploma in Software Engineering (ADSE)

புதிய பிரிவுகள் ஆரம்பம் 4/9/2012 காலை 9 மணி
நம்ப முடியாத சலுகைகள்
விரையுங்கள்

இப்பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்கள் பட்டப்படிப்பின் இறுதி ஆண்டை பின்வரும் பல்கலைக்கழகம் ஒன்றில் தொடர முடியும்.
- Middlesex University - UK (UK Campus/ Mauritius Campus / Dubai Campus)
- University of Portsmouth - UK
- MG University - India
- RMIT University - Australia

தொழில்வாய்ப்பிற்கு ஏற்ற பயிற்சி நெறிகள்
- Desktop Office Specialist
- Website Developer
- DataBase Programmer
- Web Application Developer
- System Administrator
- IT booster - .NET
- IT booster - Java
- Smart Professional - .NET
- Smart Professional – Java
- Smart Accountant
- Smart Professional MIS
- C / C++ / C#
- AutoCAD

0212219456
No.04, Clock Tower Lane, Navalar Road, Jaffna.
(பொருளியல் கல்லூரி அருகாமை Science corner ஒழுங்கை)
(சு/902)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

28

# மகாசேனன் வரலாறு



செங்கை ஆழியான்

### மகாசேனன்

இலங்கையை ஆட்சி செய்த மன்னர்களுள் மகாசேனன் மிக முக்கியமானவன். துரதிர்ஷடவசமாக




மகாசேனன் சிலை

மகாவிகாரைக்கு எதிராக இவனது நடவடிக்கைகள் அமைந்திருந்தமையால் மஹாவம்சத்தில் உரிய இடமளிக்கப்படாமல் விடப்பட்டுள்ளான். ஜெட்டதீசன் மரணமடைந்ததும் அவனது தம்பியான மகாசேனன் அரசினை ஏற்றான். அவனது ஆட்சி 27 ஆண்டுகள் நீடித்தது (கி.பி.325- கி.பி352). ஜெட்டதீசன் இறந்த செய்தி அறிந்ததும் மகாசேனின் குருவான சங்கமித்ததேரர் இலங்கைக்கு வந்து மகாசேனனின் முடிசூட்டு விழாவை நடத்தி வைத்தார். அதன் பின்னர் இலங்கையிலேயே தங்கி விட்டார். அவர் மகாயான பௌத்தப் பிரிவைச் சேர்ந்தவர். மகாசேனனுக்கும் அவனது தமையனான ஜெட்டதீசனுக்கும் இளவயதில் குருவாக இருந்தவர்.

சங்கமித்ததேரர் தேரவாத பௌத்த பிரிவான மகாவிகாரையின் நடவடிக்கைகளைச் சிதைப்பதற்கான காரியங்களைச் செய்தார் என்கிறது மஹாவம்சம். 'அபயகிரி விகாரையைச் சேர்ந்த பிக்குகள், மகாவிகாரைப் பிக்குகளிலும் பார்க்க கட்டுப்பாடும் ஒழுக்கமும் மிக்கவர்கள்' எனச் சங்கமித்ததேரர் மன்னனுக்கு இடித்துரைத்தார். மேலும் 'மகாவிகாரையில் வாழ்பவர்கள் உண்மையான வினையக் கருத்துக்களைப் போதிப்பவர்கள் அல்லர். நாமே வினயவைச் சரியாகப் போதிப்பவர்கள்' எனக்கூறி மகாசேனனைத் தன்வசமாக்கி, 'மகாவிகாரையில் வாழ்கின்ற பிக்கு ஒருவருக்கு எவர் உணவு வழங்குகிறாரோ அவர் 100 காஹக் காசுகள் தண்டம் செலுத்த வேண்டும்' என மகாசேனன் மூலம் தண்டம் அறவிடும் ஆணையைப் பிறப்பித்தார். மகாசேனன் மூலம், மகாயானக் கருத்துக்களைக் கைப்பிடிக்குமாறு மகாவிகாரைப் பிக்குகளை வற்புறுத்தினார்.

அக்கட்டளையால் மன்னனும் மக்களும் உணவு வழங்காமையால் மகாவிகாரைப் பிக்குகள் மகாவிகாரையைக் கைவிட்டு மலைநாட்டிற்கும், உருகுணைக்கும் சென்றனர். எண்பதாண்டுகளாக மகாவிகாரை எவரும் சஞ்சரிக்காத இடமாகப் பாழடைந்தது. "மதிகெட்ட தேரர் சங்கமித்தரின் கருத்துக்களை, மதிகெட்ட மன்னன் சார்பாகவிருந்து, மகாவிகாரைப் பிக்குகளை வெளியேற்றினான். சங்கமித்ததேரரின் விசுவாசியான மதிகெட்ட மந்திரியும் அரசனின் நம்பிக்கைக்குரிய ஊழியனுமான சேனாவும், வெட்கம் கெட்ட சில பிக்குகளும் சேர்ந்து ஏழு அடுக்கு மாளிகையும் மகாவிகாரைக்கு உரியதுமான லோகபாசாவை (ஆயிரங்கால் மண்டபம்)உடைத்து, அப்பொருட்களை அபயகிரி விகாரைக்கு எடுத்துச் சென்றனர். இவ்வாறாக மகாவிகாரைக்குச் சொந்தமான பல கட்டிடங்கள் உடைத்து கொள்ளையிடப்பட்டன. அபயகிரி விகாரையை இவ்வாறு மகாவிகாரைக் கட்டடங்களில் கொள்ளையிடப்பட்ட பொருட்களைக் கொண்டு அழகுபடுத்தினர். பச்சின தீஸ்ஸபர்வதத்திலிருந்த புத்தரின் அரியபெரும் சிலையை அகற்றி, அபயகிரி விகாரையில் நிறுவினர். அபயகிரி விகாரைக்காகப் பல புதிய



ஜேத்தவனராமை விகாரை

கட்டடங்களை மகாசேனன் அமைத்துக் கொடுத்தான் என மஹாவம்சம் கவலைப்படும்.

மகாசேனனின் அமைச்சர்களில் ஒருவனின், நண்பனுமான மேகவண்ண அபயன், சங்கமித்ததேரரின் கருத்துப்படி, மகாசேனன் மகாவிகாரைக்கு ஏற்படுத்திய அழிவுகளை விரும்பவில்லை. அதனால் அவன் மன்னனுக்கு எதிராக ஒரு கலகக்காரனாக மாறி மலைநாட்டுக்குச் சென்று படைதிரட்டிக் கொண்டு, திஸ்ஸ குளத்திற்கருகில் பாசறை அமைத்துத் தங்கினான். மகாசேனனும் தன் படைகளுடன் எதிர்கொண்டான். அவ்வேளை மேகவண்ணபயன் தன்னந்தனியே மன்னனை வந்து சந்தித்தான். "நீ ஏன் எனக்கெதிராகக் கலகம் செய்கிறாய்" என மன்னன் வினவ, "நீங்கள் மகாவிகாரையை அழித்தமையால் தான்" என்றான். "நான் மகாவிகாரையை மீண்டும் கட்டித் தருவேன். எனது தவறை உணர்கிறேன்" என்றான் மகாசேனன். இவ்வாறான சமாதானத்தின் பின்னர் மன்னன் அரண்மனை திரும்பினான். யுத்தம் தவிர்க்கப்பட்டது. சமயம் காரணமாக ஏற்பட்ட இப்பூசலைத் தவிர மகாசேனனின் ஆட்சி அமைதியான காலமாகவே காணப்பட்டது. மகாசேனனின் மனைவியரில் ஒருத்தி, மகாவிகாரைக்கு மன்னனும் சங்கமித்திரதேரரும் செய்த கொடுமையைத் தாங்க முடியாதவளாகி, சதிசெய்து, சங்கமித்ததேரரையும் உதவியாகவிருந்த சேனாவையும் கொலைசெய்வித்தாள். மகாவிகாரையை மீண்டும் புதுப்பிக்க வந்த மேகவண்ணபயனுக்கு உதவிகள் புரிந்தாள். மேகவண்ணபயன் மகாவிகாரையைத் தான் சேகரித்த கட்டடப் பொருட்களைப் பயன்படுத்தித் திருத்துவித்தான். பல பிரிவேனாக் கட்டடங்களையும் அமைப்பித்தான். முன்பிருந்த பிக்குகள் மகாவிகாரையில் வந்து மீண்டும் குடியேறத்தொடங்கினர். மகாசேனனும் பித்தளையால் வடித்த இரு புத்தர் சிலைகளை போதிமரக் கோயிலின் மேற்குப் பக்கத்தில் நிறுவினான்.

மகாசேனன் சமயத் துறையில் ஆக்கிய முக்கிய பணி ஜேத்தவன விகாரையை அமைப்பித்தமையாகும். அதனால் அவன் மீண்டும் ஒரு தடவை மகாவிகாரைப் பிக்குகளுடன் முரண்பட நேர்ந்தது. தக்கிணராமப் பிரிவைச் சேர்ந்த திஸ்ஸதேரர் என்பவர் மகாவிகாரைக்குச் சொந்தமான ஜோதிவனத்தில் ஜேத்தவன விகாரையை அமைக்க விரும்பி மன்னின் அனுமதியைப் பெற்றார். அதனால் ஜேத்தவன விகாரை எல்லைக்குள் வாழ்ந்த மகாவிகாரைப் பிக்குகள் அவ்விடத்தினைவிட்டு வெளியேற நேர்ந்தது. சட்டத்திற்கு மாறாக மகாவிகாரைக்குச் சொந்தமான காணியை அபகரித்து, ஜேத்தவன விகாரையை கட்டுவித்த திஸ்ஸதேரருக்கு எதிராக மகாவிகாரைப் பிக்குகள் பிரதம அமைச்சரிடம் முறையிட்டனர். எனினும் ஜேத்தவன விகாரை கட்டிமுடிக்கப்பட்டது. ஆனால், திஸ்ஸதேரருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் பிரதம அமைச்சரினால் விசாரிக்கப்பட்டு விகாரையிலிருந்தும் சங்கத்திலிருந்தும் நீக்கப்பட்டார்.



மகாசேனனால் உடைக்கப்பட்ட ஆயிரங்கால் மண்டபம்- எஞ்சிய பகுதி

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடியேற அனுமதி வழங்காவிட்டால் கருணைக்கொலை செய்யுங்கள்

## இலங்கை அகதி அவுஸ்.அரசுக்கு உருக்கமான கடிதம்

அவுஸ்திரேலியாவில் குடியேற அனுமதி வழங்க முடியாவிட்டால் தம்மை கருணை அடிப்படையில் கொன்று விடுமாறு இலங்கை அகதி ஒருவர் அவுஸ்திரேலிய அதிகாரிகளுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

மனிதாபிமானத்துக்கு இடமில்லை. எனவே, தம்மை கருணை அடிப்படையில் கொன்று விடுமாறு குறித்த இலங்கை அகதி கோரியுள்ளார்.

எனினும், அவுஸ்திரேலிய அதிகாரிகளிடம் இருந்து இந்த கோரிக்கைக்கு இதுவரை பதில் எதுவும் வழங்கப்படவில்லை என்று த வேல்ட் டுடே குறிப்பிட்டுள்ளது.

அத்துடன் இது தனிப்பட்ட ஒருவருடைய விடயம் என்பதால் கருத்துக்கூற முடியாது என்று அவுஸ்திரேலிய குடிவரவுத் திணைக்களம் தெரிவித்துள்ளதாக த வேல்ட் டுடே சுட்டிக்காட்டியுள்ளது.

நிர்க்கதியாக இருந்த ஓசியானிக் வைக்கிங் கப்பலில் இருந்து காப்பாற்றப்பட்ட இலங்கை தமிழர் ஒருவருக்கு அகதி அந்தஸ்தை வழங்க அவுஸ்திரேலிய அரசாங்கம் இணக்கம் வெளியிட்டபோதும் இன்னும் அவர் அந்த நாட்டின் பாதுகாப்பு சட்டத்துக்குக் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு 77 பேருடன் அவுஸ்திரேலியாவுக்குச் சென்ற ஓசியானிக் வைக்கிங் கப்பலில் 2005 ஆம் ஆண்டு முதல் வெளிநாடுகளில் அகதியாக குறித்த இலங்கையரும் உள்ளடங்கியிருந்தார்.

அவர் சிறந்த ஆங்கில புலமையை கொண்டிருந்தமையால் அவர் தம்முடன் வந்திருந்தவர்கள் சார்பில் அதிகாரிகளுடன் பேசக்கூடியவராக இருந்தார்.

எனினும், ஐக்கிய நாடுகளின் அகதிகள் உயர்ஸ்தானிகரகத்தின் அங்கீகாரம் பெற்ற பின்னரே தாம் கப்பலில் இருந்து இறங்க முடியும் என்று அகதிகள் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் அவுஸ்திரேலியாவும் தமது நாட்டில் அல்லது மூன்றாம் நாடொன்றில் குடியேற்றுவதாக இந்த அகதிகளுக்கு உறுதியளித்தது. எனினும், அது இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அத்துடன் கப்பலில் பயணித்த குறித்த இலங்கையர் அவுஸ்திரேலிய பாதுகாப்பு பிரிவின் அங்கீகாரத்தை இன்னும் பெறவில்லை என்று அவரின் சட்டத்தரணி சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

## தேர்தல் பணிகளுக்காக 21 ஆயிரம் பொலிஸார்

இம் மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள வடமத்திய, சப்ரகமுவ மற்றும் கிழக்கு மாகாண சபைகளுக்கான தேர்தல் பணிகளுக்காக 21 ஆயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

தேர்தல் கடமைகளுக்காக பொலிஸ் அத்தியட்சகர்கள், உப பொலிஸ் அத்தியட்சகர்கள் 123 பேர் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். தேர்தல் தினமன்று விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். (அ-9)

## சமூக சீரழிவைத் தடுக்க கரவெட்டி பி.செ.பிரிவிலிருந்து நடைபவனி

(கரவெட்டி)



இலங்கைப் பொலிஸாரின் 146 ஆவது நிறைவையொட்டி நேற்றுக்காலை சமூக சீரழிவை தடுக்கும் நடைபவனி நெல்லியடியில் இடம் பெற்றது.

நெல்லியடி பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி ரி.காங்கரா தலைமையிலான பொலிஸார் ஏற்பாடு செய்த இந்நடைபவனிக்கு காங்கேசன்துறை பொலிஸ் அதிகாரி பெரகரா தலைமை தாங்கி வழி நடத்தினார்.

இதில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு அமைதியான முறையில் நடைபவனியில் ஈடுபட்டனர்.

பவனியில் பொலிஸார், பாடசாலை மாணவர்கள், சிவில் பாதுகாப்பு குழுவினர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள், அரச அதிகாரிகள் என்பலரும் கலந்து கொண்டு தமது சுலோக அட்டைகளில் மது ஒழிப்பு, சிறுவர் துஷ்பிரயோகம், சமூகக் சீரழிவு, விபத்துக்களை கட்டுப்படுத்தல், போதைவஸ்தை தடுத்தல்,குடும்ப வன்முறை போன்றவை எதிர்காலத்தில் இல்லாதொழிக்க அனைவரையும் ஒன்றிணைய வேண்டுமென்ற கோரிக்கை அடங்கிய சொற்றொடர்களைத் தாங்கிய பதாகைகளுடன் நின்றனர். கரவெட்டி பிரதேச செயலகத்திற்கு முன்பாக நேற்றுக்காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகிய நடைபவனி நெல்லியடி நகரில் முடிவுற்றது. (அ-3-24)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்வதற்காகவும் காங்கேசன்துறை துறைமுகத்திலிருந்து சுன்னாகம் மின்நிலையத்திற்கு பாரிய வாகனங்கள் மூலம் பொருட்களை கொண்டு வருவதற்காகவும் காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் இடையிடையே பின்வரும் பிரதேசங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ். பிரதேசமின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய இன்று ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம், பலாலி வீதியில் புன்னாலைக் கட்டுவன் முதல் பலாலி வரையான பிரதேசம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை உயர்பாதுகாப்பு வலயப்பகுதி, திருநெல்வேலிப்பிரதேசம், பரமேஸ்வரா பிரதேசம், கந்தர்மடப்பிரதேசம், ஆரியகுளம் பிரதேசம், ஸ்ரான்லி வீதி, கொன்வென்ட் பிரதேசம், யாழ்.பிரதான வீதி, குருநகர், பாசையூர், தென்மராட்சிப் பிரதேசம் முழுவதும் ஆகிய இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

## வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் அமைந்த அரியாலை பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் அ.எ.ஞானஜோதி அறிவித்துள்ளார்.

இதற்கமைய நாளை திங்கட்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை அரியாலை, பொன்னம்பலம் வீதி, கலைவாணி சனசமூக நிலையத்திலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை ஆட்காட்டிவீதி, அருளம்பல வீதிச் சந்தியிலும் வைத்து வழங்கப்படும்.

மறுநாள் செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை அரியாலை, இராஜேஸ்வரி வீதி, நிறை பார்க்கும் மையத்திலும் முற்பகல் 11.30 மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணி வரை அரியாலை ஆசீர்வாதப்பர் வீதி, பேரிய பாலத்தடியிலும் வைத்து வழங்கப்படவுள்ளது. (அ-9)

## தொழிற்பயிற்சி அதிகார சபையின் பணிப்பாளர்குழு இராஜினாமா

(கொழும்பு)

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையின் பணிப்பாளர் குழு இராஜினாமா செய்துள்ளது. இந்தப் பணிப்பாளர் குழுவில் 11 பேர் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

பணிப்பாளர் குழுவின் பதவி விலகல் குறித்து இளைஞர் விவகார மற்றும் திறன்விருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவிக்கையில்,

தொழிற்பயிற்சி அதிகாரசபை தொடர்பில் உள்ளக ரீதியான அமைச்சு மட்ட விசாரணைகள் நடைபெறுவதாக அவர் குறிப்பிட்டார். விசாரணைகளை சுயாதீனமாக முன்னெடுப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.

எனினும் பணிப்பாளர் குழுவை அடுத்த வாரமளவில் மீண்டும் நியமிக்க எண்ணியுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-2)


UNIVERSITY OF JAFFNA
BID NOTICE

The Chairman, University Procurement Committee, University of Jaffna will receive sealed Bids from the qualified contractors for the following services.

| Service Details | Refundable deposit (Rs.) | Non-refundable deposit (Rs.) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|
| Providing Facilities Management Services for Hostels at Siddha Medicine Unit, Kaithady, University of Jaffna. | 2,500.00 | 500.00 | M9/C10 (any field) or any organizations currently providing complete Facilities Management Services for any similar building |
| Providing Facilities Management Services for Kanagasuntheram Male Hostel and Sivagnanasundram Female Hostel, University of Jaffna. | 15,000.00 | 500.00 | M7/C8 (any field) or any organizations currently providing complete Facilities Management Services for any similar building |
| Providing Facilities Management Services for various Locations, University of Jaffna. | 2,500.00 | 500.00 | M9/C10 (any field) or any organizations currently providing complete Facilities Management Services for any similar building |

Bids form may be obtained from the Deputy Registrar / Capital Works & Planning Unit, University of Jaffna upon producing valid registration book or related document and receipt for the cash payment for the above fee at the Shroff's Counter, University of Jaffna until 07.09.2012.

Perfected Bids should be sealed and marked with the job and the name of the service on the top left hand corner of the envelop and sent by registered post to reach the Registrar, University of Jaffna P. Box 57, Thirunelvely, Jaffna or deposited in the tender box kept at Registrar's Office, University of Jaffna.

Bids will be accepted till 2.30 p.m on 12.09.2012 and open immediately thereafter.

Bidders or their accredited representatives could be present at the time of opening of Bids.

Bid forms may be inspected by the Bidders free of charge at the Capital Works & Planning Unit of this University during office hours, if necessary.

P.O Box 57,
Thirunelvely,
Jaffna.
28.08.2012 (அ/348)

Registrar
University of Jaffna


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ உதவிகளை வழங்க சீன பாதுகாப்பு அமைச்சர் இணக்கம்



(கொழும்பு)

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் தொடர வேண்டும் என சீன பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் லியாங் குவாங்லீ பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் நேற்று முன்தினம் நடத்திய சந்திப்பின் போது கூறியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சில் நடந்த சீன பாதுகாப்பு அமைச்சர் தலைமையிலான குழுவினருடனான இந்தச் சந்திப்பில் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையிலான இலங்கை பாதுகாப்பு அதிகாரிகளை கொண்ட குழு பங்கேற்றது.

இச்சந்திப்பின் போது இலங்கை படையினருக்கான ஆயுத உதவிகள் மற்றும் பயிற்சிகள் தொடர்ந்து வழங்கப்படும் என சீன பாதுகாப்பு அமைச்சர் உறுதியளித்துள்ளார்.

குறைந்த செலவிலான இராணுவ உதவித் திட்டங்கள், ஆளணி பயிற்சிகளை விஸ்தரித்தல், கடற்சார் பாதுகாப்பு ஒத்துழைப்புக்களை விஸ்தரித்தல், பயங்கரவாத ஒழிப்பு நிபுணத்துவத்தை பகிர்ந்து கொள்ளல் போன்ற துறைகளில் இரு நாடுகளிடையே ஒத்துழைப்பை அதிகரிக்கவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

சுமார் ஒன்றரை மணிநேரம் இடம்பெற்ற இச்சந்திப்பில் பாதுகாப்பு படையினருக்கான கல்லூரியில் கட்டடமொன்றை நிர்மாணிப்பதற்கும் ஆயிரத்து 564 மில்லியன் ரூபாவை வழங்குவதாகவும் அவர் உறுதியளித்தார். இது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றும் கைச்சாத்திடப்பட்டது.

பாதுகாப்பு செயலாளரின் வேண்டுகோளுக்கிணங்க படையினரின் விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்வதற்கான உதவிகளை வழங்கவும் சீன பாதுகாப்பு அமைச்சர் குவாங்லீ உறுதியளித்தார்.

யுத்தத்தின் பின்னரான காலத்தில் இலங்கை அரசாங்கம் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் பயங்கரவாதத்தை தோற்கடித்ததன் பின்னர் அடைந்துள்ள வெற்றிகள் குறித்து சீன தூதுக்குழுவினருக்கு கோத்தபாய ராஜபக்ஷ விளக்கமளித்தார். (அ-2)

# கூட்டமைப்பினராகிய நாம் உயிரை கொடுத்தாவது இனஉரிமையை காப்போம்

## செல்வம் எம்.பி. சபதம்

பிள்ளையானும் கருணாவும் அரசாங்கத்திற்கு வால்பிடிப்பவர்கள். சகல தமிழர்களும் பாதுகாப்புடன் இருப்பது இன்று வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் தமிழர்களின் உரிமைக்காகவும் அவர்களது உயிர்களுக்காகவும் நடத்தி வரும் போராட்டங்களால்தான் என்பதை அவர்கள் மறந்து விடக்கூடாது என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கூறினார்.

திருகோணமலையில் நேற்று முன்தின மிரவு கிழக்கு மாகாண சபைத்தேர்தலில் போட்டியிடும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர்களை ஆதரித்து இடம்பெற்ற கூட்டத்தில்பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இந்தத் தேர்தலில் அரசாங்கத்திற்கு ஆதரவாக வாக்களித்து வெற்றியடையச் செய்ய வேண்டும் என்று சில தமிழர்கள் வெட்கம் கெட்ட தமிழ் மக்களிடம் இப்போது வாக்குக்கேட்டு வருகின்றனர்.

அவர்களின் வெட்கம் கெட்ட தனத்திற்கு நாமும் உடந்தையாக இருக்க முடியுமா? தமிழன் அடக்கப்பட வேண்டியவன். அவன் அடிமையாக இருக்க வேண்டும் என்ற நினைவுடன் செயற்படும் அரசாங்கம் இன்று அதே தமிழர்களிடம் வந்து வாக்குக்கேட்டு அவர்களது வாக்குகளாலேயே வெற்றியடைய நினைப்பது வேடிக்கையானது.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் அரசாங்கம் வெற்றி பெற்றால் முள்ளிவாய்க்காலில் விடுதலைப்புலிகள்தான் அழிக்கப்பட்டார்கள். வேறு யாரும் அழிக்கப்படவில்லை. வேறு எதுவும் அங்கு நடக்கவில்லை என்று பிள்ளையானும் கருணாவும் ஜனாதிபதியுடன் இணைந்து கொண்டு சர்வதேச சமூகத்திடம் உரத்து கூறுவார்கள். இதனை நாம் அனுமதிக்க முடியுமா?

இந்த தேர்தலில் அரசு வெற்றியடையுமாயின் நம்மை நெருங்கி வந்து கொண்டிருக்கும் சர்வதேசம் நம்மைவிட்டு அகன்று சென்று விடும். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வெற்றியடையுமாயின் தமிழர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தான் நிற்கிறார்கள் என்ற செய்தி சர்வதேசத்திற்கு தெளிவாக உணர்த்தப்படும்.

பல்லாயிரம் போராளிகள் பொதுமக்கள் தமிழ் இனத்திற்காகவும் மொழி உரிமைக்காகவும் உயிர் கொடுத்தார்கள். அதே தியாக வழியில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினராகிய நாங்களும் எங்கள் உயிர்களை கொடுத்தாகிலும் இன உரிமையை பாதுகாப்போம் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-2)

# இலஞ்சம் பெற்ற உயர் அதிகாரி கைது

(பதுளை)

ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பணத்தை இலஞ்சமாக பெற்றுக்கொள்ள முயற்சித்த மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகளால் நேற்று காலை கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

தனியார் பேருந்து உரிமையாளர் ஒருவரிடம் குறித்த இலஞ்ச தொகையை பெற்றுக்கொண்ட போது கண்டி நகரில் வைத்து இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

குறித்த பேருந்து உரிமையாளருக்கு வீதி அனுமதிப்பத்திரம் ஒன்றை வழங்க விசேட செயலாற்றவென குறித்த இலஞ்சம் பெறப்பட்டுள்ளது.

கிடைக்கப்பெற்ற முறைப்பாடு ஒன்றின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் மேலதிக விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (அ)

# கொழும்பில் இருந்து தங்கம் கடத்திய இளைஞர்கள் கைது

கொழும்பில் இருந்து சென்னைக்கு 17 இலட்சம் ரூபா மதிப்புள்ள தங்க நகைகளை கோட் கொலரில் மறைத்துக் கொண்டு வந்த யாழ்ப்பாணத்தை சேர்ந்த வாலிபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு நேற்று முன்தினம் இரவு கொழும்பில் இருந்து விமானம் வந்தது. இந்த விமானத்தில் தங்க நகைகள் கடத்தப்பட்டு வருவதாக விமான நிலைய சுங்க இலாகா அதிகாரிகளுக்கு இரகசிய தகவல் கிடைத்தது. இதையடுத்து விமானத்தில் வந்த பயணிகளை சுங்க திணைக்கள அதிகாரிகள் கண்காணித்தனர்.

அப்போது இலங்கை யாழ்ப்பாணத்தை சேர்ந்த இருவர் எங்களிடம் சுங்கவரி செலுத்தும்படியான பொருட்களும் இல்லை எனக் கூறிவிட்டு வெளியே செல்ல முயன்றனர்.

இதனால் இவர்கள் மீது சந்தேகம் கொண்ட சுங்க திணைக்கள அதிகாரிகள் அவர்களிடம் விசாரணை செய்த போது இருவரும் முன்னுக்குப்பின் முரணாகவே பேசியுள்ளனர். உடனே அவர்களிடம் இருந்த உடைமைகளை சோதனை செய்த போது அதில் எதுவும் கிடைக்கவில்லை.

மேலும் அவர்கள் அணிந்த இருந்த கோட்டை கழற்றி சோதனை செய்த போது அதன் கொலர் பகுதியில் ஏதோ பொருட்கள் இருப்பதை கண்டுபிடித்தனர். உடனே கொலரில் போடப்பட்டு இருந்த தையலை பிரித்து பார்த்த போது அதில் தங்கச்சங்கிலிகள் மறைத்து வைத்து கடத்தி வந்ததை கண்டுபிடித்தனர். இதையடுத்து ரூ. 17 இலட்சம் மதிப்புள்ள 530 கிராம் தங்க நகைகளை பறிமுதல் செய்தனர்.

இது தொடர்பாக இலங்கையை சேர்ந்த இருவரையும் கைது செய்தனர். இவர்கள் யாருக்காக தங்க நகைகளை கடத்தி வந்தனர். இதன் பின்னணியில் உள்ளவர்கள் யார்? என்று சுங்க திணைக்கள அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். (அ-2)

## தெற்கு அதிவேக மார்க்கமூடாக 750 மில்லியன் வருமானம்

கடந்த 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி தெற்கு அதிவேக மார்க்கம் ஆரம்பிக்கப்பட்டது. அன்றிலிருந்து இதுவரையான காலப்பகுதி வரை சுமார் 750 மில்லியன் ரூபா வருமானம் கிடைத்துள்ளதாக துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

நாளொன்றுக்கு அதிவேக மார்க்கத்தின் ஊடாக மூன்று மில்லியன் ரூபா வருமானம் கிடைத்து வருவதாக அமைச்சின் செயலாளர் ரஞ்சித் பிரேமசிறி குறிப்பிட்டுள்ளார்.

தெற்கு அதிவேக மார்க்கத்தினுள் நாளாந்தம் எண்ணாயிரம் முதல் ஒன்பதாயிரம் வரையான வாகனங்கள் பிரவேசிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-9)

## ஆங்கிலதினப்போட்டி

(சிவநகர்)

கிளி/வலயமட்ட ஆங்கிலதினப் போட்டிகளில் எழுத்தாக்கம் தவிர்ந்த ஏனைய போட்டிகள் எதிர்வரும் 5 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் கிளி. இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கோட்ட மட்டத்தில் இப்போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஆங்கில பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் க.மயில்வாகனம் அறிவித்துள்ளார். (அ-3-254)

## இ.போ.ச. பேருந்து தீப்பற்றி எரிந்தது

பதுளையில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்று தீப்பிடித்த எரிந்து சாம்பலாகியுள்ளது.

ஹப்புத்தளை ஆயிஸ்பீல்ல பகுதியில் வைத்து இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று பிற்பகல் 2.20 மணியளவில் விபத்து இடம்பெற்றுள்ள நிலையில் ஹோமாகம டிப்போவுக்கு சொந்தமான பேருந்தே எரிந்துசாம்பலாகியுள்ளது. இயந்திரக் கோளாறு காரணமாக இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இனியாவது, இனமோதல் சூழல் உருவாகாமல் தடுக்குமா அரசு?

ஏ.ஆர்.எம். இமித்தியாஸ் அமெரிக்க தெம்பிள் பல்கலைக்கழகம்

"பேரினவாத ஆட்சியாளர்கள் தமிழ்மக்களின் தேசியப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வை ஒருபோதும் முன்வைக்கப் போவதில்லை என்பது இப்போது வெட்ட வெளிச்சமாகி விட்டது. எனவே நடக்க முடியாத விடயத்தில் நம்பிக்கை வைத்து, தொடர்ந்தும் அதே பழைய பாதையில் நடைபோட இனியும் நாம் தயாரில்லை...எமது அரசியல் சுதந்திரத்திற்கான இந்தப் போராட்டத்தை விரைவாக ஏற்று அங்கீகரிக்குமாறு, நீதியின் வழி நடக்கும் உலக நாடுகளையும் சர்வதேச சமூகத்தையும் நாம் அன்போடு வேண்டுகிறோம்" இதுதான் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் 2006 ஆம் ஆண்டு ஆற்றிய மாவீரர் உரையின் முக்கிய பகுதியாகும்.

இலங்கை அரசியலை உன்னிப்பாக கவனிப்பவர்கள் இந்த உரை தமிழ் மக்களின் ஏமாற்றங்களையும் நம்பிக்கை யீனங்களையும் மட்டுமல்ல, தென்னிலங்கை சிங்களவர்களின் அரசியல் இரண்டகத்தையும் காத்திரமான முறையில் அம்பலப்படுத்துகிறது என்பதை ஒத்துக்கொள்வார்கள்.

தென்னிலங்கை அரசியல்வாதிகள் வடக்கையும் கிழக்கையும் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தலைவர்களோடு பொருள் பொதிந்த அரசியல் பேச்சுவார்த்தைகளை நடத்த முற்றாக மறுத்துவிட்டார்கள். மாறுபட்ட கருத்தையும் பன்மைத்துவத்தையும் மறுக்கும் சிங்கள அரசியல் நிறுவனத்தை தமிழீழ விடுதலைப்புலிகள் எதிர்த்தார்கள்.


விடுதலைப்புலிகள் விடுதலைப் போராளிகளா அல்லது அரசு சொல்வதைப்போன்று பயங்கரவாதிகளா என்ற கேள்விக்கு வரலாறு தீர்ப்பளிக்கட்டும். எனது வாதம் என்னவென்றால், தமிழீழ விடுதலைப்புலிகளின் பிறப்பு, இலங்கை அரசின் வரலாற்று வேர்களிலும், அதன் தமிழ் விரோத நிகழ்ச்சித் திட்டத்தினாலும் நிகழ்ந்தது. இதில் ஒரு முக்கிய அம்சத்தைப் பார்க்க வேண்டும். தமிழீழ விடுதலைப்புலிகளின் நிகழ்ச்சித் திட்டத்தை சாதாரண தமிழ் மக்கள் ஏற்றுக் கொண்டது, இரவோடு இரவாக எடுத்த முடிவு அல்ல. இலங்கை அரசு மிதவாதத் தமிழர்களின் கோரிக்கைகளை ஏற்க மறுத்ததே இலங்கையில் தமிழ்த்தேசியவாதம் தோற்றம் பெற்றதற்கு முக்கிய காரணியாகும். தமிழ்த் தலைவர்கள் சொல்வதைச் செவிமடுத்துக் கேட்டு அவர்களது நியாயமான கோரிக்கைகளை கொடுப்பதற்குப் பதில், அன்றைய ஆளும் சிங்களத்தலைவர்கள் தமிழ்த் தலைவர்களையும் தமிழர்களையும் தாக்கினார்கள். அத்தோடு நின்றுவிடாமல் சிங்களவர்களை கூலிக்கு அமர்த்தி அப்பாவித் தமிழர்களையும் மிதவாதத் தலைவர்களையும் கொன்றார்கள். ஒன்றை நாம்தெரிந்து கொள்ள வேண்டும். 1956ஆம் ஆண்டுக்குப் பின்னர் காலத்திற்குக்காலம் சிங்களவர்களின் கட்டுப்பாட்டில் இருந்த அரசுகள் மிதவாதத் தமிழ் தலைமைகளோடு பேச மறுத்தன. தமிழரசுக் கட்சி இதற்கு நல்ல எடுத்துக்காட்டு.

இலங்கையின் ஐக்கியத்தை குலைக்காமல் விரிவான தீர்வொன்றை தமிழரசுக்கட்சி முன்வைத்தது. ஆனால், தமிழ் மிதவாதிகளது தீர்வுத்திட்டத்தை சிங்களக் கூட்டுத்தலைமையும் போட்டிப்பேரினவாதமும் கண்ணெடுத்துப்பார்க்க மறுத்தன. சோகம் என்னவென்றால், பேரின ஆளும் வர்க்கம் வன்முறையைப் பயன்படுத்தியது. இது அரசியல் முறைமையில் தமிழர் தரப்பு வைத்திருந்த நம்பிக்கையை போக்கடித்து தமிழர்களை வன்முறையைத் தேர்ந்தெடுக்க வைத்தது. இந்த உண்மையை இலங்கையின் முன்னைநாள் பிரதமரான ரணில் விக்கிரம சிங்க ஐக்கிய அமெரிக்காவுக்குச் சென்றபோது எதிரொலித்தார். அவர் சொன்னதாவது, "தமிழர்கள் அமைதியான முறையில் எதிர்ப்புத் தெரிவிக்க முயற்சித்தார்கள். அது விரைவில் வன்முறையாக, தாழ்நிலை அடைந்தது. அடிப்படை மனக்குறைகள், தீர்க்கப் படாதபோது அது தமிழ் வன்முறைக் குழுக்கள் தோன்றுவதற்குரிய களம் அமைக்கப்பட வழிகோலியது."

இது தமிழ் தீவிரவாத இயக்கங்கள், குறிப்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் 1970 கடைசியில் தோற்றம் கொண்டமைக்கான காரணங்களை புரிந்து கொள்வதற்கு உதவுகிறது. ஆனால், இனவாத போக்கைக் கொண்ட சிங்கள ஆட்சித் தலைவர்கள் அரசியலில் ஒருவரை ஒருவர் விலைக்கு மேல் விலைவைத்து வாங்கும் வழக்கத்தை கைவிடவில்லை. சிங்களவர்களது அனுதாபத்தை வென்றெடுக்க, உணர்ச்சிகளுக்குத் தூபமிடும் கொள்கைகளை கைக்கொண்டார்கள். வடக்கில் வாழும் தமிழ் மக்களில் குறிப்பிடத்தக்க பகுதியினர் கொடிய போர் முடிந்த பின்னரும், தாங்கள் அநீதியான முறையில் நடத்தப்படுவதாகவும் சிங்கள இராணுவம் தங்களது நிலத்தை பிடித்து வைத்திருப்பதாகவும் தெரிவிக்கிறார்கள்.

கொழும்பு, போர்முடிந்தபின்னர், தமிழர்களோடும் முஸ்லிம்களோடும் அவர்களது பதட்டங்களை நீக்க, அரசியல் அறிஞர்கள் அழைக்கும் போர் முடிந்த பின்னர் அதிகாரப்பகிர்வு-பற்றிப் பேசுவதில் தொடர்ந்து தோல்வி கண்டுள்ளது. இது சிங்கள அரசியல் வர்க்கத்தின் அரசியல் குறிக்கோள்களை விளக்குகிறது.

இதில் உள்ள முரண்நகை என்ன வென்றால் 30 ஆண்டுகால மோதலுக்குப் பின்னரும்- பல்லாயிரக்கணக்கான இலங்கையரை, பெரும்பாலும் தமிழர்கள், போரில் பலிகொள்ளப்பட்ட பின்னரும் இலங்கையின் சிங்கள அரசியல் வர்க்கம் சிறுபான்மை இனமக்களுக்கு, சிங்கள அரசியல் வர்க்கத்தை தீவிரமாக ஆதரிக்கும் முஸ்லிம் தலைவர்கள் உட்பட, நியாயமான மனக்குறைகள் உண்டு அவற்றுக்கு நியாயமான அரசியல் தீர்வு தேவை என்பதை அங்கீகரிக்க இன்னமும் மறுக்கிறது. உண்மையில் சிங்கள அரசியல் வர்க்கம் வேண்டும் என்றே தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களுக்குச் சிக்கல்கள் இருப்பதைப் புரிய மறுக்கின்றது. உண்மையில் சிங்கள அரசியல் வர்க்கம் வேண்டும் என்றே தமிழர் மற்றும் முஸ்லிம்களுக்கு சிக்கல் இருப்பதை புரிய மறுகிறது. காரணம் தமது எதிர்ப்பாளர்களைத் தோற்கடிக்க தாமே உருவாக்கிய அரசியல் கலாச்சாரத்தை மாற்ற மறுக்கிறார்கள். தங்களது குறுகிய அரசியல் கலாச்சாரத் துக்கு வலிமை தேட 5ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட மஹாவம்சத்தைப் பயன் படுத்துகிறார்கள். மஹாவம்சம் சிங்கள உயர்குழாத்தின் உருவாக்கத்தில் முக்கிய பாத்திரம் வகிக்கிறது. மஹாவம்சம் சிங்கள மக்களே பௌத்தத்தின் பாதுகாவலர்கள் என்றும் முழு இலங்கைத் தீவும் சிங்களவர்களுக்கும் பௌத்தத் திற்கும் புனிதமான வாழ்விடம் என்றும் சொல்கிறது.



இலங்கைத் தீவில் 21 மில்லியன் மக்கள் வாழ்கிறார்கள். இலங்கையின் இனவாரி உள்நாட்டுப் போரில் 100,000 மேலான மக்கள் கொல்லப்பட்டார்கள். எனவே பிரிவினை, விருப்பமான ஒரு தீர்வாக இருக்க முடியாது. ஆனால், ஒரு சமூகத்துக்குத் தொடர்ந்து உரிமைகளும் ஆட்சியில் பங்கும் மறுக்கப்படுமேயானால், அவர்கள் பெரும்பான்மை, அடக்கி ஆளும் சமூகத்தின் சிறைக் கைதிகளாக நடத்தப்பட்டால் அதற்கு ஒரு முடிவு கட்டப்பட வேண்டும். ஓரங்கட்டப்பட்ட மக்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும். பிரிந்து போகும் விருப்பத்தை எதிர்க்கலாம். எப்போது என்றால் ஆளும் உயர்குழாம் இனவுணர்வுகளுக்கு அப்பால் சிந்திக்கவும் செயற்படவும் உண்மையாக விரும்பினால்-அதிகாரத்தை சிறுபான்மை மக்களோடு பகிர்ந்து கொள்ளும் ஈடுபாடு இருந்தால்-வேறுவிதமாகச் சொன்னால் மத்தியிலும் மாநிலத்திலும் அதிகாரத்தை முறைப்படி பகிருவதற்கு ஒரு பொறி முறை இருக்க வேண்டும். இப்படிச் செய்தால் தமிழ்த்தேசியவாதிகளின் நிகழ்ச்சிநிரல்களை பலவீனப்படுத்தும் சாத்தியம் உண்டு. ஆனால், அப்படியொரு உடன்பாட்டை நடைமுறைப்படுத்த உள்நாட்டிலும் அனைத்துலக மட்டத்திலும் அரசியல் விருப்பம் இருக்க வேண்டும்.

மேலும் ஒரு குறிப்பிட்ட சிறுபான்மை சமூகம் பெரும்பான்மையோடு ஒத்து வாழுமாறு வற்புறுத்துவது தவறான அரசியலாகும். அத்தோடு தமிழர்களுக்கு அரசியல் இசைவு மற்றும் குடியுரிமை இரண்டுக்கும் இடைவெளி இல்லாத போது அப்படி வற்புறுத்துவது தவறாகும். நாட்டின் சில பகுதிகளில் தாங்கள் பெரும்பான்மையினர் என அவர்கள் சொல்கிறார்கள். அந்த நிலையில் பிரிவினை மிகவும் சாத்தியமாகும் பிரபாகரன் போல் விட்டுக்கொடுப்பற்ற சிங்கள பேரினவாதத்தின் நிலைப்பாடு ஒரு போதும் தமிழர்களுக்க நீதி வழங்கப்போவதில்லை எனப் பல தமழர்கள் நினைக்கிறார்கள்.

எனவே, தமிழர்கள் சிங்கள பேரினவாதத்தின் விட்டுப்கொடுக்காத நிலைப்பாடு தமிழ் மக்களுக்கு தமிழீழம் என்ற ஒரு சுதந்திர நாடு தவிர வேறு தேர்வு எமக்கு இல்லை என்ற நிலைமையை உருவாக்கியுள்ளது எனச் சொல்லும் போது அது ஜனநாயக முறைமையில் பாகுபாடற்ற தன்மை மற்றும் சிங்கள ஆளும் உயர்குழாம் பற்றிய அவர்களது விரக்தி இரண்டையும் பிரதிபலிக்கிறது.

மேலே கூறியவாறு பிரிவினைக்கு நல்ல மாற்று, தோல்விகண்ட ஒற்றையாட்சி ஆட்சிக்கு அப்பால் செல்லும் அரசியல் சூத்திரங்களாகும். அப்படியான சூத்திரங்கள் ஏனைய குழுக்களோடு தத்தம் சொந்த அடையாளங்களையும் விழுமியங்களையும் இழக்காது ஒத்துவாழ ஓர் இடைவெளியை உண்டாக்கலாம். ஒற்றுமைபற்றிய வாதத்தின் அடிப்படை அதனை ஏற்றுக் கொள்வதாகும். மற்றவர்கள் செய்யும் தெரிவுகளை அவர்கள் எந்த இனம் அல்லது மதம் என்ற அடையாளத்துக்கு அப்பால் நாம் ஏற்றுக் கொள்ளத் தயாராக இருந்தால் நாங்கள் அவர்களது நம்பிக்கையை வென்றெடுப்பதோடு அல்லாமல் பொதுவான இலக்குகளுக்கு அவர்களது பற்றுறுதியையும் வென்றெடுக்கலாம். மறுபுறம் எமது விருப்புத் தேர்வுகளை மற்றவர்கள் மீது திணித்தால் அப்படிப்பட்ட அரசியல் வன்முறையையும் உறுதியற்ற தன்மையையும் தூண்டலாம். தன்மானம், சுயநிர்ணயம் மற்றும் சுதந்திரம் இருந்தால் வெவ்வேறுபட்ட இனக்குழுக்களுக்கு இடையில் ஒற்றுமை மற்றும் அமைதி பிறக்கும். வேறு வார்த்தைகளில் சொன்னால் சிறுபான்மையினர் தாங்கள் இழந்த நம்பிக்கையை கட்டியெடுப்பி தமது அரசியல் தன்னாட்சி மூலம் தமது குடியுரிமையை நிலைநாட்டினால் வெவ்வேறு இனக் குழுக்களுக்கு இடையே காணப்படும் பதற்றம் மறைந்து போகும்.


தமிழ்த் தலைவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் நீதிவழங்க வேண்டும் என்றால் சிங்கள அரசியல் வர்க்கம், அவர்களோடு பேச வேண்டும். இன்று காணப்படும் மோதலுக்குத் தீர்வு காண்பதற்குரிய வழிகளில் அவர்களுக்கு நீதிவழங்குவது ஒரு வழியாகும். நீதி, கண்ணியமான அமைதி மற்றும் வாய்ப்புக்கள் இல்லாத ஒரு சூழ்நிலையில் சிறுபான்மை இனத் தலைவர்கள் தோற்றம் பெறுகிறார்கள்.

கொழும்பு, மோதலுக்குக் காலாக இருந்த அடிப்படைக் காரணங்களை மறந்துவிடக்கூடாது. தமிழீழ விடுதலைப் புலிகளின் பிறப்புக்கு அவை தான் காரணமாக இருந்தன. தேர்தல்கள், ஆரோக்கியமான மக்களாட்சிமுறைமையின் பிரிக்கமுடியாத உறுப்பாகும். ஆனால், எது மக்களாட்சியை மேன்மைப்படுத்துகிறது என்றால், பன்முகத் தன்மையும் நீதியுமாகும். அந்தச் சூழலில் தான் மக்கள் உண்மையான அரசியல், சமூக மற்றும் கலாசார தன்னாட்சியை அனுபவிக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் திணைக்களத்தின் 146 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு நேற்று நடைபவனி





(யாழ்ப்பாணம்)

பொலிஸ் திணைக்களத்தின் 146 ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு யாழ்.மாவட்ட சிவில் பாதுகாப்புக்குழுவின் ஏற்பாட்டில் குற்றச் செயல்களை கட்டுப்படுத்தும் நோக்கில் பேரணி ஒன்று நேற்று நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணப்பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக காலை 8.30 மணியளவில் ஆரம்பமான இந்தப் பேரணி மணிக்கூட்டு கோபுர வீதியூடாக யாழ்.வீரசிங்கம் மண்டபத்தை சென்றடைந்து பின்னர் கே.கே.எஸ் வீதியூடாக ஆஸ்பத்திரி வீதியை அடைந்தது.

ஆஸ்பத்திரி வீதியூடாக மின்சார நிலைய வீதியை சென்றடைந்த இந்தப் பேரணி மீண்டும் ஆஸ்பத்திரி வீதியை வந்தடைந்து பின்னர் மணிக்கூட்டு கோபுர வீதியில் உள்ள யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தை முற்பகல் 10 மணியளவில் சென்றடைந்தது.

யாழ்.குடாநாட்டில் அதிகரித்து வரும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்தும் வகையில் பொது மக்களுக்கு விழிப்பணர்வு ஏற்படுத்தும் வகையில் இந்தப் பேரணி நடத்தப்பட்டதாக ஏற்பாட்டாளர்களும் பொலிஸாரும் தெரிவித்தனர்.

உங்களுடைய பாதுகாப்பிற்காக நாங்கள் அர்ப்பணிக்கின்றோம் என்னும் தொனிப் பொருளில் இடம்பெற்ற இந்தப் பேரணியில் சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுப்போம், விபத்துக்களை தடுப்போம், மதுவை ஒழிப்போம், தொல்பொருட்களை பாதுகாப்போம் என்னும் வாசகங்கள் எழுதப்பெற்றிருந்த பதாகைகளையும் பேரணியில் பங்கு கொண்டிருந்தவர்கள் தமது கைகளில் ஏந்தியிருந்தனர்.

சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பங்கு கொண்டிருந்த இந்தப் பேரணியில் பொலிஸ் உத்தியோகத்தர்கள், சிவில் பாதுகாப்பு குழு உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலரும் பங்கு கொண்டிருந்தனர்.

அத்தோடு 200 இற்கு மேற்பட்ட முச்சக்கர வண்டிகளும் பேரணியில் பங்கு கொண்டிருந்ததால் போக்குவரத்து நெரிசலும் காணப்பட்டது.

இருப்பினும் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் நடைபெற்ற பேரணி என்பதால் வீதி விபத்துக்கள் ஏற்படாத வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகளும் மெற்கொள்ளப்பட்டிருந்தன.

குடாநாட்டில் அதிகரித்து வரும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்துமாறு பலதரப்பட்டவர்களினாலும் பொலிஸாரிடம் கோரிக்கை விடப்பட்டுள்ள நிலையில் இவ்வாறு பொலிஸார் பேரணியொன்றை நடத்தியுள்ளனர்.

அத்தோடு குற்றச்செயல்களை கட்டுப்படுத்த இந்தப் பேரணி ஊடாக பொதுமக்களுக்கு பகிரங்கமாக அழைப்பினையும் விடுத்துள்ளனர். (அ-6)

## விடைத்தாள் மதிப்பீட்டாலும் பாடசாலை நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைக்காக நாளையதினம் திங்கட்கிழமை திறக்கப்படுமென பாடசாலை அதிபர் செ.சேதுராஜா அறிவித்துள்ளார்.

மேற்படி பாடசாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் இடம்பெறுகின்ற போதிலும் பாடசாலையின் கல்விச் செயற்பாடுகள் நடைபெறுமென அவர் தெரிவித்துள்ளார்.

அன்றைய தினம் மாணவர்கள் அனைவரையும் பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (அ-2)

## கருத்தரங்கும் ஆலோசனையும்

(யாழ்ப்பாணம்)

சிறிய,நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கான திறன் அபிவிருத்தி கருத்தரங்கும் எதிர்கால முதலீடு தொடர்பான ஆலோசனையும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை யாழ்ப்பாணம் ரில்கோ விடுதியில் நடைபெறவுள்ளது.

இலங்கை வங்கி நடத்தும் மேற்படி நிகழ்வில் அனைவரையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார். (அ-9)

## போக்குவரத்து வாகனங்கள் 24 மணிநேரமும் கண்காணிக்கப்படும்

### யாழ்.மாவட்ட பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள போக்குவரத்து பேருந்துகள், வாகனங்கள் என்பன இன்றிலிருந்து 24 மணிநேரமும் கண்காணிக்கப்படும் என யாழ்.மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக்பெரேரா தெரிவித்தார்.

அதிக புகை கக்குதல், போக்குவரத்து பேருந்துகளில் அதிகளவான பயணிகளை ஏற்றுதல் போன்றவற்றிற்கும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

போக்குவரத்து பேருந்துகளில் இடம்பெறும் சிறுதிருட்டுக்களை அலட்சியப்படுத்தாது அப்பேருந்தின் சாரதியே பொலிஸாருக்கு தெரியப்படுத்தல் வேண்டும். அவ்வாறு அவர்கள் முறைப்பாடு செய்வதற்கு பின்னடித்தாலும் பலவந்தமாக முறைப்பாடு பதிவு செய்வதற்கு பொலிஸாருக்கு உரிமையுண்டு.

தற்போது வீதி விபத்துகக்கள் அதிகரித்துள்ள நிலையில் 24 மணிநேரமும் இன்றிலிருந்து போக்குவரத்து பொலிஸார் கடமையில் ஈடுபடவுள்ளனர்.

தற்போது வீதி அகலிப்பு இடம்பெறும் பகுதிகளிலுள்ள பாடசாலைகளுக்கு முன்பாக இடம்பெறும் விபத்துக்களை தடுப்பதற்கு ஒவ்வொரு பாடாலைக்கு முன்னாலும் ஒவ்வொரு போக்குவரத்து பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

## தமிழர்கள் உரிமையை கேட்பதால் இனவாதமாக சித்திரிக்கின்றனர்

### மாவை எம்.பி. தெரிவிப்பு

தமிழ்த்தேசிய கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசும் இனவாதம் பேசுகின்றன என்று அமைச்சர் டலஸ் அழகப்பெரும கூறியிருக்கிறார். இது என்ன நியாயம்? எமது உரிமையைக் கேட்டால் அது இனவாதமா? என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கேள்வியெழுப்பியுள்ளார்.

கல்முனை சேனைக்குடியிருப்பில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு அவர் கேள்வி எழுப்பினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எங்களுடைய மக்களை கொன்று குவித்து உலகத்தின் முன்னால் குற்றவாளியாக கணிக்கப்பட்டு அதை எதிர்நோக்கி கொண்டிருக்கிற நீங்கள் தமிழ், முஸ்லிம் மக்களுடைய காணிகளை வளமான இடங்களை அபகரித்துக் கொண்டிருக்கிற நீங்கள், அது தான் எங்கள் அபிவிருத்தி என்று கூறி எங்களை ஏமாற்றி கொண்டிருக்கிற நீங்கள், எங்களுடைய இன அடையாளத்தை எங்களுக்கு உரித்தான மத சுதந்திரத்தை தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் பேசுகிற தமிழ் மொழியை சகோதரர்கள் போல் வாழ்கின்ற எங்களை மொழி, கலை, கலாசார, பண்பாடுகளை எங்களுடைய இன, மத, அடையாளங்களை அழிக்க நினைக்கின்றவற்றை எங்கள் மக்களிடம் எடுத்து கூறினால் முஸ்லிம் கட்சிகளும் தமிழ் கட்சியும் இனவாதம் பேசுகிறது என்று கூறுகிறது இந்த அரசாங்கம். இது நியாயமா? என்றார். (அ-2)


**CANADA வில் குடும்பத்துடன் குடியேறுவதற்கான VISA ஒழுங்குகள்**

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் இளமாணி முதுமாணிப் பட்டம் பெற்றவர்கள் குறுகிய காலத்தில் Canada செல்வதற்கு ஒழுங்குகள் குறுகிய காலத்தில் செய்து கொடுக்கப்படுகிறது. அத்துடன் Nurses, Accountant, BioMedical Science Diploma முடித்தவர்கள் ஆகியோருக்கு குடும்பமாக (Family Visa)

CANADA TOURIST VISA அரசாங்கத்தில் பதிவு செய்து இலங்கையில் எப்பாகத்திலும் சொந்த வியாபாரம் செய்பவர்கள், 4 மாதங்கள் நன்கு பேணப்பட்ட வங்கி கணக்கு உடையவர்களுக்கு Canada வுக்கு Tourist Visa ஒரு மாத காலத்திற்குள் பெற்றுத் தர ஆலோசனை வழங்கப்படும்.

CYPRUS - நாட்டில் மேலதிக படிப்புக்கு செல்பவர்களுக்கு குறைந்த கட்டணத்தில் Visa ஒழுங்குகள். இவ்விசா மூலம் Paris, Swiss, Italy, Germany போன்ற நாடுகளுக்கு சென்று வரலாம். மொத்த செலவு 600,000 மட்டுமே.

**Rainbow Travels**

தொடர்புகள்
0778980652
0212219596

30/2, Third Lane,
Power House Road,
Jaffna.
(C-907)

**குறைந்த கட்டணத்தில் பொதிகள் சேவைகள் (Parcel Service)**

கனடா, லண்டன், சுவிஸ், ஜேர்மனி, பிரான்ஸ், நோர்வே போன்ற நாடுகளுக்கும் மத்திய கிழக்கு நாடுகளுக்கும் (சவுதி அரேபியா, குவைத், துபாய், டோகா கட்டார், பாகிறின்) குறைந்த கட்டணத்தில் சேவைகள்.

Canada - 1 கிலோ - 2600
London - 1 கிலோ - 1500 } மூன்று நாட்களில் ஒப்படைக்கப்படும்.
Canada - 1 கிலோ - 600
London - 1 கிலோ - 500 } ஏழு நாட்களில் ஒப்படைக்கப்படும்.

உங்கள் உணவு, உடை, அலங்காரப் பொருட்கள் CD, VIDEO, ALBUM - போன்ற பொருட்களை அனுப்பி வைக்கலாம்.

**Rainbow Travels**

கிழமையில் ஏழுநாட்களும் திறந்திருக்கும்

30/2, Third Lane,
Power House Road, Jaffna.
021 221 9596
(C-907)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நன்றியுள்ள பாம்பு

முன்னொரு காலத்திலே ஒரு சிறுவன் இருந்தான். அவன் தனது இளமைப்பருவத்திலிருந்தே பிராணிகளிடம் அன்புள்ளவனாக இருந்தான். அவன் ஒரு பிராணியையும் கொல்ல மாட்டான். பிராணிகள் காயம்பட்டால் அவற்றுக்கு மருந்து கட்டி அவன் குணப்படுத்துவான்.

ஒருநாள் அவன் பாடசாலையிலிருந்து வீடு நோக்கிப் போய்க் கொண்டிருந்தான். அவன் வழியில் ஒரு சிறிய பாம்பைக்கண்டான். அந்தப் பாம்பு கிட்டத்தட்ட மூன்று அங்குல நீளமிருக்கும். அந்தப்பாம்பு குறையுயிரில் அங்கே கிடந்தது. அதனால் அவனுக்கு இரக்கம் உண்டானது. அவன் அப்பாம்பைத்தூக்கி ஒரு மைப்பெட்டியுள் போட்டான். பின்னர், அப்பெட்டியை வீட்டுக்கு எடுத்துச் சென்றான். பாம்புக்கு வைத்தியம் செய்தான். பாம்பு குணமடைந்தது. சிறுவன் ஒவ்வொரு நாளும் அப்பாம்பைத் தன்னுடன் பாடசாலைக்கு எடுத்துச் சென்றான்.

ஒருமாதம் கழிந்தது. குட்டிப் பாம்பு மீண்டும் சுகமும் பலமும் பெற்றது. அது சிறுவனுக்கு நன்றி பாராட்டியது. அது அவனைத் தீண்டியது கிடையாது. சிறுவனும் பாம்பு பெரிதாக வளரும் வரை வளர்த்து வந்தான்.

பாம்பு பெரிதாக வளர்ந்து விட்டது. எனவே, சிறுவன் அதைத் தன்னுடன் பாடசாலைக்கு எடுத்துச் செல்ல முடியவில்லை. அவன் அப்பாம்பை வீட்டிலேயுள்ள தனது மேசை இலாச்சியுள் வைத்தான். பாம்பு சிறுவனுடன் விளையாட அவன் பாடசாலையிலிருந்து வரும்வரை காத்துக் கொண்டிருந்தது.

ஊரிலுள்ள பாடசாலையில் சிறுவனின் படிப்பு முடிந்தது. சிறுவன் வேலைக்காகப் பட்டினத்துக்குப் போக விரும்பினான். பட்டினத்தில் வேலைக்காக அவன் ஒரு பரீட்சை எடுக்கவேண்டியிருந்தது. அவன் பாம்மையும் ஒரு பெட்டியுள் வைத்துத் தூக்கிக்கொண்டு போக முடியவில்லை. எனவே, பாம்பை வழியிலே ஒரு குன்றின்மேல் திறந்து விட்டான். எனவே, பாம்பைப் பார்த்து, நீ இங்கே எனக்காகக் காத்துக் கொண்டிரு. நான் திரும்பி வரும் போது எடுத்துச் செல்வேன் என்று கூறினான்.

பின்னர், அவன் பத்துநாட்கள் வரை காட்டுக்கூடாகப் பிரயாணம் செய்தான். அவன் காட்டைக்கடந்து பட்டினத்துக்கு வந்து சேர்ந்தான். அவன் பட்டினத்தில் தங்குவதற்கு ஒரு காலி அறையைத்தேட முயன்றான். பரீட்சை எடுக்கவந்த பெருந்தொகையான இளைஞர்கள் முன்னராகவே அறைகள் எல்லாவற்றிலும் நிறைந்துவிட்டார்கள். ஆகையால், அவனுக்கு வசதியான ஓர் அறை கிடைக்கவில்லை. எவ்வாறாயினும் அங்கே ஒரு காலி அறை இருந்தது. ஆனால் ஒருவரும் அந்த அறையிலே தங்குவதற்கு துணியவில்லை. ஏனென்றால், அங்கே ஒரு பேய் இருக்கிறது. அது அந்த அறையில் போய்க் குடியிருப்பவர்களின் இரத்தத்தைக் குடிக்கிறது என வதந்தி உலாவியது. சிறுவனும் இதைக்கேள்விப்பட்டான். ஆனால், அச்சிறுவன் பேய்க்குப் பயப்படவில்லை. எனவே, உண்மையைக்கண்டுபிடிக்கவிரும்பிய அவன், அந்த அறையிலேயே தங்குவதற்கு விரும்பினான். வீட்டுக்காரனும் அறைக்கு எந்தவித வாடகை




யும் தரவிடாது அறையை அச்சிறுவனுக்குக் கொடுத்தான்.

அன்று பகல் கழிந்து இரவாயிற்று. அன்றிரவு அவனது அறையில் பிராணிகள் கொடூரமாகச் சண்டை பிடிக்கும் சத்தங்கள் கேட்டன. அறையோ மிகவும் இருட்டாக இருந்தது. அறையில் வெளிச்சம் இல்லை. சிறுவன் ஒரு மெழுகுதிரியைக் கொளுத்திப்பிடித்தவாறே சத்தங்கள் வந்த திசையை நோக்கி நகர்ந்தான். அவன் இருட்டின் ஊடாகச் சிறிதுநேரம் அவதானித்தான். பின்பு, சத்தங்கள் அடங்கி விட்டன. அவன் தைரியத்துடன் மெழுகுதிரியைப்பிடித்துக்கொண்டு முன்னோக்கி நடந்தான். அங்கே ஒரு இராட்சத மட்டத்தேளும் ஒரு பாம்பும் இறந்து கிடப்பதைக் கண்டான். அவன் அந்தப் பாம்பை அடையாளம் கண்டு கொண்டான். அது அவன் வளர்த்த பாம்பேதான். அவன்வழியில் ஒரு குன்றில்விட்டு வந்த அதேபாம்பு. அந்தப்பாம்பு ஆபத்தில் தன்னைக் காப்பாற்றுவதற்காகத் தன்னைத் தொடர்ந்து வந்திருக்கவேண்டும் என உணர்ந்தான். அவன் அடக்க முடியாத துக்கம் அடைந்தான். அவனது கண்ணிலிருந்து கண்ணீர் பெருகியது. அவன் அந்தப் பாம்பை எடுத்து ஒரு [illegible] இடத்திலே புதைத்தான். அறையில் நிம்மதியாகத் தங்கியிருந்தான். சிறுவன் பரீட்சையிலே உச்சப் புள்ளிகள் பெற்றுச் சித்தியடைந்தான். அவன் ஒரு சிவில் சேவை அலுவலராக உத்தியோகம் பார்த்தான். சில நாட்களின் பின் பாம்பு புதைத்த இடத்தைத் தோண்டினான். அந்தப் பாம்பின் எலும்புகளை எடுத்து நினைவுச் சின்னமாகப் பேணி வைத்தான்.

இன்னொரு இளைஞன் அந்தப் பாம்பின் கதையைக் கேள்விப்பட்டான். நன்றிமறவாத அந்த இளைஞனும் தனக்குத் துணையாக ஒரு பாம்பை வளர்க்க விரும்பினான். ஆகவே, அவன் பாம்பின் முட்டை ஒன்றைத்

## நாட்டார் கதைகள்

தேடிக் கொண்டு காட்டுக்குச் சென்றான். அவனுக்கு ஒரு பாம்பு முட்டை கிடைத்தது. அவன் அந்த முட்டை பொரிக்கும் வரை பாதுகாத்து வைத்திருந்தான். அந்த இளைஞன் பாம்புக் குட்டியை மிகக் கவனமாக வளர்த்தான். பாம்புக்குட்டி பெரிதாக வளர்ந்தது. பாம்பு அவனுடன் நட்பாக இருந்தது. அது என்றும் நன்றியுடனும் விசுவாசத்துடனும் அவனுக்குத் துணையாக இருந்தது.

அந்த இளைஞனுக்கு ஊரிலுள்ள பாடசாலைப் படிப்பு முடிந்தது. அவன் பட்டினத்திற்குச் சென்று பரீட்சை எடுக்கவேண்டியிருந்தது. அதற்காக அவன் அவசரமாகப் புறப்பட்டான். அவன் ஒரு பெட்டியில் தான் வளர்த்த பாம்பையும் எடுத்துக்கொண்டு போனான். அவன் அந்தப் பாம்மை வழியிலுள்ள ஒரு குன்றின் மேல் திறந்துவிட்டான். அவன் பாம்பைப்பார்த்து, உனது சின்னப் பருவத்திலிருந்து உன்னைக் காப்பாற்றி வந்தேன். ஆனால், இப்போது உன்னை இங்கே விட்டுவிட்டுப் போக வேண்டியிருக்கிறது. மேலும் உன்னை என்னுடன் தூக்கிக் கொண்டு செல்ல முடியாதிருக்கிறது. நான் செய்த நன்றியை என்றும் மறந்துவிடாதே என்று கூறினான்.

அவனுக்கு அப்பாம்பு பளபளவெனப் பிரகாசிக்கும் மாணிக்கக்கல் ஒன்றை வாயிலிருந்து கக்கிக் கொடுத்தது. இந்த மாணிக்கக்கல் இருட்டிலும் பிரகாசம் கொடுக்கும்.

அந்த இளைஞன் மிக மகிழ்ச்சியடைந்தான். அவன் அப்பாம்பிற்கு நன்றி கூறிவிட்டு அப்பால் விரைவாகச் சென்றான். பின்பு ஒருநாள் அவன் அந்த மாணிக்கக்கல்லை அந்நாட்டு மன்னனுக்குப் பரிசு கொடுத்தான். அதைப் பெற்ற மன்னன் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தான். மன்னன் அந்த இளைஞனை நகரின் ஆளுநராக நியமித்தான்.

அவன் ஆளுநராக வந்ததும் பேராசைக்காரனாக மாறினான். அவன் கற்பனை செய்தான். ஒரு மாணிக்கக்கல் என்னை ஆளுநராக்கியது. அப்படியானால் எனக்கு மேலும் இரண்டு மாணிக்கக்கற்கள் கிடைத்தால் என்று தனக்குள் சிந்தித்தான்.

எனவே, தான் வளர்த்த பாம்பு வசிக்கும் குன்றிற்குப் போனான். அவன் பாம்பைச் சந்தித்து தனக்கு இன்னும் ஒரு மாணிக்கக்கல் தரும்படி கேட்டான். அது பாம்புக்குப் பிடிக்கவில்லை. பாம்பு அவனை ஏசி நீ ஒரு பேராசைக்காரன். நீ என்னை அன்பிற்காக வளர்க்கவில்லை. என்னிடம் பிரதியுபகாரம் கருதியே வளர்த்தாய். நீ ஒரு சுயநலக்காரன். பார்,பார் உனக்கு ஒரு பாடம் படிப்பிக்கிறேன். அது மற்றவர்களுக்கும் நல்ல பாடமாய் இருக்கும் என்று கூறியது.

அப்பாம்பு இளைஞனின் முகத்தில் தனது வாயிலிருந்து நஞ்சைக் கக்கியது. அந்த நஞ்சுபட்டு அவன் முகம் எரிந்தது. இளைஞன் பெரிய வேதனையுடன் அங்கிருந்து ஓடிச் சென்றான். அவன் தனது முகத்திற்கு வைத்தியம் செய்வித்தான். அந்த வேதனை மாறப் பல மாதங்கள் சென்றன. எனினும் அவனுடைய முகம் பழைய முகம் போல அழகாக மாறவில்லை. முகம் முழுவதும் வடுக்கள் காணப்பட்டன. அவை அவனது வாழ்நாள் முழுவதும் மாறாத வடுக்களாக விளங்கின. மேலும் அவை அவனது கெட்ட செயலை நினைவுபடுத்திக் கொண்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் பதவிவிலகப் போவதில்லை தேர்தல் வரை பொறுத்திருங்கள்

## பிரதமர் அறிவிப்பு

(டில்லி)

நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு விவகாரத்தில் பிரதமர் பதவியை இராஜினாமா செய்யும் பேச்சுக்கே இடம் இல்லை என்று மன்மோகன் சிங் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

நிலக்கரி சுரங்க ஒதுக்கீட்டில் மத்திய அரசுக்கு ஒரு இலட்சத்து 86 ஆயிரம் கோடி இழப்பு ஏற்பட்டதாக மத்திய கணக்கு தணிக்கை அதிகாரியின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதனால் பிரதமர் மன்மோகன் சிங் பதவி விலக வேண்டும் என்று பாரதீய ஜனதா உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வற்புறுத்தி வருகின்றன. இந்த கோரிக்கையை முன்வைத்து எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபடுவதால் நேற்று முன்தினம் 8 ஆவது நாளாக பாராளுமன்றம் முடங்கியது.

மேலும் இந்தப் பிரச்சினையை முன் வைத்து பாரதீய ஜனதா போராட்டத்திலும் ஈடுபட்டுள்ளது.

இந்த நிலையில் அணிசேரா நாடுகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஈரான் நாட்டுக்கு சென்றிருந்த பிரதமர் மன்மோகன் சிங் அங்கிருந்து நேற்று முன்தினம் டில்லி திரும்பியுள்ளார்.

அப்போது விமானத்தில் வைத்து நிருபர்களுக்கு பேட்டி அளிக்கையில்,

நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு விவகாரத்தில் இராஜினாமா செய்யும் பேச்சுக்கே இடம் இல்லை என்று திட்டவட்டமாக அறிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது,

5 ஆண்டுகள் ஆட்சி நடத்த ஐக்கிய முற்போக்கு கூட்டணியை மக்கள் தேர்ந்து எடுத்து இருக்கிறார்கள். எனவே, மக்கள் தீர்ப்பை மதித்து பாராளுமன்றம் செயற்பட பாரதீய ஜனதா அனுமதிக்க வேண்டும். பாராளுமன்ற ஜனநாயகத்தை கட்டிக்காக்கும் பொறுப்பு அனைவருக்கும் உள்ளது. மக்களுக்காக பணியாற்றும் கடமை அரசாங்கத்துக்குள்ளது. அதற்கு இடையூறு செய்யக்கூடாது.

முக்கிய பிரச்சினைகளில் இருந்து மக்களின் கவனத்தை திசை திருப்பும் வகையில் பாரதீய ஜனதா செயற்படுகிறது. இப்படி செயற்படுவது ஜனநாயகத்துக்கு விரோதமானது ஆகும்.

நிலக்கரி சுரங்க ஒதுக்கீடு விவகாரத்தில் நான் பதவி விலகும் பேச்சுக்கே இடம் இல்லை. அடுத்த தேர்தல் வரை பாரதீய ஜனதா பொறுத்து இருக்க வேண்டும். மக்களுக்கு நாங்கள் ஆற்ற வேண்டிய கடமைகளை செய்ய அனுமதிக்க வேண்டும்.

பிரதமர் பதவியின் கண்ணியத்தை கட்டிக் காக்கும் பொறுப்பு எனக்கு உள்ளது. இதனால் பிறருடன் கருத்து யுத்தத்தில் ஈடுபட நான் தயாராக இல்லை.

எனவே, முன்பு நான் சொன்னதைப் போலவே மௌனம் கடைப்பிடிப்பதையே சிறந்ததாக கருதுகிறேன் என அவர் கூறினார். (அ-2)

# மூன்று கோடி மதிப்புள்ள ஹெரோயின் பறிமுதல்

(ஜலந்தர்)

பஞ்சாப் மாநிலம் ஜலந்தரில் 3 கோடி ரூபா மதிப்பிலான போதைப்பொருட்களை பொலிஸார் பறிமுதல் செய்தனர். இதுதொடர்பாக 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணையில் இவர்கள் கபுர்தலா கிராமத்தில் உள்ள ஒருவரிடம் போதைப் பொருளை பெற்றதாக தெரிவித்தனர்.

இதேபோல் ஜக்ரல் கிராமத்தில் ஹெரோயின் வைத்திருந்ததாக ஒருவர் கைது செய்யப்பட்டார். (அ-2)

# ஓராண்டுகள் ஆனாலும் ஈகுவடோரில் இருப்பேன்

## அசாஞ்சே தெரிவிப்பு

(குயிடோர்)

விக்கிலீக்ஸ் இணையதளத்தின் அதிபரான ஜூலியன் அசாஞ்சே அமெரிக்காவின் பல இரகசிய தகவல்களை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தினார்.

இவர் மீது கற்பழிப்பு புகார் கூறப்பட்டது. இந்த வழக்கு சுவீடன் நாட்டு நீதிமன்றத்தில் விசாரணையில் இருப்பதால் அவரை நாடு கடத்த உத்தரவிடப்பட்டது. ஆனால், அவர் லண்டனில் இருக்கும் ஈகுவடோர் நாட்டு தூதரகத்தில் தஞ்சம் புகுந்து விட்டார். எனவே, அவரை நாடு கடத்துவதில் முட்டுக்கட்டை ஏற்பட்டது.

இந்நிலையில் ஒரு ஆண்டு ஆனாலும் ஈகுவடோர் தூதரகத்திலேயே தங்கி இருப்பேன் என அசாஞ்சே தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் ஈகுவடோர்தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் கூறுகையில், இந்த பிரச்சினை தூதர் மூலம் தீர்வுக்கு வரலாம். சுவீடன் அரசாங்கம் வழக்கை கைவிட வேண்டும். இதற்கு 6 மாதம் முதல் ஒரு ஆண்டு வரை ஆகலாம். அதுவரையில் நான் ஈகுவடோர் தூதரகத்தில் தங்க நேரிடலாம் என்று கூறியுள்ளார். (அ-2)



சுவீடன் நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள சீன விவசாயத்துறை அமைச்சர் ஹான்சாங்பூ (வலது) ஸ்டாக்ஹோல்ம் நகரில் அந்நாட்டின் ஊரக விவகாரத்துறை அமைச்சர் எஸ்கில் எல்லேண்ட்சன்னை சந்தித்தபோது...

# தானே புயலால் பாதிப்புக்கு ஒரு கோடி ரூபா ஒதுக்கீடு

## "ஜெ" அறிவிப்பு

(சென்னை)

தானே புயலால் பாதிக்கப்பட்ட மக்களின் துயரினை நீக்கும் விதத்தில் கொங்கிறீட் வீடுகள் கட்டித்தரப்படும் என்று முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளதாக தமிழக அரசு நேற்றைய தினம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கடந்த 2011 ஆம் ஆண்டு இறுதியில் தானே புயல் தமிழகத்தை தாக்கியதன் விளைவாக கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள கட்டமைப்புக்களையும் பயிர்களையும் வீடுகளையும் படகுகளையும் பலத்த சேதத்திற்கு உள்ளாக்கி அப்பகுதி மக்களின் உடைமைகளையும் வாழ்வாதாரங்களையும் சூறையாடிவிட்டுச் சென்ற நிலையில் போர்க்கால அடிப்படையில் மீட்பு, நிவாரணம் மற்றும் மறுவாழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக ஒரு கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. (அ-2)

# பெங்களூரில் நாசவேலைக்கு திட்டம் தீட்டிய தீவிரவாதிகள் நால்வர் ஆந்திராவில் கைது

(பெங்களூர்)

பெங்களூரில் நாச வேலைக்கு சதித்திட்டம் தீட்டிய 11 தீவிரவாதிகள் நேற்று முன்தினம் அதிரடியாக கைது செய்யப்பட்டனர். அவர்கள் அனைவரும் டி.ஆர்.டி.ஓ. நிறுவனம், பத்திரிகை மற்றும் மருத்துவ துறைகளில் நல்ல பதவியில் வேலை செய்து வந்துள்ளனர் என கூறப்படுகிறது.

டுபாயில் உள்ள லஷ்கர்-இ-தொய்பா தீவிரவாதிகள் இவர்களை மூளை சலவை செய்து தற்கொலை தாக்குதல்கள் மற்றும் தொடர் குண்டுவெடிப்புகள் உட்பட பல்வேறு நாசவேலைக்கு திட்டமிட்டிருந்தது தற்போது தெரியவந்துள்ளது.

இதற்காக 11 பேரில் சிலர் டுபாய் சென்று ஆயுதப் பயிற்சி பெற்று வந்ததும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மத்திய உளவுத்துறை சரியான நேரத்தில் கொடுத்ததகவலின் பேரில் சிக்கிய 11 பேரிடமும் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தியபோது மேலும் பல திடுக்கிடும் தகவல்கள் தெரியவந்தன.

தங்கள் கூட்டாளிகள் 6 பேர் ஆந்திராவில் இருக்கிறார்கள் என பகீர் தகவலையும் வெளியிட்டனர். இதையடுத்து தனிப்படை பொலிஸார் ஐதராபாத்தில் மிஸ்ரிகஞ்ச் என்ற பகுதியில் உள்ள குல்ஷன்-இ-இக்பால் காலனியில் ஒரு வீட்டை முற்றுகையிட்டு அதிரடி சோதனை நடத்தினார்கள்.

அந்த வீட்டில் இருந்த உபைதுர் ரஹ்மான் என்ற வாலிபரை கைது செய்தனர். பெங்களூரில் கைதான 11 தீவிரவாதிகளுடன் நெருக்கமான தொடர்பு வைத்திருந்ததற்கான ஆதாரங்கள் சிக்கின.

ஆந்திராவில் நாசவேலை செய்ய இவன் தலைமையில் 6 பேரை டுபாயில் இயங்கும் லஷ்கார்-இ-தொய்பா தீவிரவாதிகள் தயார்படுத்தி வந்தது தெரியவந்துள்ளது.

ஐதராபாத்தில் இனக்கலவரத்தை தூண்ட இவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு பயிற்சி அளித்த தீவிரவாதிகள் அனைவரும் பாகிஸ்தானை சேர்ந்தவர்கள்.

அரசியல்வாதிகளை கொலை செய்து, அதிலும் குறிப்பாக பா.ஜ.க.எம்.பிக்கள், எம்.எல்.ஏ.க்களை கொலை செய்து கலவரத்தை பரவச் செய்ய இவர்களுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டிருந்தமையும் தெரியவந்தது. (அ-2)

# இருவரை சுட்டுக்கொன்றவர் தன்னையும் சுட்டுக் கொன்றார்

(நியூயோர்க்)

அமெரிக்காவில் சுப்பர் மார்க்கெட்டில் புகுந்த வாலிபர் ஒருவர் சரமாரியாக துப்பாக்கியால் சுட்டதில் ஊழியர்கள் 2 பேர் பலியாகினார்கள். துப்பாக்கி சூடு நடத்தியவர் பின்னர் தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

நியூயோர்க் அருகே நியூஜெர்சி நகரில் பத்மார்க் என்ற சுப்பர் மார்க்கெட் உள்ளது. இங்கு ஏராளமான ஊழியர்கள் பணியாற்றி வருகிறார்கள். இந்த சுப்பர் மார்க்கெட்டில் நேற்று முன்தினம் [illegible] புகுந்த வாலிபர் ஒருவர் திடீரென்று அந்த சுப்பர் மார்க்கெட்டை மூடிக்கொண்டு ஊழியர்கள் வெளியே செல்ல விடாமல் அடைத்தான். இதனால் அதிர்ச்சி அடைந்த ஊழியர்கள் அங்குள்ள ஜன்னல் அருகே முடங்கினர்.

பின்னர் அவர் கடையினுள் சிக்கிய ஊழியர்களை நோக்கி சரமாரியாக துப்பாக்கியால் சுட்டார். இதில் குண்டு பாய்ந்து 2 ஊழியர்கள் பலியானார்கள். துப்பாக்கி சூடு நடத்தியவர் பின்னர் தன்னைத்தானே அதே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டார். (அ-2)

# வரதட்சணை கொடுமைக்கு ஆயுள் தண்டனை வேண்டும்

## அமைச்சர் திராத் பரிந்துரை

(புதுடில்லி)

மத்திய மகளிர் மற்றும் குழந்தைகள் வளர்ச்சித்துறை அமைச்சர் கிருஷ்ணா திராத். இவர் தனது அமைச்சகம் சார்பில் வரதட்சணை கொடுமை குற்றத்துக்கு கடும் தண்டனை விதிக்க வேண்டும் என்று சட்ட அமைச்சகத்துக்கு சிபாரிசு செய்துள்ளார்.

இதுபற்றி பெண் மந்திரி திராத் கூறியதாவது, நாட்டில் வரதட்சணை கொடுமை குற்றங்களை குறைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதில்ஒருகட்டமாகவரதட்சணைகொடுமை சம்பந்தமான குற்றங்களுக்கு தற்போதுள்ள தண்டனை போதாது. அதை ஆயுள் தண்டனையாக அதிகரிக்க வேண்டும் என்று மத்திய சட்ட அமைச்சகத்துக்கு சிபாரிசு செய்து கடிதம் எழுதியுள்ளேன். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2013 ஆம் ஆண்டில் இடமாற்றம் கோரும் ஆசிரியர்களுக்கான அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 2013 ஆம் ஆண்டிற்கான ஆசிரியர் இடமாற்ற விண்ணப்பங்களை அதிபர்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி எதிர்வரும் 7 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி திகதிக்கு பின்னர் சமர்ப்பிக்கப்படும் (விசேட மருத்துவ காரணங்கள் தவிர்ந்த) எந்தவொரு விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ. உதயகுமார் அறிவித்துள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பாக கடந்த 24 ஆம் திகதி நடைபெற்ற ஆசிரியர் தொழிற்சங்கப் பிரதிநிதி களுடனான கலந்துரையாடலின் போதே முடிபு எடுக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களால் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் யாவும் அதிபர்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர்களின் புறக்குறிப்புடன் வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

அதிபர்களிடமிருந்து கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் யாவும் சுயவிபரக் கோவையுடன் பரிசீலிக்கப்பட்டு வலய இடமாற்ற சபைத் தீர்மானத்தின் பின்னர் மாகாணக் கல்வித் திணைக்களத்திற்கு எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்

எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு பின்னர் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் மாகாணக் கல்வித் திணைக்களத்தினால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

இவ் இடமாற்ற விண்ணப்பங்களைப் பரிசீலிக்கும் போது ஆசிரியர்களின் சேவைக் காலம் தொடர்பாக பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டிய விடயங்கள் வருமாறு,

- நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக் காலத்தினை கவனத்திற் கொள்ளல் வேண்டும்.
- குறித்த வலயத்தில் மேலதிகமாகவுள்ள ஆசிரியர்கள் பற்றாக்குறையுள்ள வலயங்களுக்கு இடமாற்றம் கோரும் பட்சத்தில் வலய சேவைக்காலம் கருத்திற் கொள்ளாது விடுவித்தல் வேண்டும்.
- இடமாற்றத்தின் போது பாடசாலைகளை அதிகஷ்டம், கஷ்டப் பிரதேசப் பாடசாலைகள் என வகைப்படுத்தல் வலய இடமாற்றச் சபையால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.
- வன்னி மாவட்டத்தைச் சொந்த இடமாகக் கொண்ட ஆசிரியர்கள் 6 வருட சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்ததன் பின்னரே இடமாற்றத்துக்கு விண்ணப்பிக்க முடியும்
- ஏனையோரின் சேவைக்காலங்கள்

1.அதிகஷ்டப் பிரதேச பாடசாலை எனின் வலய சேவைக்காலம் -4 வருடங்கள்

2.கஷ்டப் பிரதேச பாடசாலை எனின் வலய சேவைக்காலம் -5 வருடங்கள்

3.வசதியான பாடசாலை எனின் வலய சேவைக்காலம் - 6 வருடங்கள் என அமைத்தல் வேண்டும்.

- வருடாந்த இட மாற்றத்துக்கு ஆசிரியரின் சேவைக்காலம் கணிப்பிடும் போது எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை கணிக்கப்படல் வேண்டும்.

***ஏழு வருடங்களுக்கு மேல் ஒரே பாடசாலையில் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கான இடமாற்றம்***

- அதே பாடசாலையில் ஏழு வருட சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்த 55 வயதுக்குட்பட்ட ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படல் வேண்டும்.
- ஒரு பாடசாலையின் பகுதித் தலைவர்களை இடமாற்றம் செய்யும் போது அவர்களுக்குப் பதிலாக வேறு பாடசாலயின் பகுதித் தலைவர்கள் இடமாற்றம் செய்யப்படுவதனைக் கருத்திற் கொள்ள வேண்டும்.
- ஆரம்பநிலை, இடைநிலை ஆசிரியர்களுக்கான இடமாற்றம் எதிர்வரும் 2013 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கமும் க.பொ.த.உயர்தர வகுப்புக்களுக்கான ஆசிரியர்கள் இடமாற்றத்தினை பாடசாலை மூன்றாம் தவணைக்காக ஆரம்பிக்கும் திகதியிலும் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.
- ஏழு வருடங்களுக்கு மேல் கடமையாற்றிய பின்னர் வேறு பாடசாலைக்கு இடமாற்றம் வழங்கப்பட்ட ஆசிரியர்களுக்கு குறித்த பாடசாலையில் உரிய காலத்தினைப் பூர்த்தி செய்யாமல் மீண்டும் முன்னர் கடமையாற்றிய பாடசாலைக்கு இடமாற்றம் வழங்கப்படலாகாது போன்ற விடயங்களை கவனத்திற் கொண்டு செயற்படுமாறு அவர் கேட்டுள்ளார்.

(அ-9)

# பிரதேச சபைகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்க முடியாது

## ரோந்து நடவடிக்கையின் போது கண்காணிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

எல்லா பிரதேச சபைகளுக்கும் பொலிஸ் பாதுகாப்பு வழங்க முடியாது. வேண்டுமானால் ரோந்து நடவடிக்கையில் ஈடுபடும் பொலிஸாரை கண்காணிக்குமாறு அறிவுறுத்த முடியும் என யாழ்.பிரதிப் பொலிஸ்மா அதிபர் எரிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர்களினால் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த மாதம் 22 ஆம் திகதி அதிகாலை 2 மணியளவில் வலிகாமம் தெற்கு (சுன்னாகம்) பிரதேச சபையின் தலைமைக்காரியாலயம் மீது (அன்றையதினம் உத்தியோகபூர்வமாக திறக்கப்படவிருந்த புதிய கட்டடம்) இனந்தெரியாத நபர்களினால் கழிவு ஒயில் வீச்சு மேற்கொள்ளப்பட்டது.

அப் பிரதேச சபையின் கடந்த மாத மாதாந்த பொதுக்கூட்டத்தின் போது கழிவு ஒயில் வீச்சுக்கு இலக்கான கட்டடத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு கோருவதெனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இது தவிர வலிகாமம் தென்மேற்கு (மானிப்பாய்) பிரதேச சபையினால் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறு பிரதேச சபையினால் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் கடிதம் மூலம் வேண்டுகோள் விடுவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பிரதேச சபைகளினால் விடுக்கப்படும் வேண்டுகோள்கள் தொடர்பில் என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள் எனக் கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அத்தோடு எதிர்வரும் காலத்தில் இவ்வாறான சம்பவங்களை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் இரவு ரோந்துப்பணியில் ஈடுபடும் பொலிஸாரை பிரதேச சபைக் கட்டடங்களின் பாதுகாப்பு தொடர்பில் கண்காணிக்குமாறு அறிவுறுத்துவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(அ-6)

உயர்தர பரீட்சைகளின் பின்
"நல்லதோர் ஆரம்பம்"
உங்கள் கல்விக்கான சேமிப்பு
சிஎஸ்சி-ஏசியனுடன் தொடங்கட்டும்.



ஸ்கொலர்ஷிப் பரீட்சை
செப்டெம்பர் 9th ஞாயிற்றுக்கிழமை
Mega ஸ்கொலர்ஷிப்
CSC - ASIAN COMPUTER EDUCATION
You can Win Upto 75%
Quality & Affordability
M E G A
கொம்ப்யூட்டர் புலமைப்பரிசில்
• பரீட்சை அனுமதி முற்றிலும் இலவசம்.
• பரீட்சையை தமிழ், or ஆங்கிலத்தில் எழுதலாம்.
• 14 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் பங்குபற்றலாம்.
• 25 பொது அறிவு வினாக்கள் ,சரியான விடையை தேர்ந்தெடுக்கும் முறையில்(MCQ) கேட்கப்படும்.
• பரீட்சை 30 நிமிடங்கள் மட்டுமே.
• இலவச பாடநூல்கள் (இந்தியா & இலங்கை).
• தவணைமுறை கட்டண வசதி.
• சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள்.
(909)
Computer Education
Multimedia Training
English Language Training
Degree Access Programme
Vocational Soft Skills Training
இலவச பரீட்சை மாதிரி வினாத்தாளையும் (Model Paper) அனுமதிகளையும் எமது பயிற்சி மையங்களில் பெற்றுக்கொள்ளலாம்
மேலதிக விபரங்கள் யாழ்.நகர்,நல்லூர், நெல்லியடி,சாவகச்சேரி, கிளிநொச்சி கிளைகளில்.
#9, குமார வீதி, நல்லூர் 021 2229191
CSC-ASIAN COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் 2G ஸ்ரான்லி வீதி, 021-2225677
நெல்லியடி கொடிகாமம் வீதி, 021-2262399
சாவகச்சேரி கட்டுக்காணி வீதி, 021-2270267
கிளிநொச்சி A9 வீதி, ஆனந்தபுரம், 021-228[illegible]

# அமைதியும் நிறைவும்



மனிதருள் மனிதராக வாழ்ந்து உயர்பேற்றை அடைபவர்களின் அறுபடை மூலாதாரமாக சமுதாயச்சிற்பிகள் காணப்படுகின்றனர். இச்சமுதாய சிற்பிகளின் அணியில் அமரர் அ.தற்பரானந்தன் அவர்களும் இணைந்துள்ளார். கந்தரோடையும் அமரர் தற்பரானந்தன் அவர்களும் பின்னிப்பிணைந்தவர்கள். தொலைதூரங்களில் இன்று வாழ்ந்து கொண்டிருப்பவர்களும் தனது பிறந்த ஊரான கந்தரோடையை அறிமுகம் செய்வதற்கு அமரர் தற்பரானந்தன் அவர்களின் பெயர் என்றும் துணையாக உள்ளது.

கந்தரோடையில் பிறந்து கந்தரோடையில் கல்விகற்று யா/ கந்தரோடை தமிழ்க்கந்தையா வித்தியாசாலையில் தலைமை ஆசிரியராக (அதிபர்) நீண்டகாலம் அணிசெய்து இப்பாடசாலையின் மூலம் பல்லாயிரக்கணக்கான நல்மாணாக்கர்களை உருவாக்கி சமுதாயத்தை வளம்படுத்தியதுடன் யா/ ஸ்கந்தவரோதயாக்கல்லூரியில் பிரதி அதிபராகக் க்டமைசெய்து தொடர்ந்து சங்கானை, உடுவில் ஆகிய கல்விக்கோட்டங்களில் கோட்டக்கல்விப் பணிப்பாளராக சேவைசெய்து ஓய்வுபெற்றுள்ள இலங்கை கல்வி நிர்வாகசேவை அதிகாரியாக காணப்படுபவர் அமரர் அவர்கள். அன்னாரது ஓய்வுக்காலங்களிலும் தாய் தந்தை இழந்த பிள்ளைகளுக்கு அன்பு வழிகாட்டியாக இருந்து சேவை செய்துள்ளார்.

ஆரம்பக்கல்வி தொடக்கம் இறைவழிபாடு, ஆலயத்தொண்டு, கடவுள் நம்பிக்கை, அதன்மூலம் சமூகமுன்னேற்றம், அறவாழ்க்கை என்பவற்றை முன்மாதிரியாக வாழ்ந்து காட்டிய பெருந்தகையாளர். இன்று பல்லாயிரக்கணக்கான பெரியார்கள் உள்ளத்திலும் விசுவாசமான சிந்தனைகள் மூலம் தனது சேவைகளைச் செய்துள்ளார்.

தனது சிறந்த இலட்சியத்தை அடைவதற்கு அயராது அல்லும் பகலும் உழைத்தல்வேண்டும் என்பதனை தனது வாழ்வில் வாழ்ந்து புகட்டியுள்ளார். அமரர் தற்பரானந்தன் அவர்களின் உடல் மட்டும் மறைந்தாலும் அவரின் சிந்தனைகள், வாழ்க்கைப்பயிற்சிகள், சமுதாய வழிகாட்டல்கள் எமக்கு அமைதியையும் நிறைவையும் வழங்குபனவாக உள்ளன. நான் அவரிடம் மாணவனாக இருந்தகாலத்திலும் அவரின் வழிப்படுத்தலின்கீழ் சமுதாய அங்கத்தவனாக இருந்தகாலத்திலும் அதிக நற்பயிற்சிகளை அடைந்துள்ளேன்.

இன்றைய எனது பணியில் பல உயர்வுகள் கிடைப்பதற்கு அமரர் தற்பரானந்தன் அவர்களின் கணிப்பும் பயிற்சி முறைகளும் என்னுடன் இணைந்து இயங்குவது பெரும் ஆறுதல் தருவதாக உள்ளது. அன்னார் முன்வைத்த வாழ்க்கை அனுபவங்களை இறைபாதையாக முன்னெடுத்து வாழ்வோமாக.

திரு.க.ஹரிஹரசக்தி
(ஆசிரிய கல்வியியலாளர்), விரிவுரையாளர்,
வவுனியா தேசிய கல்வியியற்கல்லூரி (333)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானியத்தை வாங்கும் முன் பையைத் தயாராக வைத்திருப்பவன் புத்திசாலி.

-பர்ரோஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# பாடசாலை மாணவர்கள் மீது கண்டிப்பாக இருங்கள்!

மேலைத்தேய நடைமுறைகள் எங்கள் கல்வி முறைமைக்குள்நுழைந்துகொண்டதன் விளைவாக மேலைத்தேய கலாசாரத்துள் எங்கள் மாணவச் செல்வங்கள் வீழ்ந்துபோகும் பரிதாபத்தில் உள்ளனர்.

மாணவர்களைத் தண்டித்தல் தண்டனைக்குரிய குற்றம் என்ற ச்ட்டம் எப்போது நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டதோ, அன்றிலிருந்து எங்கள் மாணவர்களை வழிப்படுத்தும் கடமையை ஆசிரியர்கள் கைவிட்டனர்.

வகுப்பறைக்குள் சென்றால் கற்பிப்பதுடன் எங்கள் கடமையை முடித்துக் கொள்ள வேண்டும்.

மாணவர் ஒழுக்கம், அவர்களைக் கட்டுப்படுத்துதல் ஆகிய விடயங்கள் வில்லங்கத்தை விலைக்கு வேண்டுவதாகும் என்ற மனநிலையில், ஆசிரியர்கள் ஒதுங்கிவிட்டனர்.

பாடசாலையை முன்னேற்றுவோம் என்று களமிறங்கிய அதிபர்களுக்கும் சமூக ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை.

இதற்கு மேலாக கல்வி அதிகாரிகளுக்கு ஆசிரியர் இடமாற்றம் என்பது உயர் குருதி அழுத்தத்தை உச்சிக்குக் கொண்டுபோய்விட்டது.

கூடவே தொழிற்சங்கங்களின் கொடிபிடிப்புகள். ஐயா! அறுபது வயது எப்போது வரும் என்று நாட்களை எண்ண வைக்கிறது.

நிலைமை இதுவாக இருக்கையில் நாளைய தினம் இந்த ஆண்டின் மூன்றாம் தவணைக்காக பாடசாலைகள் ஆரம்பமாகின்றன.

மாணவர்களின் கல்விச் செயற்பாடு தொடர்பில் அதிகூடிய கவனம் செலுத்தும் நோக்கில் கல்வி அதிகாரிகள் ஒவ்வொரு பாடசாலையாகச் சென்று நிலைமைகளை சீராக்கப் பாடுபடுகின்றனர்.

அதிபர்களும், ஆசிரியர்களும் தங்களால் இயன்ற முயற்சிகளை எடுத்து வருகின்றனர்.

இவையெல்லாம் நடந்தாலும் மாணவர்களின் கற்றல்பேறு திருப்தியாக இல்லையென்பதை உணருகின்றபோது வேதனை தாளமுடியவில்லை.

இதற்கான காரணம் என்ன என்பதை அறிய வேண்டுமாயின் மாணவர்களின் வீட்டுச் சூழல் மற்றும் புறச்சூழல் காரணிகளை அறிவது அவசியமாகும்.

அத்தகையதொரு அறிதல் நடக்குமாயின் மாணவர்களில் பெரும்பாலானவர்கள் வீட்டில் இருந்து கற்காமல், கையடக்கத் தொலைபேசி உரையாடல் -இணையத்தளங்களில் நேரத்தைச் செலவிடல், போதாக்குறைக்கு மாணவர்கள் தொலைக்காட்சித் தொடர் நாடகத்தில் மூழ்கிப் போதல் என்ற நிலைமைகளை அறிய முடியும்.

எனவே எங்கள் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை பாதிக்கும் புறச்சூழல் காரணிகளுக்கு முடிவு கட்டாதவரை எத்தகைய முயற்சிகள் எடுத்தாலும் அவற்றின் விளைவு மத்திமமாகவே இருக்கும்.

ஆக, எங்கள் பாடசாலை மாணவர்கள் மீது சகலரும் கண்டிப்பாக இருக்க வேண்டும்.

இதற்காக ஒரு மாநாட்டைக் கூட்டி முடிவெடுத்தாலும் தகும்.

# இலவச தொழிற்பயிற்சி கற்கை நெறிகள் ஆரம்பம்

(முல்லைத்தீவு)

முல்லை.மாவட்டத்தில் தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் (நைற்றா) பலதரப்பட்ட தொழிற்பயிற்சி கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் ஞா. தே.ரத்தினகுமார் அறிவித்துள்ளார்.

இதற்கமைய முள்ளியவளை பிரதேசத்தில் டீசல் இயந்திர பொறிவலர், பெற்றோல் இயந்திர பொறிவலர், முச்சக்கரவண்டி பொறிவலர், மோட்டார் வண்டி பொறிவலர், தன்னியக்க வாகன நிறந்தீட்டுநர், தன்னியக்க வாகன தகர வேலையாள், உருக்கிணைப்பாளர், வீட்டு மின்னிணைப்பாளர் போன்ற தொழிற்பயிற்சி நெறிகளும், துணுக்காய் பிரதேசத்தில் வீட்டுமின்னிணைப்பாளர் பயிற்சி நெறியுமே ஆரம்பிக்கப் படவுள்ளன.

இப்பயிற்சி நெறிகளுக்கே ஆர்வமுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இப்பயிற்சிநெறியின் நிறைவில் என் வி. கியூ- 3 சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இப்பயிற்சிநெறி தொடர்பான மேலதிக தகவல்களுக்கு தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை (NAITA), மாங்குளம் வீதி, முள்ளியவளை என்ற முகவரியுடனோ அல்லது தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார Äç Ã (NAITA), மாங்குளம் வீதி, துணுக்காய் என்ற முகவரியிலோ அமைந்துள்ள எமது அலுவலகங்களுடன் நேரிலோ அல்லது 0714553696, 02137 34849 என்ற தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொள்ள முடியுமெனவும் அறிவித்துள்ளார். (அ-9)

## தமிழக மீனவர்கள் 28பேர் கைது


தமிழக மீனவர்கள் 28பேரை இலங்கைக் கடற்படையினர் பிடித்துச் சென்றுள்ளனர். கச்சதீவு அருகே இவர்கள் மீன்பிடித்துக்கொண்டிருந்த போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர் இவர்களைச் சுற்றிவளைத்து படகுகளுடன் கைது செய்து கொண்டு சென்றதாக தெரியவந்துள்ளது.

அடுத்தடுத்து தொடர்ந்து இலங்கைக் கடற்படையினர் தமிழக மீனவர்களை பிடித்துச் செல்வதும் தமிழகத் தலைவர்கள் மத்திய அரசுக்கு கோரிக்கை விடுப்பதும் இனி இதுபோல் நடக்காமல் பார்த்துக்கொள்ளப்படும் என்றும் இலங்கை அரசைக் கண்டிக்கிறோம் என்றும் மத்திய அரசு தரப்பில் வாக்குறுதி அளிப்பதும் தொடர்கதையாகவே நிகழ்ந்துவருவதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். (அ-2)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### கண்டோர்க்குங் குறையுண்டோ

ஆயுநான் மறைதேடி யறியா வுன்னை
யார்றிவா ரரும்பொன்னே மணியே முத்தே
மாயவுடலுண்மையென மதித்து வாடி
மயங்காம லடியேனை நல்லூர் தன்னில்
தோயுமருட் குருவாகிச் சொரூபங் காட்டிச்
சுகம் பெறவே யிருத்தி வைத்தா யினியெனக்கு
வாயுமுண்டோ வணங்குவதற்கு வழிவே றுண்டோ
வள்ளலே யுள்ளதைநீ வழுத்துவாயே



## நமது வெளிவேடத்தைக் களைந்து

# உதட்டாலும் உள்ளத்தாலும் இணைந்து இறைவனைப் புகழ் பாடுவோம்

நம்முடைய வழிபாடு, இறைப் பற்றுப் பற்றிச் சற்று ஆய்வு செய்ய இன்றைய ஞாயிறு அழைப்பு விடுக்கிறது. பலதடவைகள் நாம் இறைவனை மேலோட்டமாக வழிபட்டிருக்கின்றோம். இதுதான் உதட்டால் செய்யும் வழிபாடு. இம்மக்கள் உதட்டினால் என்னைப்போற்றுகின்றனர். இவர்கள் உள்ளமோ என்னைவிட்டு வெகுதொலைவில் இருக்கிறது என்று எசாயா வழியாக இறைவன் முன்

## பரமபிதா காட்டிய பாதை

அறிவித்ததை இயேசு யூதர்களுக்கு மீண்டும் நினைவுபடுத்துவதை இன்றைய நற்செய்தி வாசகம் நமக்கு எடுத்துரைக்கிறது. தம் காலத்தில் வாழ்ந்த யூதர்களிடம் இருந்த வழிபாட்டு, ஆன்மீக முரண்பாடுகளை இயேசு இதன்மூலம் சுட்டிக்காட்டுகிறார்.

ஆன்மீகத்தைப் பல வழிகளில் வரையறை செய்யலாம். முரண்பாடற்ற வாழ்வு என்பது அவற்றுள் ஒன்று. யாரெல்லாம் தங்கள் வாழ்விலும் பேச்சிலும் முரண்பாடற்று வாழ்கிறார்களோ, அவர்களெல்லாம் சிறந்த வகையில் தங்கள் ஆன்மீகத்தை வாழ்கின்றனர் என்று சொல்லலாம். செபம், வழிபாடு, இறைவார்த்தை இவற்றில் அதிக ஆர்வம் காட்டிவிட்டு, அதேவேளையில் வாழ்வில் நேர்மையற்ற தன்மை, பணிகளில் குறைபாடு, உறவுகளில் போலித்தனம் கொண்டவர்களாக வாழ்ந்தால் எசாயா குறிப்பிடும் கூட்டத்தில் நாமும் சேர்ந்து விடுவோம்.

ஒரு நிறுவனத்தில் புதிதாக வேலைக்குச் சேர்ந்த இளைஞனிடம் அதிகாரி சொன்னார். இங்கு இரண்டு முக்கியமான விதிகள் உள்ளன. முதலில் 2ஆவது விதியைச் சொல்கிறேன். தூய்மை என்பது இங்கு மிக முக்கியம். பின்னர் அவனிடம் நீ இங்கு உள்ளே நுழையும்போது உன் கால்களை மிதியடியில் தேய்த்துத் துடைத்துக்கொண்டு வந்தாயா? என்று கேட்டார். அவன் ஆம் நிச்சயமாக என்றான். நல்லது என்று சொன்ன அவர் தொடர்ந்தார்: இங்குள்ள முதலாவது முக்கிய விதி உண்மை பேசுதலாகும். ஆனால் இங்கே மிதியடியே கிடையாது என்றார். வெளித்தூய்மையை மட்டுமே நாம போற்றினால் நம்மிடம் அகத்தூய்மை இல்லாதுபோகும். அகத்தூய்மை இல்லாத தூய்மை, தூய்மையேயில்லை. அப்படியானால் நம்மிடம் உண்மையே இல்லை.

அப்போது நம்முடைய வழிபாடு உதட்டினால் மட்டுமே கடவுளைப் போற்றுவதாக அமைந்துவிடும். சொற்களால் கடவுளைப் போற்றிவிட்டு, செயல்களால் அவரைப்பழித்தால் அதுவும் ஒரு பெரிய முரண்பாடாகிறது. இயேசு வாழ்ந்த காலத்தில் பரிசேயர் யூதர்களின் வெளிவேடத்தை நாம் பல தடவை பார்த்திருக்கின்றோம். ஆனால் இயேசுவோடு மூன்று ஆண்டுகள் பயிற்சி பெற்று அவரது அன்பை அருகிலிருந்து சுவைத்த யூதாஸ் இயேசு நம்பிக்கை வைப்பதை நிறுத்திய பின்னரும் அவரைத் தொடர்ந்து பின் செல்வதற்கு எடுத்த தீர்மானத்தில் வெளிப்படுவது வெளிவேடமே, நேர்மைக்குறைவே. இயேசுவின் பன்னிரு திருத்தூதர்களில் ஒருவரான யூதாஸின் போலித்தனம் இங்கு வெளிவேடமாகிறது.

இயேசு விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த உணவு நானே என்று தன்னை அறிவித்த போது, இதை ஏற்றுக் கொள்வது மிகக்கடினம் என்று சொல்லி அவரைப் பின் சென்றவர்களில் பலர் அவரை விட்டு விலகினர். அன்று முதல் அவர்கள் அவரோடு சேர்ந்து செல்லவில்லை. அப்போது இயேசு பன்னிருசீடரிடம் நீங்களும் போய்விட நினைக்கிறீர்களா என்று கேட்டார். அதற்கு புனித பேதுரு, ஆண்டவரே நாங்கள் யாரிடம் போவோம்? நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன என உண்மையாக தன் உள்ளக்கிடக்கையை உதட்டினால் உரைத்தார்.



ஆனால் யூதாஸ் விதிவிலக்காக இருந்தார். யூதாஸ் நேர்மையாளராய் இருந்திருந்தால், வெளிவேடமற்றவனாக இருந்திருந்தால், அவனும் இயேசுவை விட்டு விலகிச் சென்றிருக்க வேண்டும். ஆனால் அவர் இயேசுவோடு இருக்கவே முடிவு செய்தார். இது, யூதாஸ் இயேசு மீது கொண்டிருந்த பற்றுறுதியாலோ அல்லது அன்பாலோ அல்ல. மாறாக தனது போதகர் மீது பழிவாங்கும் இரகசிய ஆசையாலே இயேசுவோடு இருந்தார். இது வெளிவேடமே. இறுதியில் யூதாஸ் இயேசுவை விட்டு இறந்து போனான்.

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

வெளிவேடம் எம்மை அழிவிற்கே இட்டுச் செல்லும். வெள்ளை உள்ளம் இறைவன்பால் எம்மை இட்டுச்செல்லும். யூதாஸ் உள்ளத்தால் உண்மையாகவே இறைபற்றற்றவனாகவே இருந்தான். புனித பேதுரு வெள்ளை உள்ளம் கொண்டிருந்தார். இயேசுவில் வாழ்வடைந்தார். எனவே புனித பேதுரு செய்தது போல நாமும் இயேசுவில் பற்றுறுதி கொண்டு உள்ளத்தில் வெளிவேடமற்று வாழ்வோம். இயேசுவோடும் அனைத்து மக்களோடும் எப்போதும் நேர்மையாய் வாழ உறுதிபூணுவோம்.

இன்று எம் தடுமாறும் வாழ்க்கையிலே தறிகெட்டலைந்து தடுக்கிவீழ்ந்தாலும் நாம் வெளிவேடத்துடன் வாழாது இறைவனே எம்வாழ்வினில் ஆணிவேராய் ஆழப்பதிந்திருக்கிறார். எனவே, நமது வாழ்வு இறைவனுக்கு ஏற்றதாக அமையவேண்டும். விழிப்பாய் இருப்போம். நம் உதடுகளும் நம் உள்ளமும் இணைந்தே இறை புகழ் பாடட்டும். நம் வாழ்வும் வழிபாடும் முரணின்றி அமையட்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிநேகபூர்வ 20-20 கிரிக்கெட் போட்டி: ஸ்ரான்லி வி.க. வெற்றி

ஸ்ரான்லி விளையாட்டுக் கழகத்திற்கும் அரசடி றெஜின்போ விளையாட்டுக் கழகத்திற்கும் இடையிலான சிநேகபூர்வமான இருபது- இருபது கிரிக்கெட் போட்டியில் ஸ்ரான்லி விளையாட்டுக்கழகம் 12 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

ஸ்ரான்லி விளையாட்டுக் கழகத்திற்கும் அரசடி றெஜின்போ விளையாட்டுக் கழகத்திற்கும் இடையிலான சிநேகபூர்வ இருபது- இருபது கிரிக்கெட் போட்டி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு ஸ்ரான்லிக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம் நிர்ணயிக்கப்பட்ட இருபது ஓவர்களில் 130 ஓட்டங்களை எடுத்தது.



அதிகபட்சமாக அவ் அணி சார்பாக ராஜ் 26 ஓட்டங்களையும் தர்சன் 21 ஓட்டங்களையும் கண்ணாராஜ் 16 ஓட்டங்களையும் கலைச்செல்வம் 16 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் றெஜின்போ விளையாட்டுக் கழகம் சார்பாக கண்ணா 3 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டினையும் கோபினன் 4 ஓவர்கள் பந்து வீசி ·24 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

131 ஓட்டத்தினை வெற்றி இலக்காக கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய றெஜின்போ விளையாட்டுக்கழகம் 118 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது. துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக டர்வின் 28 ஓட்டத்தினையும் கோபினன் 22 ஓட்டத்தினையும் காண்டீபன் 20 ஓட்டத்தினையும் பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம் சார்பாக உதயா 4 ஓவர்கள் பந்து வீசி 28 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டினையும் கலா 4 ஓவர்கள் பந்து வீசி 16 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டினையும் ரஜிப் 4 ஓவர்கள் பந்து வீசி 17 ஓட்டங்களுக்கு ஒருவிக்கெட்டினையும் வீழ்த்தினர்.

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்கவும்

(வேலணை)

அளவெட்டி மத்திய விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியில் மாபெரும் கிரிக்கெட் தொடர் நடத்தவுள்ளது.

இதற்காக அனைத்து கழகங்களையும் இம் மாதம் 5 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது. பதிவுகளை மேற்கொள்வதற்கு 077 2846736, 077 3450657 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கிரிக்கெட் போட்டியில் யாழ்.அணி வெற்றி

(யாழ்ப்பாணம்)

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்டு வரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்குகொண்ட முதலாவது போட்டியில் யாழ்.மாவட்ட கிரிக்கெட் அணி முதல் வெற்றியை பதிவு செய்தது.

நுவரெலியாவில் உள்ள பொது மைதானத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற போட்டியில் ஹம்பகா மாவட்ட கிரிக்கெட் அணியை எதிர்கொண்டது யாழ். மாவட்ட அணி.

முதலில் துடுப்பெடுத்தாடிய நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களில் யாழ்.மாவட்ட அணி 47 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஹம்பகா மாவட்ட அணியால் 43 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது.

இதன் அடிப்படையில் யாழ். மாவட்ட அணி 4 ஓட்டங்களால் தனது முதல் வெற்றியை பதிவு செய்தது.

இந்தக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் அரச திணைக்களங்களில் பணிபுரியும் அதிகாரிகளை உள்ளடக்கிய கிரிக்கெட் அணிகள் போட்டியில் பங்குபற்றுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (6)




## காலிறுதியாட்டங்கள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆதரவில் விளைாட்டுக்கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பருத்தித்துறை லீக்கிற்கு உட்பட்ட கழகங்கள் மோதவுள்ளன.


இதில் கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்றையதினம் நடைபெறும் காலிறுதி ஆட்டத்தில் சென்பீற்றர்ஸ் அணியை எதிர்த்து சென்சேவியர் அணி மோதவுள்ளது.

அடுத்த காலிறுதி ஆட்டத்தில் மனோகரா அணியை எதிர்த்து ஆதிசக்தி அணி மோதவுள்ளது. (3)









மாலுசந்தி மைக்கல் விளையாட்டு கழகத்தின் விளையாட்டு விழாவின் இறுதி நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணிக்கு கழக மைதானத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செ. ஸ்ரீநிவாசன் உட்பட விருந்தினர்கள் பாண்ட் வாத்தியத்துடன் அழைத்து வரப்படுவதனையும் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலர் எஸ்.சிவசிறி மங்கல விளக்கேற்றுவதனையும் [illegible] நிகழ்வு இடம்பெறுவதனையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

SRI LANKA PREMIER LEAGUE

# கிண்ணத்தை கைப்பற்றியது ஊவா




மஹேந்திரா பிறிமியர் லீக் தொடரின் இறுதிப் போட்டியில் ஊவா நெக்ஸ்ட் டக் வோர்த் லூயிஸ் முறையில் 19 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

ஸ்ரீலங்கா பிறிமியர் லீக் தொடரின் இறுதிப்போட்டிகொழும்பு ஆர்.பிரேம தாச மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இப் போட்டியில் ஊவா நெக்ஸ்ட் மற்றும் நகனஹிர நாகாஸ் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்றநகனஹிரநாகாஸ் அணித் தலைவர் அஞ்சலோ மத்யூஸ் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதனையடுத்து நகனஹிர நாகாஸ் அணிக்கு ஆரம்பத்தை பெற்றுக் கொடுக்க இம்ரான் நசீர், அஹமட் செஹ்சாட் ஆகியோர் களம் கண்டனர்.

நாகாஸ் அணி 4.2 ஓவர்களில் 28 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது தனது முதல் விக்கெட்டை பறிகொடுத்தது. ஆரம்ப வீரர் செஹ்சாட் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

சிறிது நேரத்தில் இரண்டாவது விக்கெட்டும் இழக்கப்பட்டது. அணியின் மற்றொரு ஆரம்ப வீரரான இம்ரான் நசீர் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க நாகாஸ் அணியின் ஆரம்பமே தடுமாற்றத்திற்குள்ளானது.

இதனையடுத்து டெரவிஸ் பிரட் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இதன்போது நாகாஸ் அணி 41 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்து தடுமாறியது. இதன்போது பலத்த கோஷங்களுக்கு மத்தியில் களம்கண்ட மத்யூஸ், சம்பத்துடன் இணை சேர்ந்தார்.

மத்யூஸ் 1, சம்பத் 4 ஓட்டங்களையும் பெற்றிருந்தபோது மழை குறுக்கிட்டது. இந்நேரத்தில் நாகாஸ் 9.1 ஓவர்களில் 47 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதனையடுத்து போட்டி சுமார் ஒரு மணித்தியாலம் தாமதமாக ஆரம்பிக்கப்பட்டதோடு 15 ஓவர்களாக மட்டுப்படுத்தப்பட்ட போட்டியாக ஆரம்பமானது.

இதன்போது நாகாஸ் அணியின் ஓட்ட எண்ணிக்கை மிகக் குறைவாக காணப்பட்டது.

எனினும் மத்யூஸ் அதிரடியில் மிரட்ட அரங்கமே களை கட்டியது.

மத்யூஸ் 27 பந்துகளில் 8 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 73 ஓட்டங்களைப் பெற்றார்.

ஊவா அணியின் பந்துவீச்சில் மெக்டொனால்ட் 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இதனையடுத்து 15 ஓவர்களில் 137 என்ற வெற்றி இலக்கை நோக்கி ஊவா அணி




துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கும்போது மீண்டும் மழை குறுக்கிட்டது. இதன்போது ஊவா அணி 5.1 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 63 ஓட்டங்களை பெற்றிருந்தது.

இதனையடுத்து டக்வோர்த் லூயிஸ் முறைப்படி 5.1 ஓவர்களில் ஊவா 45 ஓட்டங்களைப் பெற வேண்டும் என அறிவிக்கப்பட்டபோதும் ஊவா அணி ஏற்கெனவே 63 ஓட்டங்களைப் பெற்றிருந்தமையால் ஊவா அணிக்கு கிண்ணம் உரித்தானது.

ஊவா அணியின் துடுப்பாட்டத்தில் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி அணியின் வெற்றி வழிவகுத்த டில்சான் முனவீர 5 சிக்ஸர்கள், 2 பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காமல் 44 ஓட்டங்களைப் பெற்றார்.

நாகாஸ் அணியின் பந்துவீச்சில் மென்டிஸ் ஒரு விக்கெட்டை கைப்பற்றினார்.

இப் போட்டியின் ஆட்டநாயகனாக டில்சான் முனவீர தெரிவு செய்யப்பட்டதோடு தொடரின் ஆட்டநாயகனாக சமிந்த எரங்க தெரிவு செய்யப்பட்டார்.

போட்டியின் பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த திலின கண்டம்பி,

இப்போட்டியில் வெற்றி பெற்றமை மிகவும் சந்தோஷமாக உள்ளது. நாங்கள் சிறப்பாக விளையாடியிருந்தமையாலேயே கிண்ணத்தை கைப்பற்ற முடிந்தது. மேலும் இவ் வெற்றிக்கு டில்சான் முனவீரவின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. டில்சான் முனவீர எமது அணிக்கு மாத்திரம் அல்ல இலங்கை அணியின் எதிர் காலத்திற்கும் கிடைத்த மிகச் சிறந்த வீரர் ஆவார் என்றார்.

மேலும் மத்யூஸ் கருத்துத் தெரிவிக்கையில்,

தோல்வியடைந்தமை கவலையாகத்தான் உள்ளது. காலநிலை சீர்கேட்டால் துரதிர்ஷ்டவசமாக தோல்வியை சந்தித்துள்ளோம். இருப்பினும் இத்தொடர் எங்களுக்கு சிறந்த இளம் வீரர்களை பெற்றுக் கொடுத்துள்ளது என்றார்.

## என்.பி.எல்.பிறிமியர் லீக் இன்று ஆரம்பம்

நியூ ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் என்.பி.எல் பிறிமியர் லீக் இருபது-20 கிரிக்கெட் சுற்றுப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளன.

16 கழகங்கள் பங்குபற்றும் மேற்படி சுற்றுத் தொடரில்,

இன்று காலை 8.30 மணிக்கு சென்ரலைட்ஸ் அணியை எதிர்த்து கிறாஸ்கொப்பர்ஸ் அணியும்,

பிற்பகல் 1 மணிக்கு திருநெல்வேலி சி.சி. விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வட்டுக் கோட்டை ஓல்ட்கோல்ட்ஸ் அணியும் மோதவுள்ளன.

Sep 8 ஆம் திகதி யாழ் மாநகரில்
BCAS CAMPUS

BCAS வழங்கும் உயர்கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு

Seminar & Counseling 2012

- நவீன சர்வதேச தொழில் சந்தையில் உருவாகி வரும் புதிய வாய்ப்புகள்
- சர்வதேச உயர்கல்வித் தகைமைகளைப் பெறுவதற்கான பல்வேறு வழிமுறைகள்
- உயர்கல்விக்கான புலமைபரிசில் வாய்ப்புகள்
- மிக குறைந்த செலவில் குறுங்கால தொழிற்பயிற்சி மூலமான உயர்தொழில் வாய்ப்புகள்
- குறைந்த தகைமையுடன் பொறியியல் மற்றும் தொழிநுட்ப பட்டப்படிப்புக்களுக்கான இலகு வழிமுறைகள்
- **UK. Australia, Canada, USA** போன்ற நாடுகளுக்கான **Student Visa**க்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான வழிமுறைகளும் புதிய ஏனைய நடைமுறைகள் மற்றும் ஆலோசனைகளும்.

பெறுமதிமிக்க ஊக்குவிப்பு பரிசுகளுடன்.........



திகதி
2012-09-08 (சனிக்கிழமை)

நேரம்
காலை 10.00a.m - 02.00p.m

இடம்
Gnanams Hotel
301, Clock Tower Rd
(யாழ் போதனா வைத்தியசாலை பின்புறம்)

இது போன்ற பெறுமதிமிக்க ஆலோசனைகளோடு தனிப்பட்ட முறையில் மாணவர்களையும் பெற்றோர்களையும் சந்தித்து அனுபவம் மிக்க உயர்கல்வி ஆலோசகர்களால் வழிகாட்டல்கள் வழங்கப்படவுள்ளன.

மேலதிக விபரங்களுக்கு
0777 444 225
0777 286 877

(சு/921)

அனுமதி முற்றிலும் இலவசம்

British College of Applied Studies
• Colombo • Dehiwela • Kandy • Batticaloa • Doha - Qatar

மாணவர்கள் பெற்றோர்கள் ஆசிரியர்கள் அனைவரும் இவ்வறிவுரை பட்டறையில் கலந்து கொள்ள அன்புடன் அழைக்கப்படுகிறீர்கள்

www.bcas.lk

## யுத்த காலத்தில்...

சிறிய மற்றும் இலகு ரக ஆயுத பாவனை தொடர்பான ஐக்கிய நாடுகள் கூட்டத் தொடரில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் பின்னர் புலிகளின் ஆயுதக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான தகவல்கள் திரட்டப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்திலும் அதன் பின்னரும் தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்கப்பட்ட ஆயுதங்களின் மூலம், சர்வதேசத்தில் ஆயுதங்கள் எவ்வாறு மலிந்து கிடக்கின்றன என்பது தெளிவாக புலனாகியது.

எனவே சட்டவிரோத ஆயுதப் பயன்பாட்டை தடுத்து நிறுத்த அனைத்து நாடுகளும் இணைந்து செயற்பட வேண்டியது அவசியமானது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டு ரீதியில் ஆயுத பயன்பாட்டை ஒடுக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என சவேந்திர சில்வா மேலும் தெரிவித்தார். (எ-11)

## ஜனாதிபதி...

இலங்கை இராணுவத்தினருக்கு பயிற்சி அளிக்கக் கூடாது என்று தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சி தலைவர்களும் குரல் கொடுத்து வருகின்றனர். பிரதமரிடமும் முறையிட்டுள்ளனர்.

இந்த நிலையில் ஜனாதிபதி எதிர்வரும் 21 ஆம் திகதி இந்தியாவிற்கு செல்கிறார். அவர் மத்திய பிரதேசம் சாஞ்சியில் நடைபெற இருக்கும் புத்த பல்கலைக்கழக திறப்பு விழாவில் பங்கேற்கிறார்.

இந்த தகவலை நாடாளுமன்ற எதிர்க் கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ் டில்லியில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்திய வருகையை எதிர்த்து தமிழகத்தில் பல்வேறு அமைப்புகள் சார்பில் போராட்டம் நடத்தப்படும் என்று கூறப்படுகிறது. (எ-8)

## குற்றச் செயல்களுக்...

இந்தவிடயம் குறித்து ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவைக்கு சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கையொன்றை அனுப்பி வைத்துள்ளது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழு அறிக்கை பரிந்துரைகளை அமுல்படுத்துவது தொடர்பிலான அரசாங்கத்தின் தேசிய செயற்றிட்டம் திருப்திகரமாக அமையவில்லை என சுட்டிக்காட்டியுள்ளது.

உறுதிமொழிகளையும் வாக்குறுதிகளையும் ஏற்றுக் கொள்ளாது நியாயமான தீர்வுத் திட்டம் எட்டப்பட வேண்டும் என உறுப்பு நாடுகள் இலங்கையை வலியுறுத்த வேண்டும் என தெரிவித்துள்ளது.

சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல் தொடர்பில் பக்க சார்பற்ற விரிவான விசாரணை நடத்தி குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்பட வேண்டியது அவசியமானது என சர்வதேச மன்னிப்புச் சபை அறிவித்துள்ளது. (எ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Diploma in Travel & Tourism

Diploma in Hospitality & Hotel Management

Get International Qualification in Business Management / Accounting and Finance UK Qualification

English For Life

**Certificate in Spoken English**
ஆங்கில அறிவு இல்லாதோர் / Poor English Speaking ability மற்றும் ஆங்கிலம் சரளமாக பேச விரும்புவோர்க்கான கற்கை நெறி

**International Diploma in English**
TOEIC
(A1,B1,B2,C1)
தொழில் பெற இருப்பவர்கள் மற்றும் UK போன்ற வெளிநாடு செல்வோர்கான (Student / spouse visa) கற்கைநெறி

**Basic English**
ஆங்கில மொழியை ஆரம்பத்திலிருந்து கற்க விரும்புவோர் spoken / writing Reading skills

**IELTS**
General / Academic
Duration - 5 weeks
திறமை சித்தி பெறுவதற்கான விசேட கல்விச் சேவைகள்

**Diploma in Secretarial Studies**
நிறுவனங்களில் உடனடியாக வேலைவாய்ப்பு பெறுவதற்கான சிறப்பு கற்கைநெறி

**Learning Specialized Computing and IT Courses**
- Diploma in ICT
- Microsoft Office
- Graphic Designing
- Computerized Accounting
- Multimedia and Animation

மேலதிக தகவல்கள் : 0777172660

**International Knowledge Pool**
No.19, 3rd Floor,(People's Bank) Thanarajah Building, Stanely Road, Jaffna.

உடுப்பிட்டி : துவாலி லேன், உடுப்பிட்டி

நெல்லியடி : 181, யாழ் வீதி, நெல்லியடி. (Nation Trust Bank அருகாமை)

(சி-919)

Negombo Colombo Jaffna

**NEW SCIENCE COLLEGE**
வெங்கடேசன் வீதி, கன்னாதிட்டி - யாழ்ப்பாணம்

**2013 A/L DAY CLASS**

செவ்வாய், புதன், வியாழன் : 7.30 - 9.00 A.M

**COM. MATHS** திரு. பிரேம் நாத்

ஆரம்பம் :- 05.09.2012

**MODEL PAPER 3.00 P.M**

# சிறை அதிகாரிகளின் வற்புறுத்தலால் போராட்டத்தை கைவிட்டார் செந்தூரன்

(சென்னை)

பூந்தமல்லி சிறப்பு முகாமில் உள்ளவர்களை விடுவிக்க கோரி 26 நாட்கள் உண்ணா விரதம் இருந்து கைதான செந்தூரன், புழல் சிறை மருத்துவமனையில் நேற்று தனது உண்ணா விரதத்தை முடித்துக் கொண்டார்.

சிறைத்துறை அதிகாரிகளின் வற்புறுத்தலைத் தொடர்ந்து அவர் நேற்று காலை இளநீர் அருந்தியும் பின்னர் உணவு உட்கொண்டும் தனது உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



முன்னதாக பூந்த மல்லி சிறப்பு முகாமில் உள்ளவர்களை விடுவிக்கக் கோரி இலங்கை தமிழர் செந்தூரன் கடந்த 6ஆம் திகதி முதல் உண்ணாவிரதம் இருந்து வந்தார். அவரது நிலை கவலைக்கிடமானது.

இந் நிலையில் செந்தூரனுக்கு ஆதரவாகவும், அவரது உயிரைக் காப்பாற்றக் கோரியும் ம.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் தொடர் உண்ணா விரதப் போராட்டம் நடைபெற்று வந்தது.

நேற்று முன்தினம் நடைபெற்ற போராட்டத்தில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ பங்கேற்றார்.

இந் நிலையில், செந்தூரனை கைது செய்த பொலிஸார் தற்கொலைக்கு முயன்றதாக அவர் மீது வழக்குப்பதிவு செய்தனர்.

இதனையடுத்து பூந்தமல்லி நடுவர் நீ[illegible] மன்ற நீதிபதி முகமது பரூக்கின் வீட்டில் ஆஜர்[illegible]படுத்தப்பட்ட செந்தூரன், பின்னர் புழல் சிறை[illegible]யில் அடைக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் இலங்கையிலுள்ள செந்தூரனின் பாட்டி நேற்று மரணமடைந்ததாக தகவல் வெளியாகியுள்ளது. (எ-8)

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
BCHS
உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு
விசேட கட்டணக் கழிவு

**BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கிகானது**
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் இது G.C.E. (O/L) English இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
Duration : 2 Months

**Spoken English With Grammar - Quick Learning Course** (1 1/2 Month)
ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல், சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

**Diploma In English** (2 Month)
ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி, ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர் மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

**A1 Exm - Sponsor / Settlement Visa** மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
- சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

புதிய வகுப்புக்கள் Batch I - 10.9.2012 Batch II - 12.9.2012 Batch III - 15.9.2012

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**
No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Hot Line : 0777222422 0777585913, 0714299935, 0777730074
(சி-918)

மாபெரும் விசேட விலைக்கழிவு

**Jet D Express Courier Service**

விரைவு
பாதுகாப்பு
உத்தரவாதம்

உங்கள் உறவுகளுக்கு நீங்கள் அனுப்பும் பொருட்கள் 5 நாட்களில் சென்றடைய

| | | |
|---|---|---|
| France | Over5kg 1000/= | Over11kg 750/= |
| Germany | Over5kg 1100/= | Over 11kg 850/= |
| London | Over 5kg 1000/= | Over 11kg 750/= |
| Australia | Over 5kg 1100/= | Over 11g 850/= |
| Netharland | Over 5kg 1100/= | Over 11kg 850/= |
| Swiss | Over 5kg 1500/= | Over 11kg 950/= |
| Denmark | Over 5kg 1200/= | Over 11kg 850/= |

Note: 25kg மேற்பட்ட பெதிகளுக்கு விசேட கட்டண சலுகை உண்டு

மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு விசேட கட்டணச்சலுகையுடன் ஏனைய நாடுகளுக்கும் வழங்கப்படும்

Note : * கடலுணவு வகைகள் எல்லாவகையான பொருட்களும் அனுப்பிவைக்கப்படும் வெளிநாடுகளில் எவ்வித கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

இல 27, முதலாம் மாடி, நவீன சந்தை. [தனம்ரெக்ஸ் மேல்] யாழ்ப்பாணம்.
தொ.பே:- 021 221 9150, 0772187 301

No: 77E. Manning Place, Wellawatta, Colombo 06, T.P:- 0112363873 0776509909
(சி-920)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.09.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org